


Registered as a Newspaper

பக்கங்கள் 16+8

விலை ரூ. 60

# உதயன்

சுடர் : 39
கதிர் : 119

ஞாயிற்றுக்கிழமை
24 மார்ச் 2024

பங்குனி 11 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

வடக்கில்

# 70 வீதமான வன்புணர்வுகள் சிறுமிகளின் சம்மதத்தோடே!

## பொலிஸ் தரவுகளிலிருந்து அதிர்ச்சித் தகவல்

யாழ்ப்பாணம், மார்ச் 24

வடக்கு மாகாணத்தில் கடந்த ஆண்டு பொலிஸ் முறைப்பாடுகளின் பிரகாரம் பதிவான வன்புணர்வுகளில் 70 சதவீதமானவை பாதிக்கப்பட்ட சிறுமிகளின் சம்மதத்துடனேயே இடம்பெற்றுள்ளன என்ற அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

02

## சகோதரியின் கணவரால் சிறுமி துஷ்பிரயோகம்

முல்லைத்தீவு, மார்ச் 24

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவில், அக்காவின் கணவரால் துஷ்பிரயோகத்துக்குள்ளான 15 வயதுச் சிறுமி வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தந்தையின் பராமரிப்பில் சிறுமி வளர்ந்துள்ளார். சிறுமியின் அக்காவும் அவரது கணவரும் பிரிந்து வாழ்ந்து வருகின்றனர். இந்த நிலையில் 2023ஆம் ஆண்டு ஜூலை மாதம் சிறுமியின் வீட்டுக்கு வந்துள்ளார் அக்காவின் கணவர். சிறுமியை வேறு இடத்துக்கு அழைத்துச் சென்று குடும்பமாக இருவரும் வாழ்ந்துள்ளனர்.

02

## பாலுறவு வயதெல்லை குறைப்பு: சட்டத்திருத்தம் மீளாய்வுக்கு

### நீதி அமைச்சர் தகவல்



கொழும்பு, மார்ச் 24

பாலுறவுக்கான வயதெல்லையை 16 இலிருந்து 14 ஆகக் குறைத்து முன்வைக்கப்பட்டுள்ள சட்டத்திருத்தம் மீளாய்வுக்கு உட்படுத்தப்படும் என நீதி அமைச்சர் விஜயதாஸ நேற்றுத் தெரிவித்துள்ளார்.

1995ஆம் ஆண்டு தண்டனைச் சட்டக் கோவையில் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்துக்கு அமைய, 16 வயதுக்குட்பட்ட பெண்

02



## விசாரியுங்கள் மைத்திரியை!

### டிரான் அலஸ் உத்தரவு

கொழும்பு, மார்ச் 24

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்டுள்ள அறிவிப்பு

02

## மனந்திறக்க வேண்டும் மைத்திரிபால!

கொழும்பு, மார்ச் 24

நீதிமன்ற உத்தரவு வரும்வரை காத்திருக்காமல் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் தனக்குத் தெரிந்தவற்றை மைத்திரிபால சிறிசேன வெளிப்படுத்த வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். இப்படியான பாரதூரமான விடயத்தை மறைப்பது ஏற்புடையது அல்ல எனவும் மஹிந்த ராஜபக்ச கூறினார். (அ-ஒ-44)

## விபத்தில் காயமடைந்தவர் உயிரிழப்பு

சாவகச்சேரி, மார்ச் 24

இருவாரங்களுக்கு முன்னர் வீதி விபத்தில் சிக்கி, காயமடைந்தவர் நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.

கச்சாய் வீதியைச் சேர்ந்த க. கார்த்திகேசு (வயது-73) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கடந்த 8ஆம் திகதி சாவகச்சேரி, கச்சாய் வீதியில்

02

உரிய சிகிச்சை வழங்காமையால்

## 5 வயதுச் சிறுவன் சாவு

யாழ்ப்பாணம், மார்ச் 24

ஆஸ்துமாவுக்கு உரிய சிகிச்சை பெறாத சிறுவன் நேற்று அதிகாலை பரிதாபகரமாக உயிரிழந்துள்ளான்.

அராலி மத்தியைச் சேர்ந்த கிருபாகரன் சுலக்சன் (வயது -5) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான்.

ஆஸ்துமாவால் சிறுவன் கடந்த ஒருவார காலமாக அவதிப்பட்ட நிலையில் தனியார் மருத்துவமனையில் சேர்த்து பெற்றோர் மருந்து எடுத்துள்ளனர். ஆனாலும் அதைச் சிறுவனுக்கு வழங்கவில்லை. இந்த நிலையில்

02

## பொதுவேட்பாளர் விவகாரம்: பின்வாங்குகிறதா ரெலோ?

### மீண்டும் தலைவராகத் தெரிவான செல்வம் எம்.பி.யின் பேச்சில் மயக்கம்

வவுனியா, மார்ச் 24

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் சார்பில் பொது வேட்பாளரைக் களமிறக்கவேண்டும் என ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி தொடர்ச்சியாக வலியுறுத்திவரும்

02

கடற்படைப் புலனாய்வாளர்கள்

## கஞ்சாவுடன் கைது



யாழ்ப்பாணம், மார்ச் 24

ஒரு தொகை கஞ்சாவை விற்பனை செய்த கடற்படைப் புலனாய்வாளர்கள் இருவரையும் அவற்றைக் கொள்வனவு செய்த ஆண் ஒருவரையும் ஊர்காவற்றுறைப் பொலிஸார் நேற்று இரவு கைது செய்துள்ளதாக யாழ். மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் விசாந்த தெரிவித்தார். (அ-ஒ-26)

போதைப்பொருள் கடத்தல்?

## யாழ். - கொழும்பு பேருந்துகள்: புத்தளத்தில் கடும் சோதனை!

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த தனியார் சொகுசு பேருந்துகள் புத்தளத்தில் வைத்து நேற்றுமுன்தினம் நள்ளிரவு வழிமறிக்கப்பட்டு பொலிஸாரால் மோப்ப நாய் உதவியுடன் சல்லடைபோட்டு தீவிர சோதனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்திலிருந்து, தனியார் பயணிகள் சொகுசு பேருந்து மூலம் போதைப்பொருட்கள் கடத்தப்படுவதாகக் கிடைத்த

02

சஞ்சீவி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 70 வீதமான...

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாகப் பொலிஸ் திணைக்களத்திடம் கோரப்பட்ட தகவல்கள், வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஹிந்த குணரத்னவால் வழங்கப்பட்டுள்ளன. அதிலேயே மேற்படி விடயம் தெரியவந்துள்ளது. வடக்கில் 131 வன்புணர்வுச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸ் முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் 90 சம்பவங்கள் சிறுமிகளின் இணக்கத்துடன் இடம்பெற்றுள்ளன. 33 சம்பவங்கள் மாத்திரமே அவர்களின் இணக்கமில்லாது நடந்துள்ளன. இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடைய 143 சந்தேகநபர்கள் கைதாகியுள்ளனர். (அ-ஓ-5)

| பொலிஸ்பிரிவு | வன்புணர்வுகள் | 16 வயதுக்குட்பட்ட சிறுமிகளின் சம்மதத்துடன் | 16 வயதுக்குட்பட்ட சிறுமிகளின் சம்மதமில்லாமல் | கைதான சந்தேகநபர்கள் |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 25 | 24 | 01 | 26 |
| காங்கேசன்துறை | 22 | 20 | 02 | 23 |
| மன்னார் | 15 | 10 | 01 | 16 |
| வவுனியா | 18 | 08 | 09 | 16 |
| முல்லைத்தீவு | 29 | 15 | 14 | 35 |
| கிளிநொச்சி | 22 | 13 | 06 | 27 |

## பொதுவேட்பாளர்...

நிலையில், அந்தக் கூட்டணியின் பங்காளிக் கட்சியான ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் நேற்றுத் தெரிவித்த கருத்துகள், பொது வேட்பாளர் நிலைப்பாட்டிலிருந்து அந்தக் கட்சி பின்வாங்குவதான தோற்றப்பாட்டை ஏற்படுத்தியுள்ளது.

"பொதுவேட்பாளர் விடயத்தை நாம் சரியாகக் கையாளவேண்டும். ஒருவரைக் களமிறக்கி சொற்பவாக்குகளைப் பெறும் நிலை இருந்தால் ஒட்டுமொத்த தமிழினத்தின் மானமே போய்விடும். சரியான நெறிப்படுத்தலின் ஊடகவே அந்த விடயத்தைக் கையாளவேண்டும்" என அவர் நேற்றுக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) பொதுக்குழுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று இடம்பெற்றன. இதன்போது கட்சியின் தலைவராக மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவுசெய்யப்பட்டுள்ளதுடன் செயலாளராக கோவிந்தன் கருணாகரம் (ஜனா), தேசிய அமைப்பாளராக பிரசன்னா இந்திரகுமார், பொருளாளராக சுரேன் குருசாமி, நிர்வாகச் செயலாளராக விந்தன் கனகரத்தினமும், இளைஞரணி செயலாளராக செந்தில்நாதன் மயூரன் ஆகியோரும் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

அதன்பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், ஜனாதிபதித் தேர்தல் நடந்தால் அதில் போட்டியிடும் வேட்பாளர்கள் இனப்பிரச்சினை சார்ந்து தமிழ்தரப்புக்கு என்ன செய்யவேண்டும் என்பதை வெளிப்படையாகத் தெரிவிக்கவேண்டும். வெறுமனே கருத்துச்சொல்லிவிட்டு ஏமாற்றுகின்ற நிலையை இம்முறை மக்கள் ஏற்கமாட்டார்கள். அதற்கு உடந்தையாக நாங்களும் இருக்கமாட்டோம்.

நாளையதினம் (இன்று) எமது மாநாட்டில் வலுவான கோரிக்கையை முன்வைக்க இருக்கின்றோம். எங்களிடத்தில் ஒற்றுமை இல்லை என்று ஏளனப்படுத்தும் விமர்சனத்தைத் தொடர்ச்சியாக சந்திக்கின்றோம். அரசியல் கதிரைகளுக்காக வசனங்களை மாத்திரம் பேசிக் கொண்டிருப்பதில் பயனில்லை. எம்மைப் பொறுத்தவரை இனப்பிரச்சினை தீர்க்கப்படவேண்டுமாக இருந்தால் எமது மண்ணைக் காப்பாற்ற வேண்டுமாக இருந்தால் நாம் ஓர் அணியிலே இருக்க வேண்டும். அப்படியிருந்தாலே அரசாங்கம்எம்மைத்திரும்பிப்பார்க்கும்நிலைமை ஏற்படும். தென்னிலங்கை எங்களைப் பார்த்து அச்சப்படும். அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளத் தயாராக இருக்கின்றோம்.

எம்மைப் பொறுத்தவரையில் தமிழரசுக் கட்சியை நாம் ஒதுக்கிவிட முடியாது. பிரச்சினை தொடர்ந்து இருக்கின்றது. ஒற்றுமைக்குள் நாங்கள் கொண்டு வரவேண்டும். ஆனால் பொதுச்சின்னம் என்பதே எமது கருத்து. பொதுச்சின்னமாக குத்துவிளக்கு அமைந்திருக்கின்றது. அவர்களோடு பேசி பொதுச்சின்னத்தின் கீழ் அணிதிரள்வதற்கான முயற்சியை நிச்சயமாக நாங்கள் மேற்கொள்ளுவோம். தனிப்பட்ட கட்சியின் கீழ் எமது ஒற்றுமை இருக்காது - என்றார். (அ-ஓ-110)

## பாலுறவு...

தனது சொந்த விருப்பத்தின் பேரில் பாலுறவு கொண்டாலும், அது வன்புணர்வாகக் கருதப்படும். எனினும், நீதி அமைச்சரால் தண்டனைச் சட்டக் கோவைக்கு முன்மொழியப்பட்டுள்ள திருத்தம் மூலம் அந்த வயதெல்லை 14 வயதாகக் குறைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த் திருத்தத்தை உடன் நிறுத்துமாறு நாடாளுமன்றத்தின் பெண் உறுப்பினர்களின் ஒன்றியம் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவிடம் கோரிக்கை விடுத்திருந்தது.

இந்த நிலையில் நேற்று நிகழ்வொன்றில் பேசிய அமைச்சர், தண்டனை சட்டக்கோவைக்கு அமைவாக, 16 வயதுக்குட்பட்ட சிறுமிகளைத் துஷ்பிரயோகம் செய்தல் அல்லது பாலுறவுத் தொடர்புகளை வைத்திருந்த ஒருவருக்குத் தண்டனை வழங்கப்படும். எனினும், 14 முதல் 16 வயதுக்கு இடைப்பட்ட சிறுமிகள் தங்களின் விருப்பத்துடன் தொடர்புகளைப் பேணிய தகவல்கள் தொடர்ந்தும் பதிவாகி வருகின்றன. கடந்த சில வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளுக்கு அமைய, குற்றவியல் சட்டத்தை மறுசீரமைக்க அமைச்சுக்குப் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில், நீதிபதியால் தண்டனை உத்தரவைப் பிறப்பிக்கும் வகையில், தண்டனைக் கோவையில் மறுசீரமைப்புகளை மேற்கொள்ளுமாறு பரிந்துரைக்கப்பட்டது.

எனினும், சட்டவரைவு சமர்ப்பிக்கப்பட்டதும் அதனை இரத்துச் செய்யுமாறு சிவில் அமைப்புகளும் மகளிர் அமைப்புகள் சிலவும் கோரிக்கைகளை முன்வைத்துள்ளன. அத்தகைய பரிந்துரைக்க

மறுசீரமைப்புத் தொடர்பில் கலந்துரையாடலுக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளோம். கலந்துரையாடலுக்குப் பிறகு திருத்தம் அவசியமா, எவ்வாறான திருத்தம் மேற்கொள்ளப்படவேண்டும் என்பது தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளப்படும் - என்றார். (அ-ஓ-இ)

## யாழ். - ...

இரகசியத்தகவலையடுத்தே புத்தளத்தில் வைத்து பொலிஸார் மற்றும் போதை ஒழிப்புப் பிரிவினர் இணைந்து பேருந்துகளைத் திடீரென வழிமறித்து தீவிர சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், பருத்தித்துறை ஆகிய இடங்களில் இருந்து நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு கொழும்பு நோக்கி புறப்பட்ட தனியார் சொகுசு பேருந்துகள் புத்தளம் பகுதியில் வைத்து நள்ளிரவு நேரத்தில் திடீரென வழிமறிக்கப்பட்டு சல்லடைபோட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

பேருந்துக்குள் ஏறிய பொலிஸார் முதற்கட்ட சோதனைமேற்கொண்டதை அடுத்து சகல பயணிகளும் வரிசையாக இறக்கப்பட்டு அவர்கள் கைகளில் வைத்திருந்த பயணப்பை உள்ளிட்ட உடைமைகள் வீதி ஓரத்தில் விரிக்கப்பட்டிருந்த பாய்களில் அடுக்கிவைக்கப்பட்டன. பின்னர் மோப்ப நாய்கள் உதவியுடன் அவை தீவிர சோதனைக்குள்ளாக்கப்பட்டன.

அதனைத்தொடர்ந்து பேருந்தின் கீழ்தளத்தில் வைக்கப்பட்டிருந்த பொதிகளும் மோப்ப நாய்களின் உதவியுடன் தீவிரமாக சோதனைக்கு உள்ளாக்கப்பட்டதுடன் பேருந்தின் உள்பகுதியில் இருக்கைப் பகுதியும் மோப்ப நாய்களின் உதவியுடன்சோதனைக்குள்ளாக்கப்பட்டன. இதன்போது எதுவித போதைப் பொருட்களும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கவில்லை. (அ-ஓ-100)

## விசாரியுங்கள்...

தெற்கு அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், இது தொடர்பில் மைத்திரிபால சிறிசேன விசாரணைப் பொறிக்குள் சிக்கியுள்ளார்.

மைத்திரிபால சிறிசேனவின் மேற்படி கூற்று தொடர்பில் உடனடியாக விசாரணை நடத்துமாறு பொலிஸ்மா அதிபருக்கு, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் பணிப்புரை விடுத்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலை உண்மையாகவே நடத்தியவர்கள் யார் என்பது தனக்குத் தெரியும் எனவும், நீதிமன்றம் உத்தரவிட்டால் அதனை வெளிப்படுத்துவதற்குத் தயார் என்றும் மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம் கண்டியில் வைத்துத் தெரிவித்திருந்தார்.

அவரின் அறிவிப்பு தெற்கு அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைக் கைது செய்து விசாரணைகளை நடத்துமாறு கோரி, பல தரப்பினரும் குற்றப் புலனாய்வுப் பிரிவில் நேற்று முறைப்பாடு தாக்கல் செய்திருந்தனர்.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே மைத்திரி தொடர்பில் விசாரணை ஆரம்பமாகவுள்ளது. (அ-ஓ-44)

## விபத்தில்...

இடம்பெற்ற இறுதிக்கிரியைகளில் கலந்து கொள்வதற்காக சைக்கிளில் சென்ற வேளையில் எதிரே வந்த மோட்டார் சைக்கிள் வீதி வளைவில் மோதியது. தலையில் காயமடைந்து சுயநினைவை இழந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

அங்கும் சுயநினைவு திரும்பாததால் ஒருவாரத்தின் பின்னர் சாவகச்சேரி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். பின்னர் அங்கிருந்து சுயநினைவு திரும்பாத நிலையில் நான்கு தினங்களுக்கு முன்னர் வீட்டுக்குக் கொண்டு வரப்பட்டார். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரவு அவர் உயிரிழந்துள்ளார். (அ-ஓ-9)

## சகோதரியின்...

இதனையடுத்து சிறுமி கர்ப்பமாகியுள்ளார். அவர் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். 16 வயதுக்கு உட்பட்ட சிறுமியுடன் உறவில் ஈடுபட்ட அக்காவின் கணவரை கைது செய்வதற்கு புதுக்குடியிருப்புப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ-ஓ-19)

## 5 வயது...

நேற்று அதிகாலை சிறுவன் நோயால் துடித்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும் உயிரிழந்துள்ளான்.

இறப்பு விசாரணைகளைத் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிறேம்குமார் மேற்கொண்டார்.

பெற்றோர் சிறுவனுக்கு உரிய சிகிச்சையளித்திருந்தால் உயிரைக் காப்பாற்றியிருக்கமுடியும் என மருத்துவர்கள் தெரிவித்தனர். (அ-ஓ-5-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதித் தேர்தல்

# ராஜபக்சக்கள் போட்டியிட்டால் முற்றுமுழுதாக ஆதரிப்பேன்

## எஸ்.பி.திஸாநாயக்க தெரிவிப்பு



அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்சக்களில் ஒருவர் போட்டியிட்டால் அதற்கு முழு ஆதரவு வழங்குவேன் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பெரமுனவின் தலைமையகத்தில் அண்மையில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

'ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கட்சி பெயரிடும் வேட்பாளருக்கு ஆதரவாகச் செயற்படுவேன். அது ராஜபக்சக்களில் ஒருவராக இருந்தால்கூட எனக்குப் பரவாயில்லை, கட்சியின் முடிவுதான் முக்கியமானது. அரகலயவின் பின்னர் பூஜ்ஜியத்துக்கு வந்த பெரமுனவின் வாக்கு வங்கி தற்போது 35 வீதம்வரை அதிகரித்துள்ளது' - எனவும் எஸ்.பி.திஸாநாயக்க மேலும் தெரிவித்தார். (ம-44)

## சாவ. கடலேரி வற்றியதால் தொழில் இழந்த மீனவர்கள்

சாவகச்சேரி, மார்ச் 24

சாவகச்சேரி கடலேரி வற்றியுள்ளதால் அந்தப் பகுதில் கடற்றொழிலில் ஈடுபடும் நூற்றுக்கணக்கானோர் தொழில்களை இழந்துள்ளனர்.

கடலேரி வற்றி பல இடங்களில் மணல் திட்டுக்கள் காணப்படுகின்றமையால் படகுகள் செலுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்று கடற்றொழிலாளர் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-9)

## பொதுச்சபைக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்

அரியாலை, மார்ச் 24

வெட்டுக்குளம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானத்தின் வருடாந்த பொதுச்சபைக் கூட்டம் மற்றும் புதிய நிர்வாகசபைத் தெரிவு என்பன ஆலய மண்டபத்தில் எதிர்வரும் 31ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆலயத்தின் பொதுச்சபை உறுப்பினர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு நிர்வாகத்தின் செயலாளர் ம.சதீஷ் அறிவித்துள்ளார். (ப)

## விக்ரோறி மகளிர் அணி வெற்றி

மூளாய் விக்ரோறி கழக மகளிர் துடுப்பாட்ட அணிக்கும் பவுண்டேஷன் ஒவ் குட்நெஸ் கழக மகளிர் துடுப்பாட்ட அணிக்கும் இடையிலான துடுப்பாட்டப்போட்டி, சீனி கம மைதானத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

மூளாய் விக்ரோறி மகளிர் அணியானது 10 இலக்குகள் வித்தியாசத்தில் அபார வெற்றியைப் பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பவுண்டேஷன் ஒவ் குட்நெஸ் மகளிர் அணி அனைத்து இலக்குகளையும் இழந்து, 19.1 ஓவரில் 63 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

திவியாஞ்சலியின் அபாரமான 36 ஓட்டங்களுடனும் மலீஷாவின் பெறுமதியான 16 ஓட்டங்களுடனும் மூளாய் விக்ரோறி மகளிர் அணி வெறுமனே 8.3 ஓவர்களில் இலக்கு இழப்பு ஏதும் இன்றி 64 ஓட்டங்களைப் பெற்று வெற்றியை சிரமமின்றி அடைந்தது. (ப)

### சேவை அகவை நாள் நல்வாழ்த்துக்கள்



Best Wishes

**திருமதி ஜெயதேவி சிறிஸ்கந்தராசா**

**B.A Spe.Trd (Primary) Dip in Edu (merit)**
**P.G.D.E (MERIT)** *SLTS - I*

அகில இலங்கை சமாதான நீதவான் (J.P)
அதிபர்: யா/ வேலணை கிழக்கு மகா வித்தியாலயம்
ஆரம்பக் கல்வி - யா/ சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயம்
இடைநிலைக் கல்வி - யா/ நாரந்தனை றோ.க.மகா வித்தியாலயம்
உயர்தரக் கல்வி - யா/ வேலணை மத்திய கல்லூரி
முதல் நியமனம் - 1988.08.17

| | |
|---|---|
| யா/ நாரந்தனை றோ.க.மகா.வி | ஆசிரியர் 17.08.1988 - 31.08.1995 |
| யா/ ஊர்காவற்றுறை றோ.க.ஆண்கள் பாடசாலை | ஆசிரியர் 01.09.1995 - 02.06.1996 |
| யா/ புனித அந்தோனியார் கல்லூரி | ஆசிரியர் 03.06.1996 - 01.05.1997 |
| யா/ நாரந்தனை றோ.க.மகா.வி | ஆசிரியர் 02.05.1997 - 19.01.2006 |
| யா/ வேலணை மத்திய கல்லூரி | ஆசிரியர் 20.01.2006 - 06.01.2009 |
| யா/ தம்பாட்டி அ.த.க.வி | ஆசிரியர் 07.01.2009 - 26.01.2009 |
| யா/ தம்பாட்டி அ.த.க.வி | பதிலதிபர் 27.01.2009 - 27.06.2010 |
| யா/ வேலணை மேற்கு நடராஜ.வி | ஆசிரியர் 28.06.2010 - 12.05.2011 |
| யா/ வேலணை கிழக்கு மகா.வி | ஆசிரியர் 13.05.2011 - 25.05.2011 |
| யா/ வேலணை கிழக்கு மகா.வி | பதிலதிபர் 26.05.2011 - 14.03.2024 |

அதிபர் சேவையில் சிறப்புப்பெற்று 22.03.2024 ஓய்வு பெறும் தங்களின் ஓய்வு காலம் சிறப்புற வாழ்த்தி சமய சமூக பணியில் ஈடுபட வேண்டி கர்ணந்தோட்டக் கந்தனைப் பிரார்த்திக்கின்றோம்.

நாரந்தனை
24.03.2024

வாழ்த்துவோர்:
உறவினர்கள்

(CS 28336) S-1

### விற்பனைக்கு
A/C குளிரூட்டி, றொபின் நீர் இறைக்கும் இயந்திரம்
**077 236 7848**

### பணிப்பெண் தேவை
யாழ் திருநெல்வேலியில் உள்ள வீடொன்றில் வீட்டுவேலை செய்வதற்கு தகுந்த பணிப்பெண் தேவை.
**T.P: 077 191 9859**

### காணி விற்பனை
யாழ். பேருந்து நிலையத்திற்கு அண்மையில் 2 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.
**077 723 2535**

### மாபிள் வேலை
உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும். ஒரு சதுர அடி - 100.00 ரூபாய்
தொடர்பு:- **077 334 1281**

### விற்பனைக்கு
ஓடு, கதவுகள், திராந்திகள், கட்டட இடிபாடுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.
**077 723 2535**

### வீடு வாடகைக்கு உண்டு
சங்கானை பிரதான வீதியில் வீடு வாடகைக்கு உண்டு (சிறிய குடும்பம் விரும்பத்தக்கது)
தொடர்பு: **077 623 7037**

### காணி விற்பனைக்கு
நாவலர் வீதிக்கும் கண்டி வீதிக்கும் அருகில் 1 1/2 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. விலை 4 கோடி 25 இலட்சம். (தரகர் தேவையில்லை)
**077 855 6382 / 077 408 0578**

### மணமகள் தேவை
யாழ் (V). 1983 யூரோப் நாட்டில் குடியுரிமை உள்ள IT - Engineer மகனுக்கு பெற்றோர் படித்த பொருத்தமான வரனை உள்நாடு/ வெளிநாடுகளில் எதிர்பார்க்கின்றனர்.
**077 351 7932**

### வேலைக்கு ஆட்கள் தேவை
யாழ்ப்பாணத்தில் உணவகம் ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.
தொடர்பு: **077 203 0627**

### தேவை
பிரபல்யமான தனியார் கல்வி நிறுவனத்திற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை.
(cr. 41937) (N-1)
**074 056 7791**

### வீடு வாடகைக்கு
2 அறை வீடு annex (தனியாக உள்ளது) யாழ். இந்து கல்லூரிக்கு அண்மையில் வாடகைக்கு உண்டு-30 000/=
தொடர்புகளுக்கு: **074 200 1214**

### காணி விற்பனைக்கு
**40 ஏக்கர் நிலம் (விவசாயத்திற்கும் உகந்தது) கிளாலி றோட், அல்லிப்பளை.**
(cr. 41987) (N-1)
**077 768 4040 / 076 458 0875**

### வீட்டுப் பணிப்பெண் தேவை
**நீர்வேலியில் சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டுப் பணிப்பெண் தேவை.**
(CS/54466) J-1
தொடர்பு:- **076 576 8174**

### காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம், சுன்னாகம், மல்லாகம் சோடாக் கம்பனி ஒழுங்கையில் 6 பரப்புக் காணியுடனான **வீடு விற்பனைக்கு உண்டு.** தரகர் வேண்டாம்.
(CR/41992) J-1
**075 711 8487**

### வேலைக்கு ஆட்கள் தேவை
இல 194 யாழ் வீதியில் அமைந்த நிறுவனத்திற்கு பொதியிடல் பெண்கள் தேவை. அனுபவம் விரும்பத்தக்கது. மேலதிக விபரங்களுக்கு
(CS/54501) J-1
**076 640 3388**

### வீடு வாடகைக்கு
யாழ். நகருக்கு அண்மையில் **சண்டிலிப்பாயில் நிறுவனங்களுக்கும், குடியிருப்புகளுக்கும் ஏற்ற விசாலமான வீடு** தேவையான அளவு வாகனங்கள் நிறுத்தக்கூடிய வசதியுடன் உண்டு.
(CR/41989) J-1
**075 560 9890**

### மணமகள் தேவை
1985 கார்த்திகை London Citizen, MSc Engineer யாழ்ப்பாணம் விடுமுறையில் வரும் Divorce ற்கு **மணமகள் தேவை.** பெற்றோர் மட்டும்.
(CR/41991) J-1
**076 226 7848, 011 271 4393**

### தோட்டக்காணி விற்பனைக்கு
**அச்சுவேலி - வசாவிளான்** பிரதான பாதையிலிருந்து செல்லும் தொழிற்பேட்டை வீதியில் சுமார் **38 பரப்பு செம்மண் காணி** வற்றாத கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு.
(CR/41990) J-1
**077 921 5550**

### விற்பனைக்கு
* Car விற்பனைக்கு உண்டு.(A-star)
* துவிச்சக்கர வண்டி (லுமாலா)
* அலுமாரி (தகரம்)
* Laptop ( HP)

**076 711 2102, 077 542 0783**

### வேலையாள் தேவை
எமது கால்நடை உற்பத்தி, விற்பனை நிலையத்திற்கு (Light vechile Licence, Auto, Bike உட்பட உள்ள) **ஆண் வேலையாள் தேவை.**
JAFFNA EGG CENTER
(CS/54508) J-1
**075 258 9665, 077 851 1265**

### வாடகைக்கு
சண்டிலிப்பாய் பகுதியில் பிரதேச செயலகத்திற்கு அருகாமையில், விசாலமான வரவேற்பறை, 4 அறைகள், 2 குளியலறை மற்றும் சமையலறை வசதிகளுடன் கூடிய **வீடு வாடகைக்கு விடப்படும். அலுவலகப் பாவனைக்கு உகந்தது.**
**48/15, வாத்தியார் இல்லம், கல்வளை, சண்டிலிப்பாய்.**
(CS/54500) J-1
**077 356 3192, 076 024 0378**

### விற்பனைக்கு
இங்கிலாந்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு இங்கு பாவித்த குதிரை வண்டிகளும் குதிரை ஒன்றும் விற்பனைக்குண்டு.
(cs 54477) (2 x 3)
**076 166 3620**
(யாழ்ப்பாணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தருமபுரம் மருத்துவமனையில் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு



கிளிநொச்சி, மார்ச் 24

தருமபுரம் மருத்துவமனையில் குடிதண்ணீரின்றிச் சிரமப்படுவதாக அங்கு சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களும், பொதுமக்களும் தமது அதிருப்தியைத் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் அவர்கள் தெரிவித்ததாவது:-

தருமபுரம் மருத்துவமனையில் அண்மைக்காலமாகக் குடிதண்ணீருக்குக் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அயலில் உள்ள தனியார் வர்த்தக நிலையங்கள் மற்றும் மருத்துவமனைவிடுதிப் பகுதிகளிலுள்ள கிணற்றுக்குச் சென்று குடி தண்ணீர் பெறவேண்டியுள்ளது. இதனால், உதவியாளர்கள் இல்லாமல் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருவோரும் பெரும் சிரமத்துக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

எனவே நோயாளர்களின் நலன்கருதி, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதுதொடர்பாக நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றனர். (மு-113)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். புதிய நண்பர்களின் அறிமுகம் ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**இடபம்:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் தோன்றி மறையும். தாயாரின் உடல்நலனில் கவனம் தேவை. தொடங்கும் காரியம் இழுபறியானாலும் அனுகூலமாக முடியும். உங்களுடைய முயற்சிகளுக்கு குடும்பத்தினரின் ஆதரவு கிடைக்கும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணம் கைக்குக் கிடைக்கும். வீட்டில் உள்ளவர்கள் உங்கள் ஆலோசனையைக் கேட்டுச் செயற்படுவார்கள். மகிழ்ச்சியான செய்தி கிடைக்க வாய்ப்பு உள்ளது. வியாபாரத்தில் தொல்லைகள் குறையும். இலாபமும் அதிகரிக்கும்.

**கடகம்:** முடிவு எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. அவ்வப்போது தேவையற்ற குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். தேவையற்ற பிரச்சினை ஏற்படும் என்பதால் பொறுமை அவசியம். செலவுகளால் கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை உண்டாகும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**கன்னி:** தேவையான பணம் கிடைக்கும். எதிர்பாராத செலவுகள் ஏற்படலாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். வீண் அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது. பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**துலாம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். ஆனால், குடும்பம் முடிவுகள் எதையும் எடுக்க வேண்டாம். எதிர்பாராத ஆதாயங்களுக்கு வாய்ப்பு உண்டு. வியாபாரத்தில் இலாபம் கூடுதலாகக் கிடைப்பது மகிழ்ச்சி தரும்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த காரியம் இழுபறியானாலும் முடிந்து விடும். வீண் செலவுகள் ஏற்படும். பிள்ளைகள் வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். மகா விஷ்ணுவை வழிபாடு நன்மை தரும்.

**தனுசு:** குடும்பத்தில் சிறுசிறு சலசலப்பு ஏற்பட்டாலும், சமயோசிதமாக சமாளித்து விடுவீர்கள். பணம் கையில் இருந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது.

**மகரம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். அலைச்சலும் செலவுகளும் ஏற்படும். தேவையற்ற வீண்செலவுகள் மனதை சஞ்சலப்படுத்தும். அவசியத் தேவையென்றாலும்கூட கடன் வாங்க வேண்டாம்.

**கும்பம்:** புதிய முயற்சிகளை தொடங்குவது நல்லது. எதிரிகளால் மறைமுக ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும். சிலருக்கு பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. மகிழ்ச்சி ஏற்படும்.

**மீனம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். துணிச்சலுடன் முடிவெடுக்கும் திறன் அதிகரிக்கும். காரியம் அனுகூலமாக முடியும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். உணவு விடயத்தில் கவனமாக இருக்கவும்.

## ஆண்டு நிறைவு

சாவகச்சேரி, மார்ச் 24

கைதடி, நுணாவில் அறவழி நிலையத்தின் 45 ஆவது ஆண்டு பூர்த்தி விழா, நிலையத்தில் தலைவர் வீ. ஜீ. தங்கவேல் தலைமையில் எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிலையத்தில் நடைபெறும் நிகழ்வில் முதன்மைவிருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி உஷாசுபலிங்கமும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி விஜிதா ஆரியரட்ணவும், மதிப்புறு விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச ஓய்வுநிலை உதவி மாவட்டச் செயலர்களான பு.சுந்தரம் பிள்ளை, செ.சிறிநிவாசன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-9)

## மைலோ உதைபந்தாட்ட வெற்றியாளர்கள் - 2024
## வட மாகாணம் - கிளிநொச்சி

மைலோ உதைபந்தாட்ட வெற்றியாளர்கள் 2024 - வட மாகாணம் (10 மற்றும் 12 வயதிற்குட்பட்டோர்) நிகழ்வின் நான்காவது சுற்று 2024 மார்ச் 16 அன்று கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்றது. 06 பெண்கள் அணிகளும், 16 ஆண்கள் அணிகளுமாக, மொத்தமாக 22 அணிகள் இப்போட்டியில் பங்குபற்றின.

இவ்வாறு இறுதியின் வெற்றியாளர்களாக, கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து பின்வரும் பாடசாலைகள் வெற்றி பெற்ற அணிகளாக தெரிவு செய்யப்பட்டுள்ளன:

கிளிநொச்சி / திருவையாறு மகா வித்தியாலயம் (10 வயதிற்குட்பட்ட பெண்கள்)

- கிளிநொச்சி / இரணைதீவு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை (10 வயதிற்குட்பட்ட ஆண்கள்)
- கிளிநொச்சி / [illegible] மகா வித்தியாலயம் (12 வயதிற்குட்பட்ட பெண்கள்)
- கிளிநொச்சி / இரணைதீவு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை (12 வயதிற்குட்பட்ட ஆண்கள்)

[illegible]

10 வயதிற்குட்பட்ட பெண்கள்
கிளிநொச்சி / திருவையாறு மகா வித்தியாலயம்

10 வயதிற்குட்பட்ட ஆண்கள்
கிளிநொச்சி / இரணைதீவு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை
கிளிநொச்சி / திருவையாறு மகா வித்தியாலயம்


12 வயதிற்குட்பட்ட பெண்கள்
- கிளிநொச்சி / [illegible] மகா வித்தியாலயம்
- கிளிநொச்சி / திருவையாறு மகா வித்தியாலயம்
- கிளிநொச்சி / வட்டக்கச்சி மத்திய கல்லூரி
- கிளிநொச்சி / புனித திரேசா பெண்கள் பாடசாலை

12 வயதிற்குட்பட்ட ஆண்கள்
- கிளிநொச்சி / இரணைதீவு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை
- கிளிநொச்சி / [illegible] தமிழ் கலவன் பாடசாலை
- கிளிநொச்சி / கிளிநொச்சி மத்திய கல்லூரி
- கிளிநொச்சி / [illegible] றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை

[illegible]

(CR 41935) (N-1)

## மரண அறிவித்தல்



தோற்றம் 19 . 11 . 1946

மறைவு 21 . 03 . 2024

### அமரர் திருவிளங்கம் சண்முகலிங்கம்

சரவணை மேற்கை பிறப்பிடமாகவும், டச்சு வீதி, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருவிளங்கம் சண்முகலிங்கம் கடந்த (21.03.2024) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருவிளங்கம் - பகவதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், பத்மாவதியின் அன்புக் கணவரும், உதயசங்கர் (பிரான்ஸ்), விமலதாசன் (கனடா), கோகிலவாணி, ஜெயசங்கர் (கனடா), பாலதாசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான ஜெயலட்சுமி (மலர்), கனகலிங்கம் (துயர்) மற்றும் சொர்ணலிங்கம் (செல்வா- பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவகௌரி (பிரான்ஸ்), ரஞ்சிதா (கனடா), முகுந்தன், சுஜிதா (கனடா), கோசலா (மானிப்பாய்) ஆகியோரின் அன்பு மாமனாரும், பகீஸ்காந், [illegible], தனுஷா (பிரான்ஸ்), ரஜீஸ், விதுஷா (கனடா), யதுஷிகா, ஜதுர்சன், அஜீஸ், அக்சரா (கனடா), ஸயர்ஷா, பவிந் (மானிப்பாய்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.03.2024) திங்கட்கிழமை டச்சு வீதி மானிப்பாயில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் முற்பகல் 10:00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்,
டச்சு வீதி,
மானிப்பாய்.

தொடர்புகளுக்கு: 077 224 7845

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## மகளிர் தினவிழா

கைதடி சனசமூக நிலையங்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், சாவகச்சேரி பிரதேசசபையும் கைதடி மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களின் ஒன்றியமும் இணைந்து நடத்தும் மகளிர் தின விழா கைதடி விநாயகர் மண்டபத்தில் எதிர்வரும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப 2 மணிக்கு இடம் பெறவுள்ளது. மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் ஒன்றியத் தலைவி திருமதி த. சுபத்திராதேவி தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சு. சுனேஸ்ராவும், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி தயாசக்தி பாலசுப்பிரமணியம், தென்மராட்சிப் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் க.லலிதசங்கர் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேசசபையின் ஆயுர்வேத வைத்தியர் ஜெயதர்சினி சத்துருக்கன், சனசமூக நிலையங்களின் ஒன்றியத் தலைவர் இ.கந்தசாமி ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஏ-159)

## குடிதண்ணீருக்காக அலையும் மக்கள்!



முல்லைத்தீவு, மார்ச் 24

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது நிலவும் வறட்சியான காலநிலையால் மக்கள் குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டை எதிர்கொண்டுள்ளனர். கிணறுகள் வற்றியுள்ளதால் பல மைல் தூரம் மக்கள் சென்று குடிதண்ணீரைப் பெறவேண்டியுள்ளது என்றும், குளிப்பதற்கு நீர் நிலைகளை நாடவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, தண்ணீர்த் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று பிரதேச செயலகங்கள் மற்றும் பிரதேசசபைகள் தெரிவித்துள்ளன.

மக்கள் நீர்நிலைகளை நாடும்போது சிறுவர்கள் தொடர்பில் அவதானமாக இருக்கவேண்டும் என்று நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர். (ஏ-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்மராட்சி மாணவர்கள் பதக்கங்களை வென்றனர்



சாவகச்சேரி, மார்ச் 24

கடந்த மாதம் கொழும்பு இராமகிருஷ்ண மண்டபத்தில், அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட தேசிய நிலைப் போட்டிகளில், சாவகச்சேரிப் பிரதேசத்தைச் சேர்ந்த 3 மாணவர்கள் தங்கம், வெள்ளி, வெண்கலம் போன்ற பதக்கங்களைப் பெற்றுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் கதாப் பிரசங்கப்போட்டியில் முதலிடம்பெற்றுதங்கப் பதக்கமும், கட்டுரை பிரிவு -1 போட்டியில் 2ஆம் இடம் பெற்று வெள்ளிப் பதக்கமும், கட்டுரை பிரிவு-11 போட்டியில் 3ஆம் இடம் பெற்று வெண் கலப் பதக்கமும் பெற்றுள்ளனர். (ப-9)


## கண்ணீர் அஞ்சலி

### செல்லத்தம்பி லோகேஸ்வரி

யாழ் போதனா வைத்தியசாலையில் தாதிய விடுதிச் சகோதரியாக கடமையாற்றும் செல்வி செல்லத்தம்பி செல்விகா அவர்களின் அன்புத் தாய் செல்லத்தம்பி லோகேஸ்வரி அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

தாதியர் நலன்புரி சங்கம்
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

## விற்பனைக்கு

JCB 3CX மற்றும் 3DX பெக்ஹோ



இயந்திரங்களுக்கான Bucket Tooth, Side Cutters, Cutting Edges மற்றும் Nut & Bolts விற்பனைக்கு.

இன்றே அழையுங்கள் - 076 310 7534

(CS 27214) (ந-1)

## விற்பனைக்கு

**உழவு இயந்திரம் TAFE L15D1**

யாழ்நகரில் ஒரு கை பாவிப்பிலுள்ள உழவு இயந்திரம் (RH.........) பெட்டி, கலப்பை, ROTAVATOR ஆகியவற்றுடன் விற்பனைக்கு உண்டு. 950 மணித்தியாலங்கள் மட்டுமே ஓடியது.

தொடர்பு: 077 575 0882

(CS 56507) V-1

## வேலையாள் தேவை

மன்னாரில் உள்ள சைவ உணவகத்திற்கு அனுபவம் மற்றும் Hotel Management கற்ற 30 வயதுக்கு மேற்பட்ட ஆண்/பெண் முகாமையாளர் ஒருவர் தேவை. தகுந்த ஊதியம் வழங்கப்படும்.

விண்ணப்பங்களை 06.05.2024 மாலை 5.00 முன்னர் "திருக்கேதீஸ்வரம் சிவனருள் இல்லம்" - மன்னார் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

T.P: 077 5815 998

(CS 54492) A-1

## வேலை வாய்ப்பு

தொழில் நிறுவனமொன்றுக்கு பெண் ஊழியர் தேவை. (Hardware அனுபவம் இருந்தால் முன்னுரிமை வழங்கப்படும்)

தொடர்பு:
076 267 7434

(CS 28324) V-1

## உடனடி வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு கீழ் வரும் பதவி நிலைகளுக்கு வேலையாட்கள் தேவை

1). கணக்கு உதவியாளர் (Account Assistant)
2). விற்பனை பிரதிநிதி (Sale Rep)
3). சாரதி-Driver (Heavy Vehicle) சாரதி அனுமதிப்பத்திரம்

மேற்படி பதவிகளுக்கு அனுபவம் உள்ள வேலையாட்கள் தேவை

(CS 28335) V-1

தொடர்புகளுக்கு: 077 120 8481

## மரண அறிவித்தல்



தோற்றம் 02.04.1954 — மறைவு 23.03.2024

### அப்பாச்சிப்பிள்ளை சோதிலிங்கம்

தாவடியைப் பிறப்பிடமாகவும் ஏழாலையை வதிவிடமாகவும் கொண்ட அப்பாச்சிப்பிள்ளை சோதிலிங்கம் நேற்று (23.03.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாச்சிப்பிள்ளை - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சறோஜினிதேவி அவர்களின் அன்புக் கணவரும், சாளினி, ராஜினி, நிவேகா, வேதிகா, கார்த்திகா, கஜானா ஆகியோரின் அன்புத் தந்தையும், சத்தியகரன், டினேஸ், நிரோஜன், லவகீசன், கஜந்தன், மாறன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சில்வியா, சிகோண், சத்தியசொரூபன், அபிஷயன், அனேகன், அக்ஷாந் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கட்டுவிளானை,
ஏழாலை மேற்கு, ஏழாலை,
077 0495281/ 0777654320

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 28331) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கூரையேறி கோழிபிடிக்க முடியாதவன்...

வடமாகாண மக்களின் வருமான மூலங்கள் அதிகரிக்கப்பட வேண்டும். ஆதலால், வடக்கு மாகாணத்தில் புதிய பொருளாதாரங்களையும் முதலீட்டு வலயங்களையும் உருவாக்குவதிலும் அரசாங்கம் கூடுதல் ஈடுபாட்டுடன் செயற்படுகின்றது என்று தெரிவித்திருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. வலி.வடக்கில் மக்களின் விவசாய நடவடிக்கைகளுக்காக காணிகளைக் கையளிக்கும் நிகழ்வில் வைத்தே ஜனாதிபதி இவ்வாறு உரையாற்றியுள்ளார். மூன்று தசாப்தத்துக்கும் மேற்பட்ட ஆயுத மோதல்களைச் சந்தித்த-போர்தின்ற பூமியான வடமாகாணத்தில், மக்களின் பொருளாதார வலுப்படுத்தலுக்காக சிறப்புச் செயற்றிட்டங்கள் தேவை என்பதைக் கிஞ்சித்தும் மறுப்பதற்கில்லை. ஆனால், புதிய வருமான மூலங்களை உண்டாக்குவதற்கும், முதலீட்டு வலயங்கள் உருவாக்குவதற்கும் முன்னர் வடக்கில் இயல்பாக உள்ள வருமான ஈட்டுகையையும் வருமான மூலங்களையும் அரசாங்கம் உறுதிப்படுத்தியிருக்கின்றதா? என்ற கேள்விக்கான பதிலை ரணிலும் அவர் தலைமையிலான அரசாங்கத்தினரும் வழங்கியே ஆகவேண்டும்.

தெற்காசியாவில் மிகப்பிரபலமான மீன்பிடிக் கேந்திரங்களில் ஒன்றாக வடக்கு மாகாணத்தின் கடற்பரப்புகள் அமைந்துள்ளன. ஆனால், இந்தக் கடற்பரப்புகளில் இந்திய மீனவர்களால் அண்மைக்காலமாக முன்னெடுக்கப்பட்டுவரும் அத்துமீறல்களும் ஆக்கிரமிப்புகளும் கொஞ்சநஞ்சமல்ல. பல இலட்சம் ரூபா பெறுமதியான வடமாகாண மீனவர்களின் வலைகள் இந்திய மீனவர்களின் இழுவைமடிகளால் அறுத்தெறியப்பட்டுள்ளன. கோடிக்கணக்கான பெறுமதியுடைய மீன்கள் அள்ளிச் செல்லப்படுகின்றன. நாளுக்கு நாள் தீவிரமாகிவரும் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையிலிருந்து தமது கடலையும்-தொழிலுபகரணங்களையும் காப்பாற்றுமாறு நூற்றுக்கும் மேற்பட்ட தடவைகள் வடமாகாண மீனவர்கள் மன்றாட்டமாகவும்-போராட்டங்கள் மூலமாகவும் வலியுறுத்தியபோதிலும் இதுவரை எந்தவொரு ஆக்கபூர்வமான முயற்சிகளும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. 'கைது ஒத்திவைக்கப்பட்ட சிறை விடுவிப்பு' இவைதான் அத்துமீறிய மீன்பிடிக்கு எதிராக இலங்கை அரசாங்கம் கைக்கொள்ளும் ஆகப் பெரும் நடவடிக்கையாக இதுவரை அமைந்திருக்கின்றதேயன்றி, வடக்கு மாகாண மீனவர்களின் பொருளாதாரத்தை உறுதிப்படுத்தும் வகையில் என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது என்று கேட்டால், ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் பதில் பல்லிளிக்கும்.

இப்போதும்கூட இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடியைக் கட்டுப்படுத்துமாறு வலியுறுத்தி நான்கு மீனவர்கள் நான்கு நாள்கள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர், நூற்றுக்கணக்கான மீனவர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தையும், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தையும் முற்றுகையிட்டிருந்தனர். இவற்றுக்கெல்லாம் எந்தப் பதிலையும் வழங்காமல் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் இருந்துவிட்டு, வடக்கு மாகாண மக்களின் பொருளாதார ஈட்டுகைக்கான புதிய வருமான மூலங்கள் தொடர்பில் கருத்துப் பகிர்வதெல்லாம் அபத்தத்திலும் அபத்தமே. வடக்குமாகாண மக்களின் பிரதான பொருளாதார வருமான மூலங்களாக மீன்பிடி, விவசாயம், கால்நடை வளர்ப்பு என்பனவே அமைந்திருக்கின்றன. இந்த மூன்றையும் மையப்படுத்திய பொருளாதாரம் எந்த நாட்டில் வலுப்பெறுகின்றதோ அந்தநாடு தற்சார்புப் பொருளாதாரத்திலும் பலமாக இருக்கும். ஆதலால்தான் மத்திய கிழக்கு நாடுகள்கூட விவசாயம், கால்நடை வளர்ப்பு என்பவற்றை மையப்படுத்திய பொருளாதார ஈட்டுகைக்கு தற்போது தயாராகி வருகின்றன. ஆதலால், புதிய பொருளாதார மூலங்கள் தொடர்பில் சிந்திப்பதற்கு முன்னர், இருக்கும் பொருளாதார மூலங்களைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளை ரணில் அரசாங்கம் முதலில் மேற்கொள்ள வேண்டும். 'கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவன், வானம் ஏறி வைகுண்டம் போன' கதையெல்லாம் வடக்கு மக்களின் வாழ்வியலில் வேண்டாம்.




# பொருளாதார நெருக்கடியே மோசடிகளுக்குக் காரணம்!

### கணினி அவசரதயார்நிலைக் குழு சுட்டிக்காட்டு

**கொழும்பு, மார்ச் 24**

**இலங்கையில் அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவுக்கு மத்தியில் அதிகளவான மக்கள் துரிதமாகப் பணம் சம்பாதிக்க முனைவதாலேயே மோசடிகள் மற்றும் இணையவழி மோசடிகளுக்கு தனிநபர்கள் இரையாகும் அபாயம் அதிகரித்துள்ளது என்று இலங்கை கணினி அவசர தயார் நிலைக் குழு தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் இலங்கை கணினி அவசர தயார்நிலைக் குழுவின் சிரேஷ்ட தகவல் பாதுகாப்புப் பொறியியலாளர் சாருக தமுனுபொல தெரிவித்துள்ளதாவது:-

தற்போது சமூக ஊடக தொடர்பாடல் தளங்கள் மூலம் பல குற்றச்செயல்கள் இடம்பெறுகின்றன. மோசடியான பிரமிட் திட்டங்களுக்கு மக்கள் பணம் செலவிடுகின்றனர்.

மோசடியில் ஈடுபடுபவர்கள் அடையாளம் காணப்பட்ட பல சம்பவங்கள் 'பேஸ்புக்' மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த இரண்டு வாரங்களில் இவ்வாறான குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 12 வழக்குகள் பதிவாகியுள்ளன.

அவற்றுக்கெதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்ட போதிலும், விசாரணைகளை முன்னெடுக்க முடியாத நிலை காணப்படுகிறது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-இ)

## தீர்வில்லையேல் போராட்டம்

எதிர்வரும் ஏப்ரல் முதல் வாரத்தில் நாடு தழுவிய ரீதியில் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளதாக இலங்கையிலுள்ள 18 தொழிற் சங்கங்கள் அறிவித்துள்ளன.

அரச நிர்வாக அதிகாரிகளின் தொழில்சார்பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வுகளை முன்வைக்குமாறு விடுத்த கோரிக்கைகளுக்கு சாதகமான பதிலை மார்ச் மாதம் 31ஆம் திகதிக்குள் வழங்கும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இல்லாவிடின் நாடு தழுவிய ரீதியில் வேலைநிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று அரசாங்க நிறைவேற்று அதிகாரிகளின் குழு தெரிவித்துள்ளது. (ச-இ)

## கைகொடுக்கும் ஜப்பான்

கொழும்பு, மார்ச் 24

வீழ்ச்சியடைந்துள்ள இலங்கைப் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பும் ஜனாதிபதி ரணிலின் வேலைத்திட்டத்துக்கு ஜப்பான் அரசாங்கம் முழுமையான ஆதரவை வழங்கும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் ஜப்பானிய தூதுவர் மிசுகோஷி ஹிடேயாகி தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கம் முன்னெடுத்துவரும் ஊழல் தடுப்பு முயற்சிகள் பாராட்டுக்குரியது. இலங்கையின் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவை வலுப்படுத்த ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி வேலைத் திட்டத்தின்கீழ் ஜப்பான் உதவிகளை வழங்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-இ)

## ஏற்றுமதியில் சிறிய வளர்ச்சி

கொழும்பு, மார்ச் 24

இந்த ஆண்டு பெப்ரவரி மாதத்தில் வணிகப் பொருள்களின் ஏற்றுமதியில் சிறிதளவு வளர்ச்சி ஏற்பட்டுள்ளது என்று ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு பெப்ரவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் 0.17 சதவீத வளர்ச்சி காணப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## நெல் கொள்வனவுக்கு ரூ. 1000 மில். ஒதுக்கீடு

பெரும்போக நெல் கொள்வனவுக்காக 1000 மில்லியன் ரூபா நிதி கிடைக்கப்பெற்றுள்ளது என்று நெல் சந்தைப்படுத்தல் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

பெரும்போக நெல் கொள்வனவுக்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டு களஞ்சிய சாலைகள் திறக்கப்பட்டு நாடு 105 ரூபாவுக்கும் சம்பா 120 ரூபாவுக்கும் கீரிச் சம்பா 130 ரூபாவுக்கும் நெல் கொள்வனவு செய்யப்படும் என்றும் நெல் சந்தைப்படுத்தல் அதிகாரசபை தெரிவித்துள்ளது. (ச-இ)

## நாளை

25.03.2024

திங்கட்கிழமை

பங்குனி–12

சுபநேரம் : 12.15 - 01.45

ராகுகாலம் : 07.45 - 09.15


## நாளொரு நல்வார்த்தை

"அடக்க முடியாத கோபம் உன்னில் இருப்பதை கட்டி வை. காலம் உன்னிடம் வரும் அப்போது ஒருவனையும் விடாமல் கருவறு."

– ஹிட்லர் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
15 . 04 . 1957

மறைவு
05 . 04 . 2023

கடந்த ஆண்டு (05.04.2023) புதன்கிழமையன்று
சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

## அமரர் கதிரவேலு தவராசா

அவர்களின் முதலாம் ஆண்டு வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (24.03.2024) ஞாயிற்றுக்கிழமை பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதமாய் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சங்கரத்தை வீதி,
நவாலி தெற்கு, மானிப்பாய்.

(CS/54468) J-1

குடும்பத்தினர்
077 167 5973

# மரண அறிவித்தல்

பிறப்பு
02 . 08 . 1944



இறப்பு
20 . 03 . 2024

## திருமதி சிவபாக்கியம் பொன்னம்பலம் (நகுலா)

கலட்டி சங்குவேலியை பிறப்பிடமாகவும், சங்குவேலி மற்றும் கொழும்பு கொட்டாஞ் சேனையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் பொன்னம்பலம் அவர்கள் கடந்த (20.03.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி பொன்னையா தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற திரு. திருமதி சுப்பையா தம்பதிகளின்(கோண்டாவில்) மருமகளும், காலஞ்சென்ற பொன்னம்பலம் (ஞானி-Indian Overseas Bank) அவர்களின் அன்பு மனைவியும், வசந்தராஜன் (ராஜன், வசந்தன்- பிரித்தானியா), பிரபாகரன்(பிரபா-கனடா), அனுஷா(கனடா), பிரதீபன்(பொன்னா-கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மைதிலி(பிரித்தானியா), குணசீலி(கனடா), விக்னேஸ்வரன்(கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், அபிராமி, ஜனனிஸ், விதுஷன், கவிஷன், குணாளன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான விமலாதேவி, தேவதாசன்(தாசன்), மகேசன், கணேஷ்(பாலா), திருக்கேதீஸ்வரன்(குஞ்சு), மற்றும் விமலேந்திரன் (பூவா-Unie Arts) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் நாகபூசணி, பராசக்தி, பத்மாதேவி, ஜெகதாம்பாள், வசந்தகௌரி காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, மகேஸ்வரி, பரமேஸ்வரி, சரஸ்வதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சங்குவேலியில் உள்ள அவரது இல்லத்தில் நாளை (25.03.2024) திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு:
தர்ஷன் (பேறாமகன்) 0773749207

தகவல்: குடும்பத்தினர்.
பிரதீபன் (மகன்)

(CS 54478) A-1

# மரண அறிவித்தல்



தோற்றம்
19.11.1939

மறைவு
14.03.2024

## செல்வரத்தினம் சோதிமணி

யாழ்ப்பாணம் திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் கனடா றொரண்டோவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரத்தினம் சோதிமணி கடந்த 14.03.2024 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பறுவதம் தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும், செல்வரத்தினத்தின் பாசமிகு மனைவியும், ரத்தினம் (கனடா), ரங்கன் (கனடா), ராஜி (கனடா), திலகேஸ்வரன் (சுவிஸ்), ஜசோ (கனடா), கோமதி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சூட்டி, சுரேந்தி, பவானி, ராஜபாலா, பாபு, ஜனனி (சுவிஸ்), ரமேஷ் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான கனகலிங்கம், காசிலிங்கம் மற்றும் மணி, கந்தசாமி, யோகலிங்கம், காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை மற்றும் இந்திராணி, கணேசலிங்கம், தனலஷ்மி, கிருஷ்ணமூர்த்தி, வசந்தி, இராஜலஷ்மி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், புஸ்பமணி, புவனேஸ்வரி, காலஞ்சென்ற இராசரெத்தினம் மற்றும் பட்டு, பாமா, விமலாதேவி, மன்மதராசா, காலஞ்சென்ற கணேசலிங்கம் மற்றும் நீலா, யசோ, குணரெத்தினம், சூரியகுமார் ஆகியோரின் மைத்துனியும், சுஜின், லவின், கவின், கேதுஷா, பிரதுஷா, மனிஷா, கிசோ, கிரி, சாந்து, கிரோசன், துரிதா, சாஜிசா, சாருஜன், சாகித்தியன், சாதுரியன், சஜன், பிரித்திகா, கெவின், ரமேனா, சிவானா, செல்வீனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், சகிஷா, கிசால், சபினாஷ், சப்ரீனா, சபித்தன், ஆதித்தியா, ஒஸ்ரன், சீதா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2024) ஞாயிற்றுக் கிழமை காலை 8.00 மணி தொடக்கம் 11.00 மணிவரை Ajaxcrema torium visitation centre 384, Finley Avenue Ajay on. Lisze - 3 இல் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செல்வரத்தினம்
குடும்பத்தினர்.

(cs.54444) (N-1_

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

உப்புக்கேணி வீதி, பெரியமாவடி சாவகச்சேரியில்
6 பரப்புக் காணியில் அமைந்த வீடு
"குமார பவனம்" விற்பனைக்கு உண்டு.
கிணறு, இரண்டு குழாய்க் கிணறு ,
2 குளியலறைகள் அடங்கிய வீடு.
(கச்சாய் வீதிக்கு அருகாமையில்).

தொடர்புக்கு:-
Whats spp :- 0033 767 140 453
077 494 8151

(CS/28244) J-1





அனலைதீவு - கழுாவடியுறை
திருவருள்மிகு பூரணைதேவி புஷ்கலாதேவி உடனுறை
ஸ்ரீ ஹரிஹரபுத்திர ஐயனார் திருக்கோவில்

## அடிக்கல் நாட்டுவிழா (சங்கு ஸ்தாபனம்)

### விஞ்ஞாபனம் - 2024

❖ காலம் : 25.03.2024 திங்கட்கிழமை
❖ நேரம் : காலை 09.18 முதல் 10. 40 மணிவரை

**ஐயனார் மெய்யடியார்களே!**

எமது காவல் தெய்வமாகவும், குல தெய்வமாகவும் விளங்கும் கலியுக வரதனாம் அனலையம்பதி திருவருள் மிகு பூரணைதேவி புஷ்கலாதேவி உடனுறை ஸ்ரீ ஹரிஹரபுத்திர ஐயனார் திருக்கோவில் **புனருத்தாரண திருப்பணி வேலைகளை ஆரம்பிக்கும் பொருட்டு நாளை (25.03.2024) திங்கட்கிழமை** உத்தர நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய **காலை 09.18 மணிமுதல் 10.40 மணிவரையுள்ள** சுப முகூர்த்த வேளையில் **புதிய மூலாலயத்திற்கும் ஏனைய பரிவார ஆலயங்களுக்கும் (கருங்கற்கோவில்) திருக்கல் (சங்கு ஸ்தாபனம்) நாட்டப்பெற** ஐயனாரின் திருவருள் கூடியுள்ளது அத்தருணம் ஐயனாரின் அடியார்கள் யாவரும் ஆசாரசீலர்களாக வருகை தந்து ஐயனாரின் திருவருளைப் பெற்றேகுமாறு அழைக்கின்றோம்.

"அடிக்கல் நாட்டுவோம் அனைவரும் வாரீர்"

அனலைதீவு - 05

ஆலய பரிபாலன சபை,
ஆலய திருப்பணிச்சபை.

(cs 54488) (N-1)



## மணி விழாவும் பிறந்த தின வாழ்த்தும்

Congratulations

Congratulations



திருமதி
**அருட்சோதி சிவசுப்பிரமணியம்**
(SLTS - 1)
பயிற்றப்பட்ட இந்து சமய
ஆசிரியர்

தனது 36 வருட கல்விச் சேவையில் இருந்து இன்று ஓய்வு பெறுவதோடு தனது அறுபதாவது பிறந்த தினத்தை கொண்டாடும் எமது அம்மா அவர்கள் முருகன் துணையால் நலமாக வும், சுபீட்சமாகவும் ஓய்வுக்காலத்தைக் கழிக்க **மனநிறைவுடன் வாழ்த்துகின்றோம்.**

**சேவைக் காலம்:**

- யா / மந்துவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை
  17.08.1986 - 02.02.1993
- யா/ கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
  03.02.1993 - 31.12.1994
- யா / மந்துவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை
  01.01.1995 - 03.03.1998
- யா / மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம்.
  04.03.1998 - 06.09.2011
- யா / நுணாவில் மேற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை
  07.09.2011 - 01.02.2015
- யா / மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி
  02.02.2015 - 23.03.2024

*வாழ்த்துவோர்:*
**குடும்பத்தினர்.**

(CS/54472) J-1


## கௌரவிப்பு

மட்டு., மார்ச் 24

மட்டுவில் கிழக்கு வில்சன் சனசமூக நிலையத்தின் 46 ஆவது ஆண்டு விழா, தரம் - 5 புலமைப் பரீட்சை, கல்விப் பொதுத் தராதர சாதாரண தர மற்றும் உயர்தரப் பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு, கவிஞர் கி.கலைத்தாசனின் 'உணர்வின் விதைகள்' எனும் கவிதைநூல்வெளியீட்டு நிகழ்வு என்பன இடம்பெறவுள்ளன.

குறித்த நிகழ்வுகள் மேற்படி நிலைய முன்றிலில் தலைவர் சி. அமிர்தலிங்கம் தலைமையில் இன்று ஞாயிற்றுக் கிழமை பி. ப. 3 மணிக்கு நடைபெறும்எனசெயலாளர் வ.விஜயானந்தன் தெரிவித்துள்ளார்.

(ப-36)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
**03.09.1952**

இறப்பு
**05.04.2023**

கடந்த 05.04.2023 அன்று சிவபதமடைந்த
எங்கள் குடும்பத்தலைவர்

**அமரர் சின்னத்தம்பி சிவராஜா**

அப்பா
அப்பா நீங்கள் அணைத்தபோது
அன்பைக் கண்டோம்
சிந்தித்தபோது சிரிப்பைக் கண்டோம்
உழைத்தபோது உயர்வைக் கண்டோம்
அறிவை அறிய வைத்தபோது அறிவுலகம் கண்டோம்
ஊர்கூடி வாழ்ந்தபோது உறவுகளைக் கண்டோம்
இன்னல் துடைத்தபோது இறைவனாய் கண்டோம்
மறைந்தபோது தான் மரணத்தைக் கண்டோம்
மரணத்தின்போது உங்கள் புகழைக் கண்டோம்.
அப்பா அன்பான, அழகான, அழகிய
கூட்டை விட்டு அவ்வுலகம் சென்றது ஏன்?
எவ்வுலகம் சென்றாலும் எந்நாளும் எம்முடனே...
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

**குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனை

சாவகச்சேரி, நுணாவில் கிழக்கு, A9 வீதியில் அமிர்தாம்பிகை வித்தியாலயத்திற்கு முன்பாக (யூனியன் பேக்கரிக்கு அருகில்) 3 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 077 316 0786

(CR/41962) J-1

## விடு விற்பனைக்கு

மொறட்டுவ ராவத்தாவத்தையில் 14 பேர்ச், 2 மாடி, 5 அறை, 2 குளியலறை கொண்ட வீடு விற்பனைக்கு.

காலி வீதியில் இருந்து 350m.

விலை 25 Million.

தொடர்பு:- 077 431 2593

(CS/28316) J-1

## வீட்டுப்பணிப்பெண் தேவை

நல்லூர் பகுதியில் வீட்டுவேலைக்கு பணிப்பெண் தேவை.

077 317 4416, 077 501 3103

## வேலை வாய்ப்பு

கிளிநொச்சி A9 வீதியில் அமைந்துள்ள LOTUS COTTEOE HOTEL க்கு Reception ஆண் / பெண் இருபாலாரும் தேவை.

076 871 2645 / 021 228 3222

Whats'App 0044 77 25 860 963


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

Best Wishes

எமது மகன் செல்வன்

**சாந்தகுமார் லெஸ்லி லவன்**

(Bachelor of Science in Computer Science- கணினி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி)



Best Wishes

அவர்கள் யா/பல்கலைக்கழகத்தில் 16.03.2024 அன்று இடம்பெற்ற பட்டமளிப்பு விழாவில் B.Sc பட்டம் பெற்றமையை பாராட்டி வாழ்த்துவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

44/1, 2nd விதானையார் வீதி
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, தம்பி,
பெரியப்பா, பெரியம்மாமார்

(CS 54489)A-1

## காணி தேவை

தெல்லிப்பழை அம்பனையில் மகாஜனக் கல்லூரி சூழலில் நிலப்பரப்பு ஐந்துக்கு மேற்பட்ட காணி விலைக்குத் தேவை.

விற்க விரும்பியவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

077 608 7502

(CS/28303) J-1

## காணி விற்பனைக்கு

கோப்பாய் பெற்றோல் நிலையத்திற்கு முன்பாக உள்ள ஒழுங்கையில் (800m தூரத்தில்) 2 பரப்பு வெற்றுக்காணி விற்பனைக்கு

076 089 8877

## குத்தகைக்கு உண்டு

**யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு முன்பாக**

ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள எமது சங்க கட்டிடத் தொகுதியில் 1ம் மாடியில் (12X32 அடி நீளமான) ஒரு கடை வாடகைக்கு உள்ளது. 2ம் மாடியில் 3000 சதுர அடி பரப்பளவு கொண்ட கட்டடம் நீண்டகால குத்தகைக்கு விடப்படும். இக்கட்டடத்தில் ரியூட்டரிகள், பயிற்சி நிலையங்கள், தங்குமிட வசதிகள் தனியார் வைத்தியசாலைகள் போன்ற தேவைக்கு ஏற்றவாறு வடிவமைக்கக் கூடியது. தேவையானவர்கள் தொடர்பு கொள்ளவும்.

யாழ். மாவட்ட பேக்கரி
உரிமையாளர் சங்கம்,
183 ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

செயலாளர்
021 222 3814
077 665 3323

(CR - 41963) S-1

## மணிவிழா வாழ்த்தும் சேவைநலன் பாராட்டும்



Best Wishes

# திருமதி ஜெயதேவி சிறிஸ்கந்தராசா

**B.A Spe.Trd (Primary) Dip in Edu (merit)**

***SLTS - I***

**அகில இலங்கை சமாதான நீதவான் (J.P)**

ஆரம்பக் கல்வி - யா/ சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயம்
இடைநிலைக் கல்வி - யா/ நாரந்தனை றோ.க.மகா வித்தியாலயம்
உயர்தரக் கல்வி - யா/ வேலணை மத்திய கல்லூரி
முதல் நியமனம் - 1988.08.17
சேவை 35 வருடங்கள் 07 மாதம் 05 நாள்

***சேவை விபரம்.***

| | |
|---|---|
| யா/ நாரந்தனை றோ.க.மகா.வி | ஆசிரியர் 17.08.1988 - 31.08.1995 |
| யா/ ஊர்காவற்றுறை றோ.க.ஆண்கள் பாடசாலை | ஆசிரியர் 01.09.1995 - 02.06.1996 |
| யா/ புனித அந்தோனியார் கல்லூரி | ஆசிரியர் 03.06.1996 - 01.05.1997 |
| யா/ நாரந்தனை றோ.க.மகா.வி | ஆசிரியர் 02.05.1997 - 19.01.2006 |
| யா/ வேலணை மத்திய கல்லூரி | ஆசிரியர் 20.01.2006 - 06.01.2009 |
| யா/ தம்பாட்டி அ.த.க.வி | ஆசிரியர் 07.01.2009 - 26.01.2009 |
| யா/ தம்பாட்டி அ.த.க.வி | பதிலதிபர் 27.01.2009 - 27.06.2010 |
| யா/ வேலணை மேற்கு நடராஜ.வி | ஆசிரியர் 28.06.2010 - 12.05.2011 |
| யா/ வேலணை கிழக்கு மகா.வி | ஆசிரியர் 13.05.2011 - 25.05.2011 |
| யா/ வேலணை கிழக்கு மகா.வி | பதிலதிபர் 26.05.2011 - 14.03.2024 |

24.03.2024 இன்று சேவையிலிருந்து ஓய்வு பெறுவதையிட்டு அவரின் அர்ப்பணிப்பான சேவையை பாராட்டுவதுடன் ஓய்வு காலம் மேலும் சிறப்புற எல்லாம் வல்ல பெருங்குளத்து முத்துமாரி அம்பாளை வேண்டி மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

Best Wishes

Congratulations

வாழ்த்துவோர்:
பாடசாலைச் சமூகம்

## யா/ வேலணை கிழக்கு மகாவித்தியாலயம்

(CS 54494) S-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஸ்ரீ ராம ஜெயம்

யாழ்ப்பாணம் வண்ணை

# ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

# புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ மஹா கும்பாபிஷேக சிறப்பிதழ் - 2024



## மஹா கும்பாபிஷேகம்

**காலம் - 24.03.2024 ஞாயிற்றுக்கிழமை**

**நேரம் - முற்பகல் 10.09 முதல் 11.21 மணிவரை**

## ஆசியுரை



**வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்**
**இரா. ரமணீதரக்குருக்கள் பிரதிஷ்டா பிரதமகுரு**
**சிவாகம கிரியாபானு தேவஸ்தான பிரதமகுரு**

கலியுகத்திலே வைணவ ஆகம சம்பிரதாயப்படி வேங்கடேசனாக அவதாரமெடுத்து அடியார்களுக்கு இப்பூவுலகில் நல்லவண்ணம் வாழ்வதற்கு தேவையான பதினாறு(16) செல்வங்களையும் வாரிவழங்கி ஸ்ரீதேவி. பூதேவி சமேதராக யாழ்ப்பாணம் வண்ணையம்பதியில் வேங்கடேச வரதராஜப் பெருமாள் என்னும் திவ்யநாமம் தாங்கி வீற்றிருந்து சேவை சாதிக்கிறார். அவரது திருவருட் கருணையினால் கடந்த இருபதுவருட காலத்தின் பின்னர் சோபகிருது வருஷம் பங்குனி உத்தர நன்னாளில் காலத்திற்கேற்ப முக்கியமான பல திருப்பணிகள் செய்யப்பெற்று பலவித வர்ணங்கள் தீட்டிப் புதுப்பொலிவுடன் மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மனமகிழ்வடைகிறேன். இவ்வாலயத்தின் கருவறையிலே நான்கு விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. ஆதிவெங்கடேசர் எனப்போற்றப்படும் பெருமாள் வேங்கடேசர்க்குரிய திருவுருவ அமைப்புடன் வீற்றிருக்கிறார். இவர் ஆதிகாலத்தில் தலவிருட்ஷமான பலாமரத்தடியில் வைத்து வழிபடப்பட்டவராவர்.

வைகாசன முறைப்படி ஆலயம் அமைத்தபோது கும்பகோணத்தில் இருந்து செய்வித்து கொண்டுவரப்பட்ட ஸ்ரீதேவி பூதேவி சமேத வரதராஜப் பெருமாள் வீற்றிருக்கிறார். வரதராஜப் பெருமாளின் வலது புறத்தில் ஸ்ரீதேவியும் இடதுபுறத்தில் பூதேவியும் நின்ற திருக்கோலத்தில் காட்சிதருகின்றனர் ஆதலால் இந்த ஆலயம் வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயம் எனும் திருநாமம் கொண்டு எல்லோராலும் போற்றப்படுகிறது.

மேற்படி நடைபெறுகின்ற கும்பாபிசேக நன்னாளிலும் தொடர்ந்து நடைபெறுகின்ற நித்ய உற்சவ பூஜா கைங்கர்யங்களையும் பக்தகோடிகள் யாவரும் வந்து தரிசனம் செய்து பேரானந்த பெருவாழ்வு வாழ வேண்டும் என்று மனதார வேங்கடேசன் பாதமலர் வணங்கி நல்லாசிகூறிப் பிரார்த்திக்கிறேன்.

**கோவிந்தநாம சங்கீர்த்தனம் கோவிந்தா! கோவிந்தா!! கோவிந்தா!!!**

## வாழ்த்துச்செய்தி



**திரு. எஸ். சுதர்சன்,**
**பிரதேச செயலாளர், பிரதேச செயலகம்,**
**யாழ்ப்பாணம்**

வைணவத்தின் முழுமுதற்பொருளாக விளங்கும் ஈழத்துத்திருப்பதி எனப் போற்றப்படும் வேங்கடேச வரதராஜப்பெருமாள் ஆலயத்தில் அமர்ந்து மக்களின் துன்பங்களைப் போக்கி அருள்பாலிக்கும் ஸ்ரீ வேங்கடேசனின் குடமுழுக்குத் திருவிழா காணவிருப்பதை முன்னிட்டு அவரை உணர்வுபூர்வமாக தினமும் வழிபடும் பக்தன் என்ற வகையில் மட்டற்ற மகிழ்வடைகின்றேன். இலங்கையின் வடபுலத்தில் யாழ்குடாநாட்டில் யாழ்நகரில் வண்ணையம்பதியில் அமைந்துள்ள இவ்வாலயம் ஏறத்தாழ கி.பி 14ம் நூற்றாண்டில் தோற்றம் பெற்றது. கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது ஒளவையார் வாக்கு. "திருக்கோவிலில்லாத திருவலூரும் அடவிக்காடே" என்ற அப்பர் பெருமானின் வாக்கும் கோவிலின் மகத்துவத்தை நன்கு விளக்குகின்றது. இப்பூவுலகில் நாம் பிறந்த நோக்கத்தையும் நாம் அடைய வேண்டிய இலக்கையும் நமக்கு உணர்த்தும் இறைவனின் உறைவிடமே திருக்கோவில். அத்தகைய ஆலயங்கள் சைவநெறியைப் பேணிப்பாதுகாப்பதில் முதன்மை இடத்தை வகிக்கின்றன. மானிடனாகப் பிறந்த ஒவ்வொருவரும் உலகியல் வாழ்க்கைக்கு பணத்தை மட்டுமே செலவு செய்கின்றோம். ஆனால் ஆன்மிக வாழ்விற்கு இறைவழிபாட்டைத்தவிர என்ன செய்யமுடியும்! ஆலயங்களை அழகுற அமைத்து திருவுருவ வழிபாடு. திருவிழாக்கள். அபிஷேக ஆராதனைகள். அலங்காரங்கள் செய்து ஆன்ம ஈடேற்றத்தை அடைந்துகொள்ளலாம்.மஹாவிஷ்ணு மூர்த்தியே வரம் அருளும் வரதராஜப் பெருமாளாக ஸ்ரீதேவி பூமாதேவி சமேதராகக் காட்சி தருகின்றார். இவரையே தேவாதிராஜன் என்றும் தேவராஜன் என்றும் போற்றுவர். அடியார்களின் குறைகளைத் தானே அறிந்து தீர்க்கும் கருணைக்கடலாக இருக்கும் மூர்த்தி. வரம் அருளும் தெய்வங்களுக்கெல்லாம் ராஜாவாக இருப்பதனால் வரதராஜன் எனப் போற்றப்படுகின்றார்.

இறைவன் எழுந்தருளும் இடங்களை கும்பம். பிம்பம். தம்பம் என மூவகையாகக் கூறுவர். ஆலயங்களைப் புதுப்பிப்பதற்கு அங்குள்ள பிம்பம் மற்றும் தம்பத்தில் விளங்கும் மூர்த்திகளைக் கும்பத்தில் ஆவாகனம் செய்து ஆலயத்தை புதுப்பித்தபின் அங்குள்ள திருவுருவங்களில் அபிஷேகத்தின் மூலம் அம்மூர்த்திகளைச் சேர்ப்பித்தலை கும்பாபிஷேகம் அல்லது குடமுழுக்குத் திருவிழா எனக்கூறுவர்.இவ்வாலயத்தின் கும்பாபிஷேகத்தை சிறப்புற நடாத்துவதற்கேற்ற வகையில் பாலஸ்தாபனம் செய்த காலம் முதல் மீண்டும் மீள்உருவாக்கம் செய்வதற்காக அரும்பாடுபட்ட மகாசபையினர். நிர்வாக சபையினர் மற்றும் சிற்பவல்லுனர்கள். ஏனைய வகையில் தமது ஆக்கபூர்வமான பணிகளை நிறைவேற்றிய அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளையும். பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்வதோடு குடமுழுக்குத்திருவிழா மிகவும் சிறப்பான முறையில் நடைபெறுவதற்கு எல்லாம் வல்ல வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமானின் பாதார விந்தங்களைப் பணிந்து நிற்கின்றேன்.

## வாழ்த்துச் செய்தி



**தலைவர்**
**தி.சிவரூபன்**
**வண்ணை ஸ்ரீவேங்கடேஸ்வரர் தேவஸ்தானம்**

திருவளரும் வண்ணையம்பதியில் எழுந்தருளிக் காட்சிதரும் வைணவத்தின் முழுமுதற் பொருளாக விளங்கும் அருள்மிகு ஸ்ரீவேங்கடேசதத் திருத்தலம் வைணவம் சார்ந்த வைகாசன ஆகம விதிமுறைகளுக்கு இணங்க யாழ்நகரில் ஏறத்தாள 14 ம் நூற்றாண்டில் அரசோச்சிய தமிழ் மன்னனாகிய குணபூசன ஆரியன் செகராச சேகரனின் காலத்தில் சிறிய உருவில் உருப்பெற்ற இவ் ஆலயம் ஒல்லாந்தர் காலத்தில் புனர்நிர்மாணம் செய்யப்பெற்றது. பின்பு ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் வளர்ச்சி பெற்று சகல பரிவார மூர்த்திகளின் சந்நிதிகள் அமையப்பெற்ற நிலையில் பிரசித்தமான நவக்கிரக பீடத்தை தன்னகத்தே உடைய ஒரு திவ்விய ஷேத்திரமாக விளங்கத் தொடங்கியது. அன்று தொட்டு இன்று வரை இத்தேவஸ்தானத்தை வைணவ சமயத்தைச் சார்ந்த பத்மாசனிச் செட்டிப் பிள்ளைகள் நிர்வாகப் பரிபாலனம் செய்து வருகின்றனர்.

இத் தேவஸ்தானம் ஸ்தாபிக்கப்பட்ட காலம்முதல் ஏறத்தாள கி.பி.1790 ம் ஆண்டு வரை சிறிய உருவிலான சிலா விக்கிரகங்களாகிய ஸ்ரீவேங்கடேச மூர்த்தியாக இருந்த இத் தேவஸ்தான்த்தை 1940 ம் ஆண்டளவில் சகல விக்கிரகங்களையும் பாலஸ்தாபனம் செய்து 1941 ம் ஆண்டில் புனருத்தாரண கும்பாபிஷேகம் மூலஸ்தானம் உட்பட சகல பரிவார மூர்த்திகளுக்கும் நிகழ்த்தினர். பின்னர் இத் தேவஸ்தானத்தில் 1973 ம் ஆண்டில் ஏழு தளங்களை உடைய முதற் கோபுரமான இராஜகோபுரம் உருவாக்கம் பெற்று 1978ம் ஆண்டில் கும்பாபிஷேகம் நடாத்தப் பெற்றது.

இக் கோபுரத் தளங்களில் ஸ்ரீஅரங்கநாதனுடைய திருவடிவம் மற்றும் ஸ்ரீகிருஷ்ணனது லீலைகளும் மற்றும் ஸ்ரீமகாலட்சுமியினதும் ஸ்ரீஆண்டாள் தேவியினதும் சுதை உருவங்கள் வடிக்கப்பெற்று இவ் வேலைகள் யாவும் பூர்த்தியாகி 2003ம் ஆண்டு 10ம் திகதி கும்பாபிஷேகம் இனிதே நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து இத் தேவஸ்தானத்தில் கடந்த 20 ஆண்டுகளாக அந்தந்தக் காலப்பகுதியில் நடைபெறும் மகோற்சவங்கள் யாவும் சிறப்புற நடைபெற்று வந்துள்ளன. இந்நிலையில் 2023.06.02 மீண்டும் இத்தேவஸ்தானம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு சகல புனர்நிர்மானத்துடனும் புதிய வர்ணப் பூச்சுகளுடனும் புதுப்பொலிவுடன் காட்சி தரும் வண்ணைஸ்ரீவேங்கடேசப் பெருமானை தரிசனம் செய்து பகவானின் ஆசியை பெற்றுக் கொள்வோம்.

**"ஆலயம் தொழுவது சாலவும் நன்று"**

## வாழ்த்துச் செய்தி



**பட்டாபிராம் ரிஷிகேசன்**
**செயலாளர்**
**வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்**

அண்ட சராசரமெங்கும் நிறைந்து விளங்கி அனைத்து உயிர்களையும் காத்து அருள்புரியும் ஸ்ரீ வேங்கடேசப் பெருமாள் பாதம் பணிந்து நடக்கவிருக்கும் கும்பாபிஷேக மலரில் எனது பதிவும் இடம்பெறுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இலங்கையில் வைணவ வழிபாடானது வரலாற்றுப் பழமையுடையதாகும். யாழ்குடாநாட்டில் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோவில் வல்லிபுர ஆழ்வார் கோவில். பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவில் என்பன மிகவும் தொன்மைவாய்ந்த ஆலயங்களாகும். இவ்வாலயங்களின் அமைப்பு மற்றும் பூசை முறைகள் என்பன எமது பிரதேசத்தின் பண்பாட்டு விழுமியங்களுக்கு உட்பட்டதாகவும் வைணவ சம்பிரதாயங்களை தன்னகத்தே தனித்துவமாக கொண்டுள்ளதாகவும் காணப்படுகிறது. இவ்வாலயங்களில் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயமும் மிகவும் சிறப்புவாய்ந்த பலநூற்றாண்டு பழமைவாய்ந்த ஏறத்தாழ கி. பி. 14ம் நூற்றாண்டு காலப்பகுதியில் ஸ்தாபிக்கப்பட்ட ஒன்றாகும். வண்ணையம்பதியில் எழுந்தருளி காட்சிதரும் வைணவத்தின் முழுமுதற்கடவுளான ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தனது பக்தர்களை காத்தருள பல அற்புதங்களையும் அதிசயங்களையும் நிகழ்த்தி தென்னிந்திய திருப்பதி தேவஸ்தானத்தின் ஐதீகங்களை பின்பற்றும் ஆலயமாகவும் எழுந்தருளி இருப்பது எம்மண்ணிற்கே உரித்தான பெருமைக்குரிய அம்சமாகும்.

இவ்வாலயம் 14ம் நூற்றாண்டிலிருந்து சிறிது சிறிதாக பல வளர்ச்சி கண்டு தற்போது புதுப்பொலிவுடன் மிகவும் அழகான கட்டமைப்பில் நேர்த்தியான வளர்ச்சிகண்டுள்ளது. இவ்வாலயம் மிகவும் பழமையான காலத்திலிருந்தே தனக்கென ஒரு மகாசபையை உருவாக்கி வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆதீன மகாசபை. யாழ்ப்பாணம் என்ற பெயரில் தனக்கென உருவாக்கப்பட்ட யாப்பின்படி பிறப்பால் வைசிய குலத்தைச் சேர்ந்த பத்மசாலிச் செட்டிகளின் வாரிசில் உதித்த 18 வயதும் அதற்கு மேற்பட்ட வயதினைக் கொண்டவர்களுமான ஆண்களை உறுப்பினராகக்கொண்டு காணப்படுகிறது.

இம்மகாசபை உறுப்பினர்களால் ஆண்டிறுதிப் பொதுக்கூட்டத்தில் நிர்வாகக்குழு ஒன்று தெரிவுசெய்யப்பட்டு அவர்களின் பரிந்துரைக்கு அமைய அனைத்து விடயங்களும் சரியான முறையில் ஆராயப்பட்டு ஆலோசிக்கப்பட்டு அறிக்கைகள் பேணப்பட்டு சிறந்த தீர்மானங்களை மேற்கொண்டு நடாத்தப்பட்டு வருகின்றது. அவ்வாறே இவ்வாண்டு நடைபெறும் கும்பாபிஷேக நிகழ்வும் அனைத்து மகாசபை உறுப்பினர்களின் ஒத்துழைப்போடும் அடியார்களின் ஒத்துழைப்போடும் எம்பெருமான் ஆசீர்வாதத்தோடு இன்று இனிதே நடைபெறுகின்றது. இந்த உன்னதமான பெருவிழாவில் அனைத்து உயிர்களுக்கும் பெருமாளின் அனுக்கிரகத்தை வேண்டிநிற்பதோடு எம்பெருமானுக்கு தினமும் நடக்கவேண்டிய திருவாராதனைகள் எவ்வித குறையுமின்றி மிகச்சிறப்பாக காலம் காலமாக நடைபெற்று வேங்கடேசப்பெருமானின் அருளாட்சியுடன் எங்கும் அன்பும் அமைதியும் மகிழ்வும் நிலவப் பிரார்த்திக்கின்றேன்.

## வாழ்த்ச்செய்தி



**பஞ்சநாதன் ஜெயகிருஸ்ணா**
**பொருளாளர்**
**வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்**
**பெருமாள் தேவஸ்தானம்**

எமது கோவில் ஈழத்திருநாட்டின் வடபால் யாழ் குடாநாட்டில் வண்ணை நகரின் தென்பகுதியில் அமைந்த திவ்ய திருத்தலமே ஈழத்து திருப்பதி எனப்போற்றப்படும் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம். இற்றைக்கு சுமார் அறுநூறு ஆண்டுகளுக்கு முன்னர் நெசவுத்தொழிலை குலத்தொழிலாகக் கொண்ட பத்மசாலி பரம்பரையினரால் சிறியதாக ஆரம்பிக்கப்பட்ட இத்திருத்தலம் இன்று இலங்கையின் மிகப்பிரதான வைணவ ஆலயமாக ஏழு தளங்களையுடைய வானளாவிய இராஜ கோபுரத்தையும் தெற்கு வாசலிலே ஸ்ரீரெங்கநாதருக்கு ஐந்து தளங்களையுடைய ஒரு கோபுரத்தையும் தன்னகத்தேகொண்டு மிளிர்கிறது.

பல வளர்ச்சிப் படிகளைக்கொண்ட இத்திருத்தலம் செலவச்செழிப்புடன் காணப்பட்ட பத்மசாலி பரம்பரையினரால் நன்கு பராமரிக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. கடந்த ஒரு தசாப்த காலமாக நடைபெற்று வந்த பாரிய கட்டுமானப்பணிகள் வேங்கடேசன் அருட்கடாட்ஷத்தினால் இனிதே நிறைவுற்ற நிலையில் இவ்வாண்டு பங்குனி 11ம் நாள் (24.3.2024) எம்பெருமானுக்கு குடமுழுக்கு பெருவிழா நடைபெறும் நிகழ்வு எம்மையெல்லாம் மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்தியுள்ளதென்றால் அது மிகையாகாது.

சென்ற ஆண்டு (2.6.2023) பாலஸ்தாபனம் செய்யப்பட்டு திருப்பணி வேலைகள் செய்து கும்பாபிஷேகம் செய்ய பெருந்தொகைப்பணம் தேவைப்பட்டபோது பணவுதவி செய்த உள்நாட்டு தர்மசீலர்களுக்கும் வெளிநாடுகளிலிருந்து பணம் அனுப்பியவர்களுக்கும் கும்பாபிஷேக விழா நடைபெற்றபோது விழா இனிதே சிறப்புற சகல வழிகளிலும் எனக்கு ஒத்துழைப்பு நல்கிய அனைத்து அன்பர்களுக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

## வாழ்த்துச்செய்தி



**மதுரகவி. காரை. எம்.பி. அருளானந்தன் M.A தெய்வீகப்பேருரையாளர், வர்ணனையாளர்**

செந்தமிழும் சைவநெறியும் சால்புறத்தழைத்தோங்கும் ஈழவள நாட்டின்கண் வைஷ்ணவத் தலங்கள் பலவுள்ளன. இவற்றில் ஈழத்துத் திருப்பதி என அழைக்கப்படும் ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாள் தேவஸ்தானமும் ஒன்றாகும்.இத்தலம் பண்டுதொட்டு நவக்கிரக வழிபாட்டுக்கு பிரசித்திபெற்று விளங்குகிறது. பிரதான வாயிலிலே ஏழு மடங்களைக்கொண்ட நீண்டுயர்ந்த இராஜகோபுரமும் இதன் இரு புறத்தேயும் மணிக்கோபுரங்களும் அமைந்து காணப்படுகின்றன. இராஜகோபுரத்தில் இடம்பெறும் கதை விக்கிரகங்கள் திருமாலின் தச அவதாரத்தையும் ஸ்ரீ இராமாயண. ஸ்ரீமத் பாகவத புராணங்களின் சில பகுதிகளையும் நினைவூட்டுகின்றனர். கர்ப்பக்கிரகத்தில் ஸ்ரீ வேங்கடேஸ்வர மூர்த்தி எழுந்தருளியுள்ளார் அவர் கையிலே சங்கை ஏந்தியிருக்கின்றார். அச்சங்கானது ஊது மிடத்து உண் [illegible] தான் பிரணவப்பொருள் என்பதை அரங்கன் அறிவுறுத்துகின்றான்.இத்தகு பெருமைகளைக்கொண்ட நாராயணன் யாழ். வண்ணையம்பதியிலே எழுந்தருளி அருள்பாலிக்கின்றான் பெருமானை சூழ ஆழ்வார்களுடைய திருக்கோவில். ஸ்ரீ மகாலட்சுமி. நந்தகோபாலர். ஸ்ரீராமர் ஆண்டாள். ஆஞ்சநேயர். நவக்கிரகபீடம் ஆகிய பரிவார மூர்த்திகளும் அழகிய திருக்கோவில்களிலிருந்து அருள் பாலிக்கின்றனர் இத்தகு பெருமைகளை உடைய ஈழத்து திருப்பதியானுக்கு இன்று (24.03.2024) ஞாயிற்றுக்கிழமை குடநீராட்டு விழா நடைபெறுகின்றது.

திருக்கண்டேன் பொன் மேனிகண்டேன், திகழும்
அருக்கன் அணி நிறமும் கண்டேன் – செருக்கிளரும்
பொன் ஆழி கண்டேன், புரிசங்கம் கைகண்டேன்
என் ஆழி வண்ணன் பால் இன்று

**ஆதீன மகா சபை**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சுகாதாரச் சீர்கேடு

# 14 உணவகங்களுக்கு ரூ.174,000 தண்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

சங்கானைப் பகுதியில் காலாவதியான உணவுப் பொருள்கள் விற்பனை செய்த 14 உணவகங்களுக்கு நீதிமன்றால் ஒரு இலட்சத்து 74 ஆயிரம் ரூபா தண்டம் அறவிடப்பட்டுள்ளது.

சங்கானை, வட்டுக்கோட்டை, அராலி, சுழிபுரம் பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்கொண்ட திடீர்ப் பரிசோதனை நடவடிக்கையிலேயே குறித்த உணவகங்களிலிருந்து காலாவதியான உணவுப்பொருள்கள், பழுதடைந்த உணவுப்பொருள்கள் என்பன மீட்கப்பட்டன.

அதனையடுத்து 14 உணவகங்களது உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு மல்லாகம் நீதிமன்றில் கடந்த வியாழக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது 14 உணவகங்களுக்கும் ரூபா ஒரு இலட்சத்து 74 ஆயிரம் குற்றப்பணம் செலுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (ப-26-555)



தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலய மகாகும்பாபிஷேகம் நாளை 25 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.25 மணிக்கு நடைபெறவுள்ளது. ஆலய கும்பாபிஷேக காலப்பகுதியை முன்னிட்டு அண்மைய நாள்களாக தினமும் இரவு வேளையில் ஆலயத்தின் தெற்கு வீதியில் அமைக்கப்பட்டுள்ள பிரத்தியேக மேடையில் மாணவர்கள் மற்றும் சிறுவர்களின் கலைநிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. (ம-66)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 15 . 11 . 1940

மறைவு 05 . 04 . 2023

**அமரர் சுப்பிரமணியம் சுந்தரேஸ்வரி**

**திதி: பூரணை**

எம் ஆருயிர் அன்னையே
ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும்
அனுதினமும் நீங்கள்
அருகில் இருப்பதை உணர்கின்றோம்
கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும் எங்கள்
முன்னே உங்கள் முகம் எந்நாளும்
உயிர் வாழும்

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்தித்துக்கொள்கின்றோம்.

கே.கே.எஸ். வீதி,
சிந்துஜன் ஒழுங்கை,
இணுவில் மேற்கு, இணுவில்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## நீதிராஜா கஜேந்திரன்

தோற்றம் 28.06.1984

மறைவு 23.03.2024

நாரந்தனையை பிறப்பிடமாகவும் ஆறாம் ஒழுங்கை பலாலி வீதி கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நீதிராஜா கஜேந்திரன் அவர்கள் நேற்று (23.03.2024) அன்று காலமானார்

அன்னார் காலஞ்சென்ற நீதிராஜா - அருட்செல்வி (மஞ்சு) தம்பதியரின் அன்பு மகனும், ஹர்ணிஸ்ஸின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற யதுகுலசிங்கம் -சரோஜினிதேவி, காலஞ்சென்ற கணேஸ் மங்களம் ஆகியோரின் பேரனும், கோபிகன், நிசாந்தி, ஜீவிதா, சயந்தன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், சசிரேகா பிரசன்னா, லவன்ராஜ், ஜெனனி ஆகியோரின் மைத்துனரும், ஹர்சிகா, ஹன்சிக் ஆகியோரின் சித்தப்பாவும், ஜர்விஷ், ஷமிரா ஆகியோரின் பாசமிகு மாமனும், அரவிந்தன் -குகதர்சினி, காலஞ்சென்ற வைகுந்தன் -சுதர்சினி, சிவதீபன் -லோபனா ஆகியோரின் மருமகனும், மேகலா -அருள்முருகன், சியாமினி -காண்டிபன் ஆகியோரின் பெறா மகனும் ஆவார் .

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (24.03.2024) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 2.00 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

TP: 077 170 2938
077 446 965

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 28341) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவுக்கு வருவோரை கட்டுப்படுத்தத் தீர்மானம்

கொழும்பு, மார்ச் 24

தற்காலிக விசாவில் கனடாவுக்குள் பிரவேசிப்பவர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த கனேடிய அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

கனேடிய குடிவரவு அமைச்சர் மார்க் மில்லர் இது தொடர்பான அறிவிப்பை விடுத்துள்ளார். கனடாவில் தற்போது 6.2 என்ற வீதத்தில் தற்காலிகக் குடியிருப்பாளர்கள் காணப்படுகின்றனர் என்றும் இந்த எண்ணிக்கையை வரவிருக்கும் இலையுதிர்காலத்தில் 5 வீதமாகக் குறைப்பதற்கு ஆளும் லிபரல் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்றும் மார்க் மில்லர் தெரிவித்துள்ளார்.

கனடாவுக்குத் தற்காலிக விசாவில் வருபவர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. இதனால் வீட்டு வசதி சுகாதாரம் போன்றவற்றில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. கடந்த ஆண்டு பத்து இலட்சம் பேர் கனடாவுக்குள் வந்துள்ளனர். மொத்தமாக 40 இலட்சம் பேர் வரையில் தற்போது கனடாவில் தங்கியுள்ளனர். இதன் காரணமாக புதிய பொருளாதாரப் பிரச்சினை களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளதாக வேலைவாய்ப்பு அமைச்சர் ராண்டி பிசனோல்ட் சுட்டிக்காட்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-6)



தென்மராட்சிப் பிரதேச சமுர்த்தி அலகின் வீடமைப்புத் திட்டத்தில், தெரிவுசெய்யப்பட்ட மந்துவில் வடக்குப் பிரிவைச் சேர்ந்த சமுர்த்திப் பயனாளியால் அமைக்கப்பட்ட வீடு, பிரதேச சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் திருமதி உமாதேவி ஆறுமுகம் தலைமையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. (ப-9)

# சட்டவிரோத முறையில் மரங்கள் கடத்தல்

## மூவர் கைது

முல்லைத்தீவு, மார்ச் 24

விசுவமடுவில் சட்டவிரோதமான முறையில் காட்டு மரங்களை வெட்டி, உழவு இயந்திரத்தில் ஏற்றியவர்களுக்கெதிராகப் புதுக்குடியிருப்பு வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்தால் சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:- திணைக்களத்தினருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய, இராணுவத்தினர் விசேட அதிரடிப் படையினருடன் மேற்கொண்ட சோதனையில் ஒருவர் தப்பியோடிய நிலையில் இருவர் திணைக்களத்தினரால் கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட இருவரையும் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்திய போது தப்பியோடிய சந்தேக நபர் நீதிமன்றத்தில் சரணடைந்த நிலையில் மூவரையும் தலா ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில்செல்ல அனுமதி வழங்கப்பட்டதோடு அவர்களுக்கு வழக்குத் தவணையும் இடப்பட்டது. (ப-125)


## மரண அறிவித்தல்



ராஜராஜசிரீ நகுலேஸ்வரக்குருக்கள் குமாரசுவாமிக்குருக்கள்

கீரிமலை நகுலேஸ்வரத்தை வசிப்பிடமாகவும், கனடா, கீரிமலையை வசிப்பிடமாகவும் கொண்ட ராஜராஜசிரீ நகுலேஸ்வரக்குருக்கள் குமாரசுவாமிக்குருக்கள் புதன்கிழமை காலை சிவவாயுஜ்யம் அடைந்தார்.

அன்னார் கீரிமலை ராஜராஜசிரீ நகுலேஸ்வரக்குருக்கள்-வேதநாயகி தம்பதியினரின் மூத்த புதல்வரும், நீர்வேலி காலஞ்சென்ற சந்திரசேகரக் குருக்கள் சுப்புலஷ்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், தாட்சாயினியின் அன்புக் கணவரும், சங்கரி, லஹரி ஆகியோரின் அன்புத் தந்தையும், கங்காதேவி, கலாவதி ரங்கனாதீக குருக்கள், கெங்காதரக் குருக்கள் நாராயணி, ரமணியம்பாள் காலம் சென்ற சிவகாமசுந்தரி (பாப்பா) ஆகியோரின் சகோதரரும், குமாரசாமி சர்மா, இராமநாதசர்மா, கேதீஸ்வர குருக்கள், சீதாலட்சுமி, வெங்கட்ராமன், சுலோசனை ஆகியோரின் மைத்துனரும், மாவிட்டபுரம் மாவை ஆதீனம் மகாராஜசிரீ இரத்தின சபாபதி குருக்கள் அவர்களின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 24.03.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணிக்கு இடம்பெற்று கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.

கீரிமலை 077 644 3154

(CS 28340) V-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 08 . 1961



மறைவு 18 . 03 . 2024

செல்வி மஞ்சுளவல்லி யோகராஜா

யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி மஞ்சுளவல்லி யோகராஜா அவர்கள் கடந்த (18.03.2024) திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற யோகராஜா - மகாலட்சுமி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், சௌந்தரராஜன், சியாமளா (இந்தோனேசியா), சசிகலா (லண்டன்), ஸ்ரீதரன் (மேற்பார்வையாளர் - போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), நிர்மலா (நியூசிலாந்து), வத்சலா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், Dr.கலைச்செல்வி, காலஞ்சென்ற அருந்தவராஜா (இந்தோனேசியா), தர்மராஜா (லண்டன்), கவிதா, தயா (நியூசிலாந்து), சுரேஷ் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், வித்யா, சம்ஷிகா, ஹரீஷ் ஆகியோரின் பாசமிகு அத்தையும், சௌபர்ணிகா, ரிஷிதரன், ரிஷ்னிகா, சந்தோஷிகா, பிரகீன், நிரூபன், நிகேதன், சைலன் ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும், யுவன், ரிஷிகா, சஷ்வின் ஆகியோரின் அன்புமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.03.2024) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் காலை 08.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வண்ணார்பண்ணை கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.

இல 6/1 பழம் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

சுரேஷ் - 077 793 7209, ராஜன் - 074 007 7075

மாலா - 077 707 5861, கண்ணன் - 077 424 8749

(CS 54308) S-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 07 . 1949



மறைவு 23 . 03 . 2024

கந்தன் கார்த்திகேசு

சாவகச்சேரியைச் சேர்ந்த கந்தன் கார்த்திகேசு அவர்கள் நேற்று (23.03.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் அரியமலரின் அன்புக் கணவரும், திருக்குமார் (கனடா), டனிஸ்குமார் (கனடா), பாலேஸ்குமார் (CTB) ஆகியோரின் அன்புத் தந்தையும், தயாளினி, சுபாஜினி, பிரபாலினி ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிஷாணன், லதுர்ஷன், வர்ஷா, பவிஷானன் லக்சிகா, பிரவீன், ருக்ஷானன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2024) ஞாயிற்றுக்கிழமை பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 800 2791
+15146771059


தகவல்: குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொல்கத்தாவுக்கு

# மரண பயத்தைக்காட்டிய சன்ரைஸஸ் ஹைதரபாத்

209 ஓட்டங்களை விரட்டிய சன்ரைஸஸ் ஹைதரபாத் அணி இறுதியில் 4 ஓட்டங்களால் வெற்றியைத் தவறவிட்டது. ஒரு கட்டத்தில் ஆட்டம் முழுமையாக கொல்கத்தா பக்கம் சாய்ந்தாலும் இறுதி நேரத்தில் சன்ரைஸஸ் அணி 'மரண பயத்தை' காட்டியது.




ஐ.பி.எல். தொடரின் நேற்றைய நாளுக்கான இரண்டாவது ஆட்டத்தில் சன்ரைஸஸ் அணியும், கொல்கத்தா நைட் ரைடஸ் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சன்ரைஸஸ் அணி களத்தடுப்பை தேர்வு செய்தது.

கொல்கத்தா அணிக்கு பில்ட் சோல்ட் நல்ல தொடக்கத்தை கொடுத்தாலும் ஏனையோர் அவ்வளவாக கைகொடுக்கவில்லை. இருப்பினும் இறுதியில் ருத்ர தாண்டவமாடிய அன்ரூ ருசல் 25 பந்துகளில் 64 ஓட்டங்களை விளாசி அந்த அணியை 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 208 ஓட்டங்களைப்பெற உதவினார். பந்து வீச்சில் நட்ராஜன் 3 இலக்குகளைக் கைப்பற்றினார். பதிலளித்து ஆடிய சன்ரைஸஸ் அணி ஆரம்பத்திலிருந்து சுமாராக ஆடியது. சீரான இடைவெளியில் இலக்குகளும் இழக்கப்பட்டன. ஆட்டம் கொல்கத்தா பக்கம் சரிந்தபோதும், ஹென்றிச் ஹாலீசன் தனித்துப் போராடி இறுதிப் பந்து வரையில் ஆட்டத்தை மாற்ற முனைந்தார். இருப்பினும் இறுதிப் பந்துப் பரிமாற்றத்தில் 13 ஓட்டங்கள் வெற்றிக்குத் தேவை என்ற நிலையில் ஹர்சித் ரானா பந்து வீசினார். முதலாவது பந்திலேயே ஆறு ஓட்டங்கள் அடித்து வெற்றியை நெருங்கினார் ஹாலீசன். அடுத்த பந்தில் ஓர் ஓட்டம் எடுத்தார். மூன்றாவது பந்தில் அஹமட்டின் இலக்கை வீழ்த்தி நெருக்கடியை ஏற்படுத்தினார். மறுபந்தில் ஓர் ஓட்டம் கிடைக்க மீண்டும் துடுப்பெடுத்தாடும் முனைக்கு வந்த ஹாலீசனின் இலக்கை அடுத்த பந்தில் வீழ்த்தினார் ரானா. இறுதிப் பந்தில் 5 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி அல்லது 4 ஓட்டங்களைப் பெற்றால் சுப்பர் ஓவர் என்ற நிலையில் அந்தப் பந்தை எதிர்கொண்ட பட்குமின்ஸ் ஓட்டம் எதனையும் பெறாத நிலையில் கொல்கத்தா அணி 4 ஓட்டங்களால் வெற்றியைப் பெற்றது. (ஒ-5)

## மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 06 . 1942



மறைவு 22 . 03 . 2024

### அம்பலவாணர் செல்வராணி

காரைநகர் வேதரடைப்பை பிறப்பிடமாகவும், கனடாவை (மார்க்கம்) வதிவிடமாகவும் கொண்ட அம்பலவாணர் செல்வராணி அவர்கள் 22.03.2024 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (மாஸ்டர்) - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நமசிவாயம் - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், அம்பலவாணரின் அன்பு மனைவியும், சதானந்தன் (கனடா), மஞ்சுபாசனி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஏகாம்பரநாதன், சிவசக்தி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், வினிதா, தீபக், சிந்துஜா, யாதவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், காலஞ்சென்ற சுந்தரராஜா, தணிகாசலம், காலஞ்சென்ற புவீந்திரராஜா, கிருபைநாதன்

ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவபாக்கியம், அமிர்தாம்பிகை, கமலாதேவி, விமலராணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

சதானந்தன் (மகன்) : 905 201 2820
மஞ்சு (மகள்) : 44 7946 275 640
பரம் (மருமகன்) : 44 7980 109 482

தகவல்: குடும்பத்தினர்.

(CS/25850) J-1

# சாம் கரன் அதிரடி சரிந்தது டில்லி

சாம் கரனின் அதிரடி அரைச் சதத்தின் உதவியுடன் டெல்லி கப்பிரல்ஸை வீழ்த்தி தனது வெற்றியைப் பதிவு செய்தது பஞ்சாப் கிங்ஸ் அணி.

ஐ.பி.எல். தொடரின் இரண்டாவது ஆட்டத்தில் பஞ்சாப் கிங்ஸ் மற்றும் டெல்லி கப்பிரல்ஸ் அணிகள் மோதின. விபத்தில் சிக்கி காயமடைந்த ரிசப் பந்த் டெல்லி அணிக்கு மீண்டும் திரும்பி தலைமை தாங்கினார். நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பஞ்சாப் முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

அதற்கு அமைவாக முதலில் துடுப்பெடுத்தாடிய டெல்லி அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 174 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பில், இம்பக்ட் பிளேயராக உள்நுழைந்த அபிசேக் 10 பந்துகளில் 32 ஓட்டங்களை விளாசினார். அதிகம் எதிர்பார்க்கப்பட்ட டேவிட் வோர்னர் 21 பந்துகளில் 29 ஓட்டங்களையும் ரிசப் பந்த் 13 பந்துகளில் 18 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் பஞ்சாப் சார்பில், அர்தீப் சிங், ஹர்சல் பட்டேல் இருவரும் தலா 2 இலக்குகளை வீழ்தினர்.

பதிலளித்த பஞ்சாப் அணி 19.2 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 177 ஓட்டங்களைப் பெற்று வெற்றியைப் பதிவு செய்தது. 47 பந்துகளில் 63 ஓட்டங்களை சாம் கரனும், லிவிங்ஸ்டன் 21 பந்துகளில் 38 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் குல்தீப் யாதவ், காலில் அஹமட் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக சாம் கரன் தெரிவானார். (ஒ-5)

**காணி விற்பனைக்கு**

தாவடி மானிப்பாய் வீதி, தாவடி வடக்கில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 255 0807

**காணி விற்பனைக்கு**

முல்லைத்தீவில் 2 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு

074 362 5831
071 109 5056

(CS 54503) S-1

**விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி வசதிகள்**


சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show money) வசதிகள்.

074 173 7684

S-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 16 . 04 . 1951



மறைவு 20 . 03 . 2024

### சொக்கலிங்கம் தர்மகுலசிங்கம்

**(ஓய்வுபெற்ற உப அதிபர்-யா/ நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்)**

நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சொக்கலிங்கம் தர்மகுலசிங்கம் (ஓய்வுபெற்ற உப அதிபர் - யா/ நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்) அவர்கள் கடந்த 20.03.2024 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சொக்கலிங்கம்- நாகம்மா தம்பதியரின் அன்பு மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான பரமசாமி - அழகம்மா தம்பதியரின் மருமகனும், சுகிர்தராணியின் அன்புக் கணவரும், மோகனதாஸ் (கனடா), கஜேந்திரதாஸ் (உதவித் தபால் அதிபர், யாழ்ப்பாணம்), கிருஷ்ணதாஸ் (அமெரிக்கா), சுதர்ஷினி (கனடா), நிர்மலதாஸ் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், கோபாலசிங்கம் (பிரான்ஸ்), ஜெயவீரசிங்கம் (ஓய்வுபெற்ற பிரதி அதிபர்), மன்மதராஜலிங்கம் (ஓய்வுபெற்ற கனிஷ்ட பரிசோதகர்), புண்ணியசிங்கம் (இந்தியா), விஜயசிங்கம் (கட்டட ஒப்பந்தகாரர்), குமாரசிங்கம் (யாழ். மாநகரசபை), குணசிங்கம் (யாழ் மாநகரசபை), கலைவாணி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வக்கண்ணன் (அஞ்சல் உதவியாளர், யாழ்ப்பாணம் அஞ்சல் அலுவலகம்), கீர்த்தனா (ஆசிரியர், யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும், டாருக்ஷாந் (கனடா), ஜாக்ஷினி (கனடா), கிருத்திக்ஷாந் (கனடா), தன்வின்சாந் (கனடா), கவிஸ்ரி (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2024) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10.00 மணிக்கு தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

[illegible]ஸ்வரி வீதி,
நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
த.கஜேந்திரதாஸ் (மகன்)
076 267 1530

(CS 54498) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலைவாய்ப்பு அறிவித்தல்

**Executive Accounts and Admin**
**(Female, Male)**
**யாழ்ப்பாணக்கிளை**

- தகைமைகள் : க.பொ.த உயர்தர சித்தி
  - : ஆங்கில மொழியில் சிறந்த தொடர்பாடல் திறன்
  - : சிங்கள மொழி தெரிந்திருத்தல் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
  - : சிறந்த கணினி அறிவு
  - : மோட்டார் சைக்கிள் Licence பெற்றிருத்தல்
- வயது : 25க்கு மேற்பட்டவர்

**உங்கள் சுய விபரக்கோவையை 10 நாட்களுக்குள் கீழ்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.**
info@tradefirst.lk

(CS 54289) S-1

## காணி விற்பனைக்கு

**பருத்தித்துறை வீதியில் புத்தூர்ச் சந்தியிலிருந்து - மட்டுவில், சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து 100m இல் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் காணித் துண்டுகள் விற்பனைக்கு உண்டு.**

**2 பரப்பு - 4 1/2 லட்சம்.**

**தரகர் தேவையில்லை**

பார்வையிடும் நேரம்:
8.30 AM - 6.00 PM

தொடர்புகளுக்கு: 076 659 0583
074 260 0617
076 109 8504

(CS 28227) A-1

## வேலைவாய்ப்பு

**நீங்கள் 18-35 வயதிற்கு உட்பட்டவரா?**
குறுகிய காலத்தில் அதிகளவான வருமானம்
**சுன்னாகம், யாழ்ப்பாணம் கிளைக்கான வேலைவாய்ப்புக்கள்**

**கல்வித் தகைமை : G.C.E O/L**

**உடனடி வேலைவாய்ப்பு ஆண், பெண் இருபாலாரும்.**

1. Sales Executive
2. Sales Manager
3. Assistant Sales Manager
4. Management Assistant
5. Field Staff

Salary:-
Basic Salary + Commission

உங்கள் சுயவிபரக் கோவையினை கீழ் உள்ள **Whatsapp இலக்கத்திற்கு அனுப்பவும்.**

077 017 5674
077 5042 507
077 9671 926

(CS 28326) A-1

## A/L இணைந்த கணிதம்

2024, 2025 மாணவர்களுக்கு பிரத்தியேகமாக வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்பு:- 077 832 4002

## வாகனம் விற்பனைக்கு

3 கியூப் TATA டிப்பர் விற்பனைக்கு உண்டு

077 457 0267

(CS/54487) J-1

## வேலையாள்கள் தேவை

தச்சுவேலை ஆட்களும், தச்சுவேலை பழக விருப்பம் உடையோர், வாகன சாரதி **(TATA xanon)** என்பவற்றுக்கு எமது நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.
தங்குமிட வசதி உண்டு.

(cs 54479) (N-1)

**பிறவுண் றோட் [கலட்டி]**
077 367 7099

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் திருநெல்வேலி அம்மாச்சி உணவகத்திற்கு முன்பாக 1 3/4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**
விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தரகர்கள் தொடர்பு கொள்ளவேண்டாம்.

(CS/54452) J-1

தொடர்பு:- 076 206 1703

## விற்பனைக்கு

கோண்டாவிலில் கே.கே.எஸ் வீதியை முகப்பாகக் கொண்ட காணியும் மாவிட்டபுரத்தில் 4 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

Contact Number
+ 94 77 227 6181
Dayansan Kalaruban

## SPOKEN ENGLISH WITH GRAMMAR

**யாழ் இந்துக்கல்லூரி வீதியில் பேச்சுப் பயிற்சி வகுப்புகள்.**
**ஒவ்வொரு மாணவருக்கும் அவரது அடிப்படையில் இருந்து தெளிவாக கற்பிக்கப்படும்.**
**தனி, குழு வகுப்பு**
**ஆண்டு 7 to GCE OL , AL, பட்டதாரிகள் - தொழில்புரிவோர்.**

(cr. 41938) (N-1)

K.Ganesh B.A 077 766 8725

## காணி விற்பனைக்கு

**நாரந்தனை, ஊர்காவற்றுறையில் (Kayts) 13.5 பரப்புக் காணி, வீடு, மற்றும் 50 ற்கும் மேற்பட்ட பனை மரங்களுடன் விற்பனைக்கு உண்டு.**
பரப்பு 3 1/2 லட்சம் (Rs - 350,000).
விலை பேசித் தீர்மானிக்கலாம்.
தரகர் தேவையில்லை.

(CS/28318) J-1

077 783 9699, 070 783 9699

## வீடு வாடகைக்கு

சுண்டுக்குளி பாடசாலைக்கு அருகாமையில் மேல் வீடு வாடகைக்கு விடப்படும்.

070 182 0630

## வேலையாட்கள் தேவை

**நிறுவனம் ஒன்றிற்கு கட்டட நிர்மாணப் பணிக்கு மேசன், கூலி ஆட்கள் தேவை.**
(திருநெல்வேலியை அண்டிய பகுதியில்)

தொடர்பு:- 077 873 9169

## மணமகள் தேவை

1994, யாழ் இந்து (V) கௌரவ குடும்பம், பூரட்டாதி ஏழு செவ்வாய் கிரக பாவம் 60 உடைய **(Private Bank Officer)** மணமகனுக்கு மணமகள் தேவை.

077 880 8659

## தவறவிடப்பட்டது

**மானிப்பாய் மருதடி விநாயகருக்கு அண்மையில் உள்ள வீதியில் தேசியஅடையாள அட்டை (841521854V) சாரதி அனுமதிப் பத்திரம், வங்கிஅட்டைகளுடன் எனது மணிபேஸ் தொலைந்துவிட்டது கண்டெடுத்து தருபவருக்கு தக்க சன்மானம் வழங்கப்படும்.**

(CS/28304) J-1

தொடர்பு:- 077 378 1397

## மெய்வன்மைப் போட்டி

மட்டுவில் தெற்கு, சரஸ்வதி வித்தியாலயத்தின் வருடாந்த மெய்வன்மைத் திறனாய்வுப் போட்டி, அதிபர் ம.லினாஷ்குமார் தலைமையில் எதிர்வரும் 27 ஆம் திகதி புதன்கிழமை இடம்பெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராகத் தென்மராட்சிக் கல்வி வலய கல்வி அபி விருத்திப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் மு.ஜெகதாசன், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி மகளிர் கல்லூரிஅதிபர்திருமதி த.பாலசுப்பிரமணியம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ப-159)

## காணி விற்பனைக்கு

**புலோலி கொடிகாமம் வீதியில் அமைந்துள்ள 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

077 160 7635, 077 533 3890

## மணமகள் தேவை

துன்னாலை இந்து (V) 1997 திருவாதிரை, **லண்டன் பிரஜை மணமகனுக்கு** பொருத்தமான **மணமகள் ( பட்டதாரி ) தேவை.**
தற்பொழுது யாழ்ப்பாணத்தில் உள்ளார்.

(CS/54485) J-1

Whats app: +0044 783 235 4017

## நீர்க்கசிவை தடுப்பதற்கு

**Finex** ஸ்தாபனத்தாரின் ஏகவிநியோகஸ்தர்களிடம் இருந்தும் உலகத்தரமிக்க இரசாயன பொருள்களை விலைக் கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.
**போலிகளைக்கண்டு ஏமாறாதீர்கள்**

5% விசேட விலைக்கழிவு



North and East Engineering
55 Stanly Road, Jaffna, Srilanka.
FINEX
021 222 2363, 077 524 4177, 077 232 3000
www.northandeastengineering.com

## காணி விற்பனைக்கு உண்டு

**நெல்லியடி நகரத்தில் 10 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு**

- நெல்லியடி நகரத்திலிருந்து 2 km தூரத்தில்
- விக்கினேஸ்வரா வித்தியாலயத்திலிருந்து 500m தூரத்தில்
- உச்சி அம்மன் கோயில் அருகாமையில்
- 16 அடிப்பாதையுடன் இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பெற்றோல் செற் முன் வீதியில் 2 Km தூரத்தில் நெல்லியடி
- பொலிஸ் நிலைய அருகாமை வீதியில் 2 Km தூரம்
- குடியிருப்புகள் சூழ உள்ள காணி நன்னீர் ஊற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை ஐந்து இலட்சம் ரூபாய் மட்டும் (500 000/=)

(CS24035) (N-1)

பார்வையிடும் நேரம் காலை 8.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை
தொடர்பு: 071 173 3911 / 076 853 5022

## கொழும்பு விலையில் யாழ்ப்பாணத்தில்...

**33 வருடகால பூர்த்தியை முன்னிட்டு மலிவு விலையில்**

புறொயிலர், கல்பேட், ஊர்ச்சேவல், பேரன்ஸ், முட்டைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளமுடியும்

- * 24 மணிநேர சேவை
- * யாழ். மாவட்டம் முழுவதும் Transport இலவசம்
- * முட்டை சில்லறை - 40 /= (Mediam)
  மொத்தம் - 39 /= (Mediam)
- * பெரிய முட்டை சில்லறை - 44/=
  மொத்தம் - 43/=
- * Halal Fresh Chicken (ஹலால் இறைச்சி)
- * புறொயிலர் இறைச்சி - 1250 /=
- * புறொயிலர் இறைச்சி மொத்தமாக - 1100 /=
- * கல்பேட் - 1kg- 1000 /=
- * பேரன்ஸ் - 1 kg இறைச்சி 1400/=
- * ஊர்க்கோழி -1 kg 1250 /=

(cs.28322) (N-1)

**New City Farm**
8,8A Sinnakadai Market, Jaffna,
T.P.: 021 430 3354 / 076 3593354

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 vilambaradvt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.03.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 08

# சஞ்சீவி


Registered as a Newspaper

இரவு, இரவாக நீள்வதில்லையே
காலைப்பொழுதைக் கைகளில் தந்துவிட்டு
இரவு கரைந்து கொள்ளும்.
தமிழர் தேசம் பணிந்திடாது.
தலைவன் இருக்கத் தளர்ந்திடாது!

புதுவை இரத்தினதுரை

மலை : 33 வள்ளுவர் ஆண்டு : 2055 பங்குனி 11 ஞாயிற்றுக்கிழமை (24.03.2024)





# பழிவாங்கும் வெறி பறிபோன உயிர்

## குருதியை உறைய வைக்கும் ஒரு கொலை 'ரிப்போர்ட்'!

உளவாளி + ஜெ.சுலக்சன்

**11.03.2024**
**இரவு மணி 9.12.**

வட்டுக்கோட்டை கோட்டைக்காடு மருத்துவனை.
"விர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்!"
இருள் மண்டிக்கிடந்த மருத்துவமனை ஒழுங்கைக்குள் சீறிப்பாய்ந்து வந்தது ஒரு மண்ணிறக் கார். கண்ணைக் கூசவைக்கும் வெளிச்சத்தைப் பாய்ச்சியபடி மின்னல் வேகத்தில் மருத்துவமனை வளாகத்துக்குள் புகுந்து-
ஒரு வட்டமடித்து-
இருள் அடர்ந்திருந்த மாமரத்தடியில் நின்றபடி-
அந்தக் கார் உறுமிக்கொண்டிருந்தது.
திறந்து கிடந்த அதன் பக்கவாட்டுக்கதவுகள் ஏதோவொரு அனர்த்தம் நிகழ்ந்திருப்பதை உணர்த்தின. காருக்குள்ளிருந்து இருவர் இறங்கினர். ஒருகணம் நிலைமையை நோட்டமிட்டவர்கள், அதற்குப் பின் கொஞ்சமும் தாமதிக்காமல் செயலில் இறங்கினர்.
திறந்திருந்த காரின் பக்கவாட்டுக் கதவுக் கால், உள்ளிருந்து ஏதோவொன்றைத் தர தர வென வெளியே இழுத்தனர். அது குருதிக்குள் குளித்தபடி, குற்றுயிராகக் கிடந்த ஒரு இளைஞன். ஏதோவொரு சாக்குமூடையை இழுப்பது போல அவர்கள் இழுத்த இழுப்பில், அந்தக் குற்றுயிர் இளைஞனின் உடல் அப்படியே நிலத்தில் விழுந்தது.

"மடார்!!

விழுந்த வேகத்தில் அந்த மாமரத்தின் ஓரமாகக் கட்டப்பட்டிருந்த சிமெந்துக் கட்டில் பட்டு அதிர்ந்தது இளைஞனின் தலை. எஞ்சியிருந்த உயிரைக் கையில் பிடித்தபடி அவன் முனகத் தொடங்கினான். ஆனால் காரில் இருந்து இறங்கியவர்களுக்கு அவனது அவலக்குரலோ, தலை சிமெந்தில் எக்குத்தப்பாக மோதியதோ ஒரு பொருட்டாகவே தெரியவில்லை. அந்த இளைஞனை அப்படியே விட்டுவிட்டு அவர்கள் புறப்படத் தயாரான போது, மருத்துவமனை ஊழியர்கள் அவர்களைத் தடுத்தார்கள்.
" என்ன . இப்பிடி ஒராளைக் கொத்திக் குதறிப்போட்டு கொண்டந்து போட்டிட்டு போறிங்கள்? எங்கட ஹொஸ்பிட்டலில இப்பிடிக் கடும் காயத்துக்கு ட்ரீமெண்ட் செய்யிற வசதியில்லை. யாழ்ப்பாணம் கொண்டு போங்கோ"
காரில் ஏறச் சென்ற இருவரும் மெல்லத் திரும்பினர். இருள் அவர்களின் முகத்தை இன்னும் கோரமாக்கிக் காட்டியது.

"இவனை அம்புலன்ஸில கொண்டுபோங்கோ, இன்னொரு ஆளையும் வெட்டிப்போட்டு கொண்டு வாறம்"
அலட்சியமாக இந்த வார்த்தைகளை உதிர்த்துவிட்டு, இன்னமும் உறுமியபடி இருந்த அந்தக் காரில் ஏறி, இருளில் விரைந்து மறைந்தனர். கார் சென்ற சில நிமிடங்களுக்குள்ளேயே மருத்துவமனை ஊழியர்கள் துரிதமாகச் செயற்பட்டு, மருத்துவருக்கும், அம்புலன்ஸுக்கும் அறிவித்தனர். அதற்கிடையில் குற்றுயிராகக் கிடந்த இளைஞனின் தந்தையும், பொலிஸ்காரர்களும் அங்கு வந்துவிட்டனர். மகனை மாமரத்தின் கீழே குருதிச் சேற்றுக்குள் குற்றுயிரும் குலையுயிருமாகக் கண்ட தந்தைக்கு உலகம் தலைகீழான உணர்வு.
"பவி..!" என்று குரல் தழதழக்க ஓடிச்சென்று அவனைத் தன் மடியில் ஏந்திக் கொண்டார். அவன் அந்த இறுதிக்கணத்திலும், தன் வலியையும் மீறி ஏதோ சொல்ல எத்தனித்தான். ஆனால் முடியவில்லை. வாயால் குருதிதான் வந்ததே தவிர வார்த்தைகள் வரவில்லை. மருத்துவரும் அம்புலன்ஸும் வந்துவிட, அவன் யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டான்.
அப்போதும் தந்தை அவனை ஏந்தியிருந்தார்.மெல்லமெல்ல அவன் உயிர் அடங்கிக் கொண்டிருப்பதை அந்தத் தந்தையால் சர்வநிச்சயமாக உணரமுடிந்தது. யாழ்ப்பாணம் வந்து சேரவும், அந்த இளைஞனின் உயிர் பிரியவும் சரியாக இருந்தது.

## சேராத இடம்சேர்ந்த பவித்திரன்

***பவித்திரன் .***
***வெறும் 23 வயதேயான இளைஞன்.***

*பாடசாலைக் காலத்தில் காதலித்த மீனாவைக் கரம்பிடித்து 3 வருடங்கள் தான். ஆனால் அந்தத் திருமணம் தான் அவன் வாழ்க்கை முறையையே தலைகீழாக்கப் போகின்றது என்பதைப் பவித்திரன் கனவிலும் நினைத்திருக்கவில்லை. வட்டுக்கோட்டையில் தீசன் என்றால் எல்லோருக்குமே முதலில் நினைவுக்கு வருவது மாட்டுச்சவாரியும், கட்டப்பஞ்சாயத்தும் தான். அந்தளவுக்கு தீசனும் அவன் நண்பர்களும் அந்தக்காலத்து 'மைனர்கள்' போல ஊருக்குள் தலையெடுத்திருந்தார்கள். மாட்டுச் சவாரிக்குப் போவது, ஊரில் உள்ள பிரச்சினைகளில் தலையிடுவது, மடத்தடியில் உட்கார்ந்து அரட்டையடிப்பது, கூட்டமாகக் குடிப்பது என்று தீசனும் சகாக்களும் வட்டுக்கோட்டையில் மிகப்பிரபலம். இந்தக் கும்பலில் ஒருவனாக இளவயதிலேயே ஒட்டிக்கொண்டவர்களில் ஒருவன் தான் பவித்திரன். தீசன் குழுவுக்கு உண்டான அத்தனை லட்சணங்களும் பவித்திரனுக்கும் இயல்பிலேயே வாய்த்திருந்தன. தொழில்நுட்பத்தில் அதிக ஈடுபாடு இருந்ததால், காலப்போக்கில் 'சி.சி.ரி.வி.' கமரா பொருத்துதல், திருத்துதல் என்பதையே பவித்திரன் தன் தொழிலாகவும் மாற்றியிருந்தான்.*
*' தீசனும் அவன்ர செற்றும் எங்க மாட்டுவண்டிச் சவாரி நடந்தாலும் அங்க கட்டாயம் தங்கட மாட்டோட போடுவாங்கள். எப்பிடியும் ஏதும் ஒரு பரிசும் வாங்கிடுவாங்கள். கிழமையில ஒருநாளாவது ஏதாவது அடிபாட்டுக்குப் போகாட்டி அவங்களுக்கு பத்தியப்படாது. எப்ப பார்த்தாலும் ஏதும் ஒரு பிரச்சினைக்குள்ள தலையை நுழைச்சு, அதைத் தாங்கள் தீர்த்து வைக்கிறம் எண்டு விலாசம் காட்டுவாங்கள். அதால பொலிஸ் ஸ்ரேசனுக்கு அடிக்கடி கேஸ் எண்டு போய் வாறதும் அவங்களுக்கு பழகிட்டு. அப்பிடி நெடுகலும் போறதால பொலிஸோட நல்ல பழக்கம். பொலிஸ்காரருக்கு இடைக்கிடை தண்ணி, வெற்றி காசு,கீசெல்லாம் குடுக்கிறவங்கள். உந்த மடத்தில தான் அவங்கட செற் எந்த நேரமும் இருக்கும். ' என்று சொல்கிறார்கள் ஊரவர்கள்.*
*இப்படிப்பட்ட தீசன் குழுவில் ஒருவனாக இருந்த பவித்திரனின் காதல் திருமணத்துக்குப் பின்னர் மெல்ல மெல்ல அவர்கள் ( தீசன் தரப்பு) ஒதுங்க ஆரம்பித்தார்கள். 'தங்களை விடவும் குறைந்த சாதியைச் சேர்ந்த பெண்ணை பவித்திரன் திருமணம் முடித்ததே அதற்குக் காரணம்' என்று பவித்திரன் தரப்புச் சொல்கிறது. ஆனால் தீசன் தரப்போ வேறுகாரணம் சொல்கிறார்கள்.*
*'என்னதான் நாங்கள் அடிபாடு, சவாரி, பார்ட்டி , பொலிஸ் கேஸ் எண்டு திரிஞ்சாலும் எங்களிட்ட பொய்,களவு மாதிரி ஒரு கெட்டபழக்கமும் இல்லை. ஆனால் பவித்திரன் அப்பிடியான வேலையளில இறங்கினதால அவனோட சேருறதை நிப்பாட்டிட்டம்' என்கிறார்கள் அவர்கள்.*
*என்றாலும் இந்தக் காரணத்தை அவ்வளவாக ஏற்றுக் கொள்ளவும் முடியாதிருக்கிறது. ஏனெனில் பவித்திரன் மீது ஒரேயொரு திருட்டு வழக்கே இருந்தது. அதுவும், யாரோ களவெடுத்த 'சி.சி.ரி.வி.'கமரா சாமான்களை வாங்கியது மட்டுமே பவித்திரன் செய்த குற்றம் என பவித்திரன் தரப்புச் சொல்கின்றது.*
*அப்படியிருந்தும் தீசன் குழு அவரைச் சேர்க்காமைக்கு காரணம்,அவர் இன்னொரு சாதியில் திருமணம் முடித்ததென்றே கருதவேண்டியிருக்கிறது. அல்லது வெளியே தெரியவராத வேறு ஏதும் காரணங்களும் இந்த உடைவுக்குப் பின்னால் இருக்கக்கூடும். இதன் பின்னர் அங்கிருக்க பவித்திரன் விரும்பவில்லை. மனைவியின் இடமான சாவல்கட்டிலேயே அவன் வாழத் தொடங்கினான்.*
*பவித்திரனை மட்டும் ஒதுக்கியிருந்தாலோ அல்லது அவனோடு மட்டும் முரண்பட்டிருந்தாலோ பிரச்சினை இந்தளவு தூரம் வளர்ந்திருக்காது. பவித்திரனின் குடும்பத்தாரோடும் தீசன் குழு பகைமை பாராட்டத்தொடங்கியது. குறிப்பாக பவித்திரனின் 17 வயதான சகோதரனைச் சீண்டும் வகையில் அவர்கள் நடந்துகொண்டனர். இதன் உச்சக்கட்டமாக அடைக்கலம் தோட்டம் கந்தசுவாமி கோயில், பங்குரு முருகன் கோயில் என்பவற்றில் நடந்த சூரன் போர் அமைந்தது. அந்தச் சூரன்போர் சண்டைதான் எல்லாவற்றுக்குமே பிள்ளையார்சுழி போட்டது.*

04




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே.வி.தவராசா

# காந்தன் கைதும் விடுதலையும்








## மின்மாற்றிகள் நாசமாக்கப்பட்ட வழக்கு குற்றஒப்புதல் வாக்குமூலத்தின் நம்பகத்தன்மை?

2001 ஆம் ஆண்டு காலத்தில் நாட்டின் பல பகுதிகளில் மின்சாரசபைக்குச் சொந்தமான ஏராளமான மின்மாற்றிகள் நாசமாக்கப்பட்டன. இந்த மின்மாற்றிகளைத் தகர்த்தார்கள் என்ற குற்றச்சாட்டில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பல இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டனர். அவர்களுக்கு எதிராக நாட்டிலுள்ள பல மேல் நீதிமன்றங்களில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. பாணந்துறை, களுத்துறை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மேல் நீதிமன்றங்களில் இந்த வழக்குகள் நடைபெற்றன.

சட்டமா அதிபரினால் களுத்துறை, மேல் நீதிமன்றில், 'மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியைப் பிறப்பிடமாகக் கொண்ட விடுதலைப்புலிகளின் உறுப்பினரான செல்வராசா காந்தன் களுத்துறை பொலிஸ் நிலையத்துக்கு அருகாமையில் அமைந்திருந்த மின்மாற்றியைச் சேதப்படுத்தியதனால் அரச சொத்துக்குப்பெரும் இழப்பு விளைவித்தார்' எனத் தெரிவித்து பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

### தமிழ்மொழியில் குற்றஒப்புதல் வாக்குமூலங்கள்

குற்றஒப்புதல் வாக்குமூலங்கள் அதிகமான அரசியல் கைதிகளினால் தமிழிலேயே எழுதிக் கொடுக்கப்பட்டிருந்தன. குற்றஒப்புதல் வாக்குமூலம் அரசியல் கைதிகளால் தமிழ்மொழியில் எழுதிக் கொடுக்கப்பட்டிருந்தால் 'அந்த வாக்குமூலம் சுயவிருப்பத்தில் கொடுக்கப்பட்டதல்ல. மாறாகத் தூண்டுதல், வற்புறுத்தல் மூலம் பெறப்பட்டது ' என்பதை நீதிமன்ற விசாரணையில் எதிரி சார்பில் நிரூபிப்பது மிகவும் சிரமமான ஒரு விடயமாகும்.

சந்தேகநபர் பொலிஸ் கட்டுப்பாட்டில் இருந்த காலத்தில் தாக்கப்பட்டு துன்புறுத்தலுக்கு ஆளாகியிருந்தார் என்பதை மருத்துவ அறிக்கைமூலம் நிரூபித்தாலன்றி, தமிழ்மொழியில் கொடுக்கப்பட்ட
வாக்குமூலம் பல வழக்குகளில் கைதிகளால் சுயமாகவே கொடுக்கப்பட்டதுதான் என்ற முடிவுக்குத்தான் நீதிமன்றம் வந்துள்ளது. சந்தேகநபரால் உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்குக் கொடுக்கப்பட்ட குற்றஒப்புதல் வாக்குமூலம் சுயமாகப் பெறப்பட்டதா? அல்லது இல்லையா? என்ற உண்மை விளம்பல் விசாரணை முதலில் களுத்துறை மேல்நீதிமன்றில் ஆரம்பமானது. அரச தரப்பில் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தைப் பதிவுசெய்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் காமினி திஸாநாயக்கவும் மொழிபெயர்ப்பாளரும் சாட்சியம் அளித்தனர்.

இந்த இரண்டு அரச சாட்சியாளர்களையும் நான் குறுக்கு விசாரணை செய்த பின்னர், அரச சட்டத்தரணி தனது வாதத்தை முடித்துக் கொண்டதையடுத்து எதிர்த்தரப்பில் எதிராளியை நான் சாட்சியாக அழைத்து அவரது சாட்சியம் நெறிப்படுத்தப்பட்டது. எதிரி தனது சாட்சியத்தில் 'தான் சுயமாக குற்றஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லையெனவும், குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை தனது கையால் எழுதித்தரும்படி வற்புறுத்தி அச்சுறுத்தியதனால் தான் எழுதிக்கொடுத்தேன் எனவும்' நீதிமன்றில் சாட்சியம் அளித்தார்.

மேல் நீதிமன்ற நீதிபதி சந்தேகநபரின் சாட்சியத்தின் நம்பகத்தன்மையில் சந்தேகம் கொண்டு அந்தச் சாட்சியத்தை நிராகரித்து, தனது தீர்ப்பில் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சந்தேகநபரினால் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் காமினி திசாநாயக்கவுக்கு சுயவிருப்பத்திலேயே வழங்கப்பட்டுள்ளது எனக் கட்டளை வழங்கினார்.

எதிரியினால் சுயவிருப்பில் வழங்கப்பட்டதாக நீதிமன்றினால் கட்டளை வழங்கப்பட்ட இந்தக் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் 'கிழக்கு மாகாணத்துத் தலைமையகத்தின் கட்டளையின் படி தானும் இன்னும் சில புலி உறுப்பினர்களும் நாட்டின் பல பகுதிகளில் மின் மாற்றிகளைக் குண்டுகள் வைத்துத் தகர்த்து செயலிழக்கச் செய்ததாக' தமிழில் எழுதிக் கொடுக்கப்பட்டிருந்தது.

### குற்றச்சாட்டின் பூர்வாங்க விசாரணை நடைபெறவில்லை

குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை நீதிமன்றம் சான்றாக ஏற்றுக்கொண்ட பின்னர் இதைத்தொடர்ந்து பிரதான விசாரணை தொடர்ந்தது. இதனையடுத்து நான் ஒரு முக்கியமான ஆட்சேபனையை நீதிமன்றில் முன்வைத்தேன்.

மின்சாரசபைக்குச் சொந்தமான மின்மாற்றிகளை நாசமாக்கியதாகத் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கில் மின்மாற்றிகள், நாசம் செய்யப்பட்டதன் மூலம் அரச சொத்துக்கு நாசம் விளைவிக்கப்பட்டதாகக் குற்றம்சாட்டப்பட்டிருந்த போதிலும் எந்த அரசசொத்து? எப்பொழுது அழிக்கப்பட்டது? அதனால் ஏற்படுத்தப்பட்ட சேதாரம் என்ன? என்பது பற்றிய பூர்வாங்க விசாரணையைப் பொலிஸார் செய்யவுமில்லை வேறு ஒப்புறுதிப்படுத்தும் எந்தச் சான்றுகளையும் அரச தரப்பில் மேல்நீதிமன்றில் முன்வைக்கவுமில்லை.

குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை மட்டுமே பிரதான சாட்சியமாகக்கொண்டு இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறதெனவும், குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் நம்பகத்தன்மையை வேறு சான்றுகளால் ஒப்புறுதிப்படுத்த அரச தரப்புத் தவறியுள்ளதுடன், பலவீனமிக்க சான்றான குற்ற ஒப்புதல் சான்றில் மட்டும் தங்கி சந்தேகநபரைத் தண்டிக்கக்கூடாது என்ற சட்டவாதம் முன்வைக்கப்பட்டதுடன் எனது வாதத்தை உறுதிப்படுத்த இந்திய நீதிமன்றங்களின் முக்கியமான பல தீர்ப்புகள் நீதிமன்றின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டன (Rajeshwari Singh Vs State of U. P .1987 All cr 324 LJ 848) இந்தத் தீர்ப்பில் பொலிஸாரால் பதிவுசெய்யப்படும் குற்றஒப்புதல் வாக்குமூலம் மிகவும் பலவீனமான சான்று என்றும் (Extra Judicial Confession is a very weak type of evidence) அதனால் குற்றஒப்புதல் வாக்குமூலத்தின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்த வேறு சான்றுகள் அவசியமாகும் எனத் தீர்ப்பில் கூறப்பட்டிருந்தது.

மேலும் பொலிஸாருக்கு கைதியினால் கொடுக்கப்பட்டதாகக் கூறப்படும் குற்றஒப்புதல் வாக்குமூலம் ஒரு பலவீனமான சான்று என்ற அடிப்படையில் நீதிமன்றம் வழக்கு விசாரணையை ஆரம்பிக்கக்கூடாது எனவும் விசாரணையில் வெளிவரும் சான்றுகளும் சூழ்நிலைகளும் உண்மைத்தன்மையுமே பொலிஸாருக்கு கொடுக்கப்பட்ட குற்றஒப்புதல் வாக்குமூலம் ஒரு பலவீனமான சான்று என்பதை வெளிப்படுத்துகின்றது என்றும் அந்தத் தீர்ப்பில் கூறப்பட்டிருந்தது.

இந்தியாவின் உயர்நீதிமன்ற தீர்ப்புகளான (Mulk Raj V.The State of.U.P.AIR 1956 SUPREME COURT 902 (V48C126) & s_ankria vs The state of Rajesthan A.I.R 1978 s.c 1248 தீர்ப்புகளில் கூறப்பட்டுள்ளது யாதெனில் 'குற்றஒப்புதல் வாக்குமூலம் சுயவிருப்பத்தில் கொடுக்கப்பட்டதாகத் தீர்மானிக்கப்படுமிடத்து அவை சான்றாகப் பயன்படுத்தமுடியும். எனினும் கொடுக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தின் தன்னார்வத்தன்மை குறித்து போதுமான, சிறப்பான ஆராய்வு மேற்கொள்ளவேண்டியது மேல் நீதிமன்றத்தின் தலையாய கடமையாகும். வேறு சான்றுகளின்மூலம் ஒப்புறுதிப்படுத்தப்படவேண்டும்' எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்திய உயர்நீதிமன்றத்தில், Ramasinghe vs State of U.P.A.I.R1967 S. C152 & JaiSingh vs The State A.I.R1967 Delhi 14 என்ற வழக்கின் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது யாதெனில், 'குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தினைத் தவிர வேறு எந்தச் சான்றுகளும் இல்லாத நிலையில் நீதிமுறைக்கு புறம்பான (Extra Judicial Confession) குற்ற ஒப்புதல் வாக்குமூலமாகயிருந்தாலும் நீதிமன்றமானது குற்றஒப்புதல் வாக்குமூலத்தில் கூறப்பட்டுள்ள விடயத்தில் அதன் தன்னார்வத்தன்மையில் நியாயமான சந்தேகத்துக்கு அப்பால் திருப்திப்படுமிடத்து குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தினை மட்டும் சான்றாகக் கொண்டு தண்டனை வழங்கப்படலாம்.

ஆனால் குற்றம்சாட்டப்பட்ட குற்றச்செயல் அந்த குற்றம்சாட்டப்பட்ட காலத்துக்குள் நடைபெற்றுள்ளதா என்பதனை சந்தேகநபர்தான் குற்றவாளி என்ற முடிவுக்கு வரமுன்னர் நீதிமன்றம் கவனத்தில் கொள்ள வேண்டும். மேலும் குற்றஒப்புதல் வாக்குமூலத்தை மட்டும் சான்றாகக் கொண்டு குற்றஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தவர் தண்டிக்கப்படக்கூடாது என்பதுடன் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் உண்மைத்தன்மையும் ஆராயப்படவேண்டும்'.

எனவே, இந்தத் தீர்ப்புகள் வலியுறுத்துகின்றமை நீதிமன்றங்களின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

இதனையடுத்து, களுத்துறை, மேல்நீதிமன்ற நீதிபதி ,' குற்றத்தைப் புரிந்ததாக சந்தேகநபர் தனது குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் ஒத்துக் கொண்டிருந்தாலும் குற்றஒப்புதல் வாக்குமூலம் உண்மைத்தன்மையை ஒப்புறுதிப்படுத்தும் வேறு சான்றுகள் மட்டுமின்றி குற்றச்சாட்டுப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்கள் புரியப்பட்டுள்ளன என்பதை அரச தரப்பு நிரூபிக்கத்தவறியதையடுத்து விடுதலை செய்யப்படுகிறார்' எனத் தீர்ப்பளித்தார். காந்தன் விடுதலையானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெடுக்குநாறிமலையும் வெள்ளை ஈயும்

நிலாந்தன்

வெடுக்குநாறிமலை விவகாரம் பெரும்பாலான தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகளை ஒன்றுபடுத்தியிருக்கிறது. கடந்த 15 ஆண்டுகளாகத் தமிழ்க் கட்சிகளை ஒன்றுபடுத்துவது எதிர்த் தரப்புத்தான்.

சிவ பூசையில் கைதுசெய்யப்பட்டவர்களை விடுவிப்பதற்கான போராட்டக் களத்தில் எல்லாக் கட்சிகளும் ஒன்றாக நின்றன. பரவாயில்லை. குறைந்தது ஒரு விவகாரத்தை மையமாகக் கொண்டாவது கட்சிகள் அவ்வாறு ஒன்றாகத் திரள்வது நல்லது. ஆனால் இந்த விவகார மைய ஐக்கியம் மட்டும் தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டப் போதாது. தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டுவது என்ற அடிப்படையில் கட்சிகள் ஒன்றிணையும் போதுதான் கடந்த 15 ஆண்டு காலத்தேக்கத்தில் இருந்து விடுபடலாம். அல்லது அவ்வாறு கட்சிகளை ஒன்றிணைக்கத்தக்க பலத்தோடு ஒரு கட்சி பலமானதாக மேற்கிளம்ப வேண்டும்.

ஆயினும் சிவராத்திரியன்று கைது செய்யப்பட்டவர்களை மீட்பதற்காக கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட்டது வரவேற்கத் தக்கது. இது போன்ற 'கலெக்டிவ்' ஆன அதாவது ஒன்றிணைந்த கூட்டு முயற்சிகள்தான் வெற்றியளிக்கும் என்பதற்கு இங்கு அரசியல் அல்லாத வேறு ஓர் உதாரணத்தைச் சுட்டிக் காட்டவேண்டும்.



எங்களில் எத்தனை பேர் எமது வீடுகளில் உள்ள தென்னை மரங்களில் விளைச்சல் குறைந்து வருவதை அவதானித்திருக்கிறோம்? தென்னோலைகளில் மேற்பரப்பில் கறுப்பாக எண்ணெய்த் தன்மையோடு ஏதோ ஒட்டிக் கொண்டிருக்கிறது. ஓலைகளின் கீழ்ப் பகுதிகளில் பூஞ்சணம் போல வெள்ளையாக ஏதோ ஒட்டிக்கொண்டிருக்கிறது. அது தென்னை மரங்களில் இருந்து தொடங்கி கொய்யா, மா, நாவல், வாழை, வெண்டி, எலுமிச்சை, செம்பருத்தி, சீத்தாப்பழம், கருவேப்பிலை என்று ஏனைய மரங்களின் மீதும் பரவுகிறது. ஒரு வீட்டில் மட்டுமல்ல, ஒரு கிராமம், ஒரு பிரதேசம் முழுவதும் அது பரவி வருகின்றது.

குறிப்பாக வெப்பமான காலங்களில் தென்னை மரங்களைத் தாக்கும் வெள்ளை ஈ Spiral Whitefly (Aleurodicus disperses) அதுவென்று துறைசார்ந்த திணைக்களங்கள் தெரிவிக்கின்றன. அதன் தாக்கத்துக்கு இலக்காகிய தென்னோலைகள் சத்தியிழந்து, காய்ந்து கருகி ஒரு கட்டத்தில் மட்டையோடு கழண்டு விழுகின்றன.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் வெள்ளை ஈயின் தாக்கம் அதிகரிக்கின்றது. புத்தளம் மாவட்டத்தில் தங்கொடுவ, நாத்தாண்டிய, சிலாபம், முகுனுவடவன, ஆரியகம, பட்டுலுஓயா, முந்தலம ஆகிய பிரதேசங்களில் வெள்ளை ஈயின் தாக்கம் உள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது. தீவிரமாகப் பரவும் வெள்ளை ஈயினால் இலங்கையில் சுமார் இரண்டாயிரம் ஏக்கர் தென்னந் தோப்புகள் சேதமடைந்துள்ளதாகத் தெரிய வருகிறது.

மழைக் காலங்களில் வெள்ளை ஈயின் தாக்கம் குறைவாக இருக்கின்றது. தென்னோலைகள் கழுவப்படும் போது வெள்ளை ஈயின் பெருக்கம் குறைகிறது. ஆனால் வறட்சியான காலங்களில் வெள்ளை ஈ தென்னந் தோப்புகளுக்கு எதிராக ஓர் உயிரியல் போரைத் தொடுக்கின்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை விருதுகள் வழங்கும் நிகழ்வு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. அதில் பேசிய அந்த அமைப்பின் தலைவராகிய ஐங்கரநேசன் வெள்ளை ஈ தொடர்பாகவும் சுட்டிக்காட்டினார். வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்துவதற்கு அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ஒரு தமிழர் கூறிய ஒரு பரிகாரத்தை அவர் மேடையில் வைத்துச் சொன்னார். வீடுகளில் நாங்கள் பயன்படுத்தும் சலவைத் தூளில் இரண்டு அல்லது மூன்று கரண்டிகளை எடுத்து 5 லீற்றர் நீரில் கரைத்த பின் அதனை தென்னோலைகளுக்குத் தெளிக்கவேண்டும் என்றும் அவர் கூறினார். சலவைத் தூளுடன் ஒரு மரத்துக்கு 200 மில்லி லீற்றர் வேப்பெண்ணெயையும் கலந்து அடித்தால் பயன்தரும் என்று தென்னை பயிர்ச் செய்கை சபையைச் சேர்ந்தவர்கள் கூறினார்கள். குறிப்பிட்ட கலவையை தென்னோலைகளின் மீது தெளிப்பதற்கு உயர் அழுத்தப் பம்பிகள் தேவை. வடபகுதி தென்னை பயிர்ச்செய்கை சபையிடம் 10 பம்பிகள் உண்டு என்று கூறப்படுகிறது. சீனாவில் இருந்து சிறிய பம்பி ஒன்றைக் கிட்டத்தட்ட 40,000 ரூபாவுக்கு இறக்குமதி செய்ய முடியும் என்று ஒரு வணிகர் கூறினார்.

வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்தத் தவறினால், ஒரு கட்டத்தில் தேங்காய்த் தட்டுப்பாடு ஏற்படும். அது நேரடியாக வயிற்றில் அடிக்கும். இறுதிக்கட்டப் போரில் தேங்காய்க்கு அலைந்த ஒரு மக்கள் கூட்டம் நாங்கள். இறுதிக் கட்டப் போரில் 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆனந்தபுரத்தில் நடந்த சண்டையோடு பெரும்பாலும் தேங்காய் இல்லாமல் போய்விட்டது. முள்ளிவாய்க்கால் கடற்கரையில் தென்னைகள் இருந்தன. ஆனால் அங்கிருந்த அசாதாரண சனத் தொகைக்குப் போதுமான தேங்காய்கள் இருக்கவில்லை. ஆனந்தபுரத்தில்தான் ஒப்பீட்டளவில் அதிக தென்னை மரங்கள் இருந்தன. ஆனந்தபுரத்தை இழந்ததோடு தேங்காய்த் தட்டுப்பாடு தொடங்கியது. அதன் பின் முள்ளிவாய்க்கால் கஞ்சிக்குத் தேங்காய்ப் பாலுக்குப் பதிலாக பால்மாவே பயன்படுத்தப்பட்டது. ஒரு கஞ்சிக்கலயத்துக்கு இரண்டு பால்மா பக்கெட்டுகள்.

அது போர்க்காலம். ஆனந்தபுரத்தோடு தேங்காய் இருக்கவில்லை. ஆனால் இப்பொழுது 15 ஆண்டுகளின் பின் வெள்ளை ஈ ஏறக்குறைய ஒரு போரைத் கொடுத்திருக்கிறது. அது ஒரு கூட்டுத்தாக்கம். இத்தாக்கத்திலிருந்து தென்னை மரங்களைப் பாதுகாக்கத் தவறினால் தேங்காய்க்கு அலைய வேண்டி வரும். தேங்காய் எண்ணெயின் விலை கூடும். தேங்காய் எண்ணெயைப் பயன்படுத்தும் எல்லா உணவுப் பொருள்களின் விலையும் கூடும். பொருளாதார நெருக்கடிக்கு முன்னரே தேங்காய் எண்ணெயின் விலை அதிகரித்துவிட்டது. இப்பொழுது ஒரு லீற்றர் 600 ரூபாவிலிருந்து ஆயிரம் ரூபாவுக்கு மேல் வரை போகிறது.

நுகர்வுக் கலாசாரத்துள் சமூக வலைத்தளங்கள் ஏற்படுத்திய நல் விளைவுகளில் ஒன்றை இங்கே சுட்டிக்காட்ட வேண்டும். பல்பொருள் அங்காடிகளில் விற்கப்படும் தேங்காய் எண்ணெயின் தரம் குறித்த சந்தேகங்கள், சமூக வலைத்தளங்களில் பரவலாக வரத் தொடங்கிய ஒரு பின்னணியில், வீட்டில் தென்னைகளை வளர்ப்பவர்கள் தங்களுக்குத் தேவையான தேங்காய் எண்ணெயைத் தாங்களே உற்பத்தி செய்யத் தொடங்கினார்கள். அது ஓர் அற்புதமான செயல். தமிழ்ப் பகுதிகளில் அதிகம் தென்னை மரங்களைக் கொண்ட காணிகளை வைத்திருப்பவர்கள் தங்களுக்கு தேவையான தேங்காய் எண்ணெயைப் பல்பொருள் அங்காடிகளில் வாங்குவதைத் தவிர்க்கத் தொடங்கினார்கள். ஆனால், இப்பொழுது வெள்ளை ஈ எல்லாவற்றையும் கேள்விக்கு உள்ளாக்கியிருக்கிறது.

வெள்ளை ஈயின் உயிரியல் எதிரிகளான பூச்சிகளை, வண்டுகளைப் பெருக்குவதன்மூலம் அதைக் கட்டுப்படுத்தலாமா என்று தென்னைப் பயிர்ச செய்கைசபை கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் ஒரு பரிசோதனை முயற்சியைத் தொடங்கியிருக்கிறது. அதன் விளைவுகள் விரைவில் தெரியவரலாம் என்று கூறப்படுகிறது. வெள்ளை ஈயின் தாக்கத்துக்குள்ளாகிய தென்னை மர உரிமையாளர்கள், தென்னைப் பயிர்ச்செய்கை சபையை அணுகி பரிகாரத்தைப் பெறலாம் என்றும் அவர்கள் கூறுகிறார்கள். ஒவ்வொரு பிரதேசத்துக்கும் உரிய கமநலசேவை நிலையத்தில் தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் ஒரு பிரிவு இயங்குவதாகவும் அங்கே பாதிக்கப்பட்டவர்கள் தமது முறைப்பாடுகளைச் செய்யலாம் என்றும் கூறப்படுகிறது.

ஆனால் "பாதிக்கப்பட்ட ஒருவரோ அல்லது சில பண்ணையாளர்களோ மட்டும் அதற்குத் தீர்வு காண்பதன்மூலம் வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்த முடியாது. அது ஒரு கூட்டுத் தாக்கம். ஒரு முழுப் பிரதேசத்தையும் அது தாக்குகின்றது. ஒரு வீட்டில் கட்டுப்படுத்தினால் சிறிது காலத்தின் பின் பக்கத்து வீட்டிலிருந்து வெள்ளை ஈ மீண்டும் வரும். எனவே ஒரு வீட்டில் அல்லது ஒரு பண்ணையில் மட்டும் அதைக் கட்டுப்படுத்துவதால் பிரயோசனம் இல்லை. அதை முழுச் சமூகத்துக்கும் உரிய ஒரு கூட்டுச் செயற்பாடாக முன்னெடுத்தால் மட்டுமே வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்தலாம்" என்று சம்பந்தப்பட்ட துறைசார் திணைக்களங்கள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே தமிழ் மக்கள் முள் முருக்கு மரத்தை பெருமளவுக்குத் தொலைத்து விட்டார்கள். தமிழ்ப் பண்பாட்டில் மிகவும் மங்களகரமான ஒரு நிகழ்வாகிய திருமணத்தில் கன்னிக்கால் என்று கூறி நடப்படுவது முள்முருங்கு. முள் முருங்கில் ஏற்பட்ட ஒரு நோய்த் தாக்கம் காரணமாகவும் நகரமயமாக்கத்தின் விளைவாக உயிர் வேலிகள் அருகிச் செல்வதன் காரணமாகவும் முள் முருங்கு அழிந்து செல்லும் ஒரு தாவரமாக மாறி வருகிறது.

தமிழ் மக்கள் மத்தியில் உயர் கல்வி நிறுவனங்களில் தாவரவியல் ஓர் ஆராய்ச்சிப் பிரிவாக உண்டு. தமிழ்ப் பண்பாட்டில் தனக்கென்று தவிர்க்க முடியாத ஒரு தாவரவியல் இருப்பைக் கொண்டிருக்கும் முள்முருங்கைக் காப்பாற்ற ஏன் அதில் சம்பந்தப்பட்ட துறைசார் நிபுணர்கள் அல்லது புலமையாளர்களால் முடியவில்லை? திருமணங்களில் முள்முருங்குக்குப் பதிலாகக் குரோட்டன் முருக்கந்தடியைப் பயன்படுத்துவதுபோல, தேங்காய்க்குப் பதிலாக வேறு எதையாவது பயன்படுத்தப் போகிறோமா?

முள் முருங்கு போலவே வெள்ளை ஈயின் விடயத்திலும் பொருத்தமான துறை சார்ந்த ஆய்வுகள் அவசியம். வடக்கு-கிழக்குப் பகுதிகள் உலர் வலயத்துக்குரியவை. நாட்டில் உலர் வலயத்துக்கு என்று தென்னை ஆராய்ச்சி மையம் எதுவும் கிடையாது. அதனால், உலர் வலயத்துக்குரிய தென்னை ஆராய்ச்சி மையம் ஒன்று தமிழ்ப் பகுதிகளில் உருவாக்கப்பட வேண்டும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

எனவே, வெள்ளை ஈயிடமிருந்து தமிழ்ச் சமையலைப் பாதுகாக்க, துறைசார் ஆராய்ச்சியாளர்களும் திணைக்களங்களும் சமூக நலன்விரும்பிகளும் சுற்றுச்சூழலியலாளர்களும் கிராமமட்ட அமைப்புகளும் குடிமக்கள் சமூகங்களும் ஊடகங்களும் ஒன்றிணைய வேண்டும். பொதுவாக சமூகம் தழுவிய கூட்டு முயற்சிகள் என்று வரும்பொழுது அங்கே அரசியல் தலைமைத்துவம் அல்லது சமூகச் செயற்பாட்டு அமைப்புக்களின் தலைமைத்துவம் தேவைப்படுவதுண்டு. எனவே வெள்ளை ஈ தமிழ் மக்களின் சாப்பாட்டு மேசைக்கு வரமுன்னரே அதைத் தடுக்கும் முயற்சிகளில் கூட்டாகத் தமிழ்ச் சமூகம் இறங்க வேண்டும், வெடுக்குநாறிமலையில் உள்ள தமிழ் மரபுரிமை சின்னத்தைப் பாதுகாப்பதற்காகத் தமிழ்க்கட்சிகள் ஒன்று திரண்டதைப்போல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

# பிரளயத்துக்கு வித்திட்ட சூரன்போர்




3

**30.10.2022**

வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் கந்தசுவாமி கோயிலில் முருகனும், சூரனும் பக்தர்களின் தோள்களில் ஏறி மோதிக் கொண்டிருந்தார்கள். உக்கிரமான சண்டை. சூரனின் தலைகள் வீழ்வதும், எழுவதுமாக இருந்தன. அங்கே வழக்கம்போல சூரனைக் காவச் சென்றான் பவித்திரனின் தம்பி. ஆனால் அதற்கு தீசனும் அவனது சகாக்களும் இடம்கொடுக்கவில்லை.

'இஞ்ச சாமியையும் சூரனையும் தூக்க இப்பவே ஆக்கள் கூடிப் போட்டுது . நீ நடுவுக்க நிக்காமல் அங்கால போ' என மிகச் சாதாரணமாக அவனை அந்த இடத்தை விட்டு அப்புறப்படுத்திவிட்டனர். எவருக்குமே அது முன்பகை காரணமாக நடக்கும் புறக்கணிப்பு என்பது தெரியாதவகையில் தீசன் குழு சாதுரியமாக நடந்துகொண்டாலும், சூரனைத் தூக்கச் சென்ற தன்னை எல்லோர் முன்னிலையிலும் அவமானப்படுத்தியதை உணர்ந்த பவித்திரனின் தம்பி முகம் கறுக்க அங்கிருந்து வெளியேறினான்.


சூரன்போரில் வாய்த்தர்க்கம் வாள்வெட்டில் இருவர் காயம்

2022 ஒக்.31 திகதிய உதயன் செய்தி....

அடைக்கலம்தோட்டம் கந்தசுவாமி கோயில் சூரன்போர் முடிந்ததும், அதற்குப் பக்கத்தில் உள்ள பங்குரு முருகன் கோயிலிலும் சூரன்போர் நடப்பது வழமை.

'சரி, இஞ்சதான் சூரனைத் தூக்க விடேலை, பங்குரு முருகனிலையாவது போய்த் தூக்குவம்' என்று அந்தக் கோயிலுக்குச் சென்றான் பவித்திரனின் தம்பி. ஆனால் அங்கு அதே தீசன் குழு அவனைச் சூரனைத் தூக்கவிடாமல் அப்பால் பிடித்துத் தள்ளியது. பவித்திரனின் தம்பிக்கு கோபம் பொத்துக்கொண்டு வர, அங்கிருந்து நகராமல் 'சூரனை நான் தூக்குவன்' என்று அடம்பிடிக்க, தீசனும் அவன் சகாக்களும் வந்தனர்.

'உனக்கு வாயால சொன்னால் விளங்காதோ?' என்று சொல்லிக்கொண்டே அவனது கன்னத்தில் கைவைத்தனர். அந்த அடியோடு, பவித்திரனின் தம்பி கோயிலை விட்டு வெளியேறிவிட்டான். சூரன் போர் தொடர்ந்தது. ஆனால் பவித்திரனின் தம்பியின் மனதில், கோயிலில் பட்ட அவமானமும், கன்னத்தில் வாங்கிய அடியும் கோபத்தீயைக் கொழுந்துவிட்டெரிய வைத்தது.

உடனேயே தன் தமையனுக்கு தொலைபேசி அழைப்பை எடுத்தான். அழுதழுது நடந்ததைச் சொன்னான். சாவல்கட்டில் இருந்த பவித்திரன் தம்பியார் சொன்னதைக் கேட்டதும் கோபத்தின் உச்சிக்குப் போனான்.

' நீ போனை வை. நான் வந்து பாக்கிறன் அவங்களை' சொல்லிவிட்டு உடனேயே அதே கோபத்தின் உக்கிரத்தோடு மோட்டார் சைக்கிளில் புறப்பட்டு வட்டுக்கோட்டைக்கு வந்தான். பிரளயம் தொடங்கியது



# வெறி அடங்கும்வரை வெட்டு

4

தன் மீதுள்ள கோபத்தை தம்பியில் காட்டிய தீசன் மீதும் அவனது சகாக்கள் மீதும் கடும் கோபத்தில் வந்திருந்த பவித்திரன், மோட்டார் சைக்கிளின் முன்பக்கத்தில் 'கஜேந்திரா' படத்தில் விஜயகாந்த் பயன்படுத்துவதைப்போன்ற ஒருவகையான கைக்கோடரியையும் கொண்டு வந்திருந்தான். குருதி குடிக்கும் ஆசையில் கூர்மையாக மின்னிக்கொண்டிருந்த அந்தக் கோடரியையும், தம்பியையும் ஏற்றிக் கொண்டு பங்குரு முருகன் கோயிலுக்கு பவித்திரன் போனான். ஆனால் அவன் போன நேரத்தில் சூரன்போர் முடிந்து எல்லோரும் வீட்டுக்குப் போயிருந்தார்கள்.

அப்பாவிச் சூரன் மட்டும் தலையில்லா முண்டமாக முன் மண்டபத்தில் நின்றிருந்தான். தீசன் குழுவைக் காணாமல் தேடியலைய, அலைய பவித்திரனுக்கு கோபம் 'ஜிவ்வென்று' ஏறிக்கொண்டே இருந்தது. இந்தச் சமயத்தில் எதேச்சையாக பவித்திரனின் வீட்டுக்குச் சமீபமாக இன்னொரு மோட்டார் சைக்கிளில் தீசனும் இன்னொருவனும் செல்வதை பவித்திரன் கண்டுவிட்டான்.

அவ்வளவுதான்.

'ஏறடா கெதியா' என்று தம்பியை மீண்டும் ஏற்றிக்கொண்டு தன் மோட்டார் சைக்கிளில் தீசனை விரட்டத் தொடங்கினான். பவித்திரன் பின்னால் துரத்துவதை தீசன் அறிந்திருக்கவில்லை. அறியக்கூடிய நிலையிலும் இல்லை. பவித்திரனின் அதிர்ஷ்டமோ அல்லது தீசனின் துரதிர்ஷ்டமோ அன்றைக்கு தீசன் நிலைதடுமாறுமளவுக்கு குடித்திருந்தான். இது பவித்திரனுக்கு வசதியாகிவிட்டது. ஒரு சந்தியில் தீசனின் மோட்டார் சைக்கிள் வேகம் குறைந்த தருணத்தில், அதனை முந்திச் சென்று, பாதையை மறிப்பது போல தன் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு, கஜேந்திராக் கோடரியோடு ஆவேசமாக தீசனை நோக்கி ஓடிவந்தான் பவித்திரன். தீசனும் அவன் நண்பனும் என்ன நடக்கின்றது என்று உணர்வதற்கிடையில் இருவர் மீதும் கோடரி வெட்டுகள் சரமாரியாக விழுந்தன. தீசனுக்கு விழும் மோசமான வெட்டுகளைப் பார்த்த அவனது நண்பன் காலில் விழுந்த வெட்டோடு வேலி பாய்ந்து தப்பியோடிவிட்டான். இல்லாவிட்டால் தீசனுக்கு விழுந்த வெட்டுகளைப்போல முகத்திலும், கைகளிலும் கோடரியால் வெட்டு வாங்கவேண்டியிருந்திருக்கும். தங்கள் வெறி அடங்கும் வரை வெட்டிவிட்டு அண்ணனும், தம்பியும் தலைமறைவாகிவிட்டார்கள். ஒரு மாதத்துக்குப் பின்னர் சட்டத்தரணி மூலம் பவித்திரன் சரணடைந்தான். பிணையில் பவித்திரன் வெளிவந்தாலும், வழக்கு முடிவடையாமல் நீண்டது. தீசனின் சகாக்களால் தனக்கும் தம்பிக்கும் ஏதும் ஆபத்து நேரலாம் என்ற பயத்தில் பவித்திரன் தன் மனைவியையும், தம்பியையும் கூட்டிக்கொண்டு தலைமறைவு வாழ்க்கையே வாழ்ந்தான். அவன் [illegible]டியில் இருப்பதாகச் சொல்லப்பட்டாலும், மலையகப் பகுதியிலேயே இருந்ததாகவும், இடைக்கிடை யாருக்கும் தெரியாமல் வழக்குக்கும், ஊருக்கும் வந்து சென்றான் எனவும் சொல்லப்படுகின்றது.

# பழிவாங்கும் படலம்

5

தீசனின் நிலை கவலைக்கிடமாக இருந்தது. மிக மோசமாக அவன் முகத்திலும்,கைகளிலும் விழுந்த வெட்டுகளில் இருந்து அவன் உயிர் பிழைத்ததே பெரும் அதிசயம் என்று மருத்துவர்கள் சொன்னார்கள். மிகநீண்டகாலம், மிகப்பெரும் செலவு செய்தே தீசனை மீளுயிர்க்கச் செய்யமுடிந்தது. ஓரளவுக்கு பழைய முகத்தோடு தீசன் மீண்டாலும், முன்னரைப் போல சவாரிக்கோ, சண்டைக்கோ செல்ல முடியாதளவுக்கு நடைப்பிணம் போல மாறிவிட்டான். அந்தளவுக்கு அவனது உடலை பவித்திரனின் கோடரி வெட்டுகள் பாதித்திருந்தன.

' சிங்கம் மாதிரி இருந்த தீசனை இப்பிடிப் பாக்க எங்களுக்கே ஒரு மாதிரி இருக்குது. அப்ப தீசனுக்கும் சகோதரங்களுக்கும் எப்பிடி இருக்கும்? முந்தி தீசனை அடிக்கிறதெண்டதை ஒருத்தனும் கனவிலையும் நினைச்சுப் பாக்க மாட்டங்கள். அப்பிடி அடிக்கிறதெண்டாலும் ஏழெட்டுப்பேர் வந்தால் தான் தீசனைச் சமாளிக்க முடியும். அண்டைக்கு மட்டும் தீசன் குடிக்காமல், நிதானத்தில இருந்திருந்தால் அப்பிடி பவித்திரன் வெட்டியிருக்கமுடியாது. அந்தக் கோடரியைப் பறிச்சு பவித்திரனுக்கே தீசன் வெட்டியிருப்பான். ஆனால் வெறியில இருந்ததால பவித்திரன் கண்டபடி வெட்டிப்போட்டான். அதுக்குப் பிறகு கடுமையாச் செலவழிச்சுத்தான் தீசனைக் காப்பாத்தினவை. தன்னை ஒரு மூலைக்குள்ள இருத்தின பவித்திரனை தீசன் பழிவாங்கோணும் எண்டு சொல்லிக்கொண்டிருப்பான்' என்று தீசனின் ஊரவர்கள் சொல்கின்றனர்.

செயலிழந்தவனாக தான் மாற்றப்பட்டு விட்டதை எண்ணி தீசன் தனக்கு நெருக்கமானவர்களிடம் அடிக்கடி சொல்லிப் புலம்பியிருக்கிறான். இந்த நிலையில் சிலமாதங்களுக்கு முன்னர் வெளிநாடு ஒன்றில் இருந்து தீசனின் தம்பி ஊருக்கு வந்தான். அவன் வந்தபின்னர் தான் தீசனை வெட்டியதற்கு பழிக்குப் பழி வாங்கும் வெறி வேகமெடுத்தது.

பவித்திரன் எங்கே இருக்கிறான்? எப்போதெல்லாம் ஊருக்கு இரகசியமாக வருகிறான்? அப்படி வரும்போது எங்கெங்கு செல்கிறான்? என்பதெல்லாம் தீசன் குழுவால் கண்காணிக்கப்பட்டன. அதன் மூலம் கிடைத்த தகவலை வைத்து, பவித்திரன் காரைநகரில் இருக்கும் தன் அப்பப்பா வீட்டுக்கு ஒவ்வொரு முறையும் சென்றுவருவது உறுதியானது. பழிவாங்கும் திட்டம் தீட்டப்பட்டது. இடமும், நாளும் குறிக்கப்பட்டன.

6

# இறுதிநாள்

**11.03.2024**

தனக்குப் பொறிவைக்கப்பட்டிருப்பதை அறியாத பவித்திரன் தன் மனைவியோடு அப்பப்பா வீட்டுக்குப் புறப்பட்டான். அன்று அப்பப்பாவின் பிறந்ததினம். எனவே கட்டாயம் அங்கு செல்ல வேண்டும் என்பதில் அவன் பிடிவாதமாக இருந்தான். காரைநகருக்குச் சென்று, சிலமணித்தியாலங்கள் அப்பப்பாவோடு இருந்த மகிழ்வோடு அவனும்,மனைவி மீனாவும் வீடு நோக்கிப் புறப்பட்டிருந்தனர். அப்போது நேரம் 6.30. ஆபத்து அவர்களுக்காக அகல வாய் திறந்து காத்திருந்தது. அந்த ஆபத்து என்ன? எப்படி அந்தக் கொடூரச் சம்பவம் நிகழ்ந்தது? என்பதற்கு கண்கண்ட சாட்சி பவித்திரனின் மனைவி மட்டுமே.

கணவருக்கும் தனக்கும் அந்த முன்னிராப் பொழுதில் நிகழ்ந்த பயங்கரத்தை மீனா கண்ணீரும்,கம்பலையுமாகச் சொல்லத் தொடங்கினார்.



# "எனக்காக வெட்

**மீனா (பவித்திரனின் மனைவி, வயது**

"அண்டைக்கு நேரம் ஆறரை இருக்கும். ப
ருந்து மோட்டார் சைக்கிளில நானும் பவியும்
அவங்களுக்கு வெட்டினதில இருந்து நாங்க
போறதில்லை. சாவல்கட்டில இருந்து அப்பப்ப
பாதையளாலதான் வந்து போறனாங்கள். அ
கோட்டையால வராமல் , நவாலியால வந்து தா
பிப் போகேக்கையும் அப்பிடித்தான் போற
காலமோ, என்னவோ பொன்னாலைச் சந்
கழிய, திடீரெண்டு வட்டுக்கோட்டை றோ
திருப்பினார். ஒரு நூற்றைம்பது மீற்றர்தான்
ரத்துக்கு அங்கால ஒருகார் நிண்டு கொண்
கொஞ்சப்பேர் கையில வாள், பொல்லுகளோ
டிட்டம். அப்ப ஒரு ஆறே முக்கால் மணியிருக்


" உது அவங்கள் தான் நிக்கிறாங்கள் போல
பிரச்சினை. திரும்பிப் போவம்" எண்டு சொ
அப்பிடியே வெட்டித் திருப்பிக்கொண்டு
போனார். அங்க பொயின்ரில மூண்டு
மோட்டார் சைக்கிளை விட்டிட்டு பதறியடிச்ச
போனம். முதல்ல நேவிக்காரர் நோர்மலாத்
கூப்பிட்டு இருத்திக் கதைச்சவங்கள். நாங்
தைச் சொல்லிக் கொண்டிருக்கேக்கையே,
ரடிக்கே காரோட வந்திட்டாங்கள். எங்களுக்
தெரியேலை.

"என்னையும் மனுசியையும் காப்பாத்துங்
ளிட்டக் கெஞ்சத் தொடங்கிட்டார். ஆனால்
ஏதோ கதைச்சுப்போட்டு வந்து எங்களை அ
கிட்டாங்கள். அந்த இரவில ஒரு பொம்பிளை
துங்கோ எண்டு கெஞ்சின எங்களை. அ
நேரம் இருக்க விட்டிருந்தாலே ஒண்டும் நட
யிருப்பார். ஆனால் அவங்கள் அதைக்
அவரின்ர அப்பாவுக்கு போன் அடிச்சு 'தீச
ருக்கிறாங்கள். நீங்கள் பொலிஸுக்கு அறி
கொண்டு வாங்கோ' எண்டு சொன்னவர்.
ருக்கு. அவை வரும் மட்டும் எண்டாலும்
எண்டு திரும்பவும் நேவியிட்டக் கெஞ்சி
கேட்டாலெல்லோ? எங்களை அடிச்சுக் க
இருந்தாங்கள். நாங்கள் நேவியிட்ட கெ
தீசன்ர ஆக்கள் அந்தப் பொயின்ருக்கு கிட்
கொண்டே இருந்தாங்கள்.

ஒருகட்டத்தில நேவிக்காரர் எங்களை அடிச்
டாங்கள். காரில வந்தவங்கள் என்னை
கள் . பவிக்கு என்ன செய்யிறதெண்டு தெ
அவங்களிட்ட 'அவளை வெட்டாதையுங்
கோ"எண்டு என்ர வெட்டை தான் வாங்க
ரைப் பிடிச்சு வைச்சிருக்க, என்னை ஒ
போனாங்கள். பிறகு ஒரு வீட்டுக்கு கிட்ட
என்னை ஆருக்கோ காட்டியிருக்க வேணு
என்னைக் கொண்டுபோய் சித்தன்கேணிச்
வங்கள். நான் பதறியடிச்சு ஓட்டோ ஒண்
வீட்ட வரேக்க, மாமா (பவித்திரனின் அப்
நிக்கிறார் எண்டு சொல்ல, நான் அப்பிடியே
அப்பதான் ஆஸ்பத்திரியில இருந்து ஒரா
டந்து போட்டிருக்கு எண்டு கோல் வந்தது. ம
போக, நான் முறைப்பாட்டைக் குடுத்துட்டு
கொண்டிட்டாங்கள் எண்டு தெரிஞ்சுது"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




10

## கொல்வது நோக்கமில்லையா?

மருத்துவ அறிக்கையின்படியும், பொலிஸ் தரப்பு தகவல்களின்படியும் இன்னொரு புதிய விடயம் வெளியாகியுள்ளது. பவித்திரனைக் கடத்திச் சென்று சித்திரவதை செய்தபின்னர், அவனை முடமாக்கி வாழ்நாளில் நடமாட முடியாதபடி செய்வதுதான் வன்முறைக் கும்பலின் நோக்கமாக இருந்துள்ளது. பவித்திரனைக் கொல்லவேண்டும் என்று அவர்கள் நினைக்கவில்லை. அப்படிக் கொல்ல நினைத்திருந்தால் உயிர்நிலைகளான இடங்களில் வெட்டியிருப்பார்கள். கையில் மட்டும் வெட்டியிருக்க மாட்டார்கள். பவித்திரனைக் கொல்லவேண்டும் எனத் திட்டமிட்டிருந்தால், காருக்குள் வெட்டிவிட்டு வேறு இடங்களில் சடலத்தை வீசியிருக்கலாம். உயிரோடு மருத்துவமனைக்குள் கொண்டு சென்று வீசியமை, அவர் உயிர் பிழைக்கட்டும் என்ற எண்ணத்தில்தான். அப்படிக் கொல்ல நினைக்காவிட்டால் பவித்திரன் தப்பியிருக்கவேண்டுமே. ஏன் இறந்தார்?

பவித்திரனைக் கடத்தியவர்களுக்கு அவர் மேல் கடும் கோபம் இருந்தது., அந்தக் கோபத்தை எல்லாம் பவித்திரன் காருக்குள் சிக்கியிருந்த இரண்டு மணித்தியாலத்துக்குள் காட்ட முற்பட்டுள்ளனர். அத்துடன் எல்லோரும் கடும் போதையிலும் இருந்திருக்கிறார்கள். போதையும், கோபமும் ஒருங்குசேர அவரைப் பலமாகத் தாக்கியுள்ளார்கள். அப்படித் தாக்கும் போதுதான் அவரது தொண்டைப்பகுதி, நுரையீரல் பகுதி என்பவற்றில் உடைவு ஏற்பட்டு இரத்தம் நுரையீரலுக்குள் தேங்கி, பவித்திரன் சாக நேர்ந்துள்ளது. அவரது உடலில் பலமான வெட்டுக்காயங்களும், கடும்குருதிப்போக்கும் ஏற்பட்டிருந்தாலும்கூட, பவித்திரனின் சாவுக்கு அவை காரணமென மருத்துவ அறிக்கை சொல்லவில்லை.

## "...வெட்டுவாங்கின பவி"

7

...னவி, வயது-23)

...இருக்கும். பவியின்ர அப்பப்பா வீட்டையி
...னும் பவியும் வெளிக்கிட்டம். வாளால இவர்
...ந்து நாங்கள் வட்டுக்கோட்டைப் பக்கமே
...ந்து அப்பப்பா வீட்டை வாறதெண்டா வேற
...னாங்கள். அண்டைக்கும் வரேக்க வட்டுக்
...பால வந்துதான் காரைநகர் போனம். திரும்
...தான் போறதெண்டு இருந்தம். ஆனால்
...னாலைச் சந்தி வந்து நேவிப் பொயின்ற்
...காட்டை றோட்டுக்கால பவி பைக்கை
... மீற்றர்தான் போயிருப்பம். கொஞ்சத்தூ
...ண்டு கொண்டிருந்திச்சுது. அதைச் சுத்தி
...பால்லுகளோட நிக்கிறதை நாங்கள் கண்
...ல் மணியிருக்கும்.

...ாங்கள் போல கிடக்கு. இதால போனால்
..." எண்டு சொல்லிப்போட்டு பவி,பைக்கை
...க்கொண்டு நேவிப் பொயின்ருக்குப்
... மூண்டு நேவிக்காரர் நிண்டவங்கள்.
... பதறியடிச்சு இறங்கி, நேவியிட்ட ஓடிப்
... நோர்மலாத்தான் எங்களை உள்ளுக்க
...ங்கள். நாங்கள் அவங்களிட்ட விசயத்
...கேக்கையே, அவங்கள் நேவிப்பொயின்
...ர். எங்களுக்கு என்ன செய்யிறதெண்டு

...காப்பாத்துங்கோ" எண்டு பவி அவங்க
...ர். ஆனால் நேவிக்காரர் மேலிடத்தோட
... எங்களை அடிச்சுக் கலைக்கத் தொடங்
... பொம்பிளையோட, உயிரைக் காப்பாத்
...ங்களை. அந்தப் பொயின்ரில கொஞ்ச
... ஒண்டும் நடந்திருக்காது. பவியும் தப்பி
...கள் அதைக்கேக்கேலை. அப்ப பவி,
... அடிச்சு 'தீசன்ர ஆக்கள் வெட்ட வந்தி
...ஸுக்கு அறிவிச்சு அவங்களைக்கூட்டிக்
...சொன்னவர். 'பொலிஸுக்கு அறிவிச்சி
...ண்டாலும் எங்களை நிக்க விடுங்கோ'
...டக் கெஞ்சினம். ஆனால் அவங்கள்
... அடிச்சுக் கலைக்கிறதிலையே குறியா
...வியிட்ட கெஞ்சிக் கொண்டிருக்கேக்க,
...ன்ருக்கு கிட்ட வந்து காரில வட்டமடிச்சுக்

...களை அடிச்சு, வெளியில தள்ளிப்போட்
... என்னைப் பிடிச்சு வெட்ட வந்திட்டாங்
...தெண்டு தெரியேலை. அப்பிடியே அவர்
...ட்டாதையுங்கோடா, என்னை வெட்டுங்
...ான் வாங்க வந்திட்டார். அவங்கள் அவ
...ன்னை ஒரு காரில ஏத்திக்கொண்டு
...ட்டுக்கு கிட்ட காரை நிப்பாட்டிப்போட்டு,
...ருக்க வேணும். அதுக்குப் பிறகுதான்
...தண்கேணிச் சந்தியில போட்டிட்டு போன
...ட்டோ ஒண்டைப் பிடிச்சுக் கொண்டு பவி
...ரேனின் அப்பா) பொலிஸ் ஸ்ரேசனில
...ன் அப்பிடியே அங்க போட்டன்.
...ருந்து ஒராளை வெட்டிப்போட்டு கொண்
...ல் வந்தது. மாமா பதறிக்கொண்டு அங்க
... குடுத்துட்டு வரத்தான் பவியை வெட்டிக்
...ரிஞ்சுது"

8

## விடிஞ்சால் பவிக்கு பிறந்தநாள்

"பவிக்கு என்னில நல்ல வாரப்பாடு. நான் தான் அவனை வளர்த்தனான். அதால என்னில கடும் பாசமா இருப்பான். நானும் மனுசியும் காரைநகர் வெடியரசன் எண்ட இடத்தில இருக்கிறம். அவன்ர உயிருக்கு ஆபத்து இருக்கெண்டு தெரிஞ்சும் என்ர பிறந்தநாளுக்கு வரோணும் எண்டு நினைச்சு என்ர பேரக்குஞ்சு வந்தது. அடுத்தநாள் பவிக்கு பிறந்தநாள். என்ர பிறந்தநாளுக்கு வந்திட்டு, அடுத்தநாள் தன்ர பிறந்தநாளைக் கொண்டாட இருந்தவனை இப்பிடிச் சித்திரவதை செய்து வெட்டிக் கொண்டிட்டாங்கள்" என்று தன் பேரனின் நினைவுகளில் மூழ்கினார் பவித்திரனின் அப்பப்பா .

9

## என்ன நடந்தது பவித்திரனுக்கு?

காரைநகர்-பொன்னாலை பாலத்தில் இரவு 7 மணியளவில் கடத்தப்பட்ட பவித்திரன் 9.12 க்கே குற்றுயிராக கோட்டைக்காடு மருத்துவமனையில் வீசப்பட்டார். இந்த இரண்டேகால் மணித்தியாலமாக பவித்திரன் ஓரிடத்தில் வைத்திருக்கப்படவில்லை. பொலிஸ் தரப்பினதும், சந்தேகநபர்களினதும் வாக்குமூலத்தின் படி, எல்லோரும் சொல்வதைப் போல பவித்திரன் காரிலோ ஹைஎஸிலோ கடத்தப்படவில்லை. பவித்திரனின் மோட்டார் சைக்கிளிலேயே அவரை நடுவில் இருத்திக் கொண்டு இருவர் கடத்திச் சென்றுள்ளனர். அவர்களோடு பக்கபலமாக ஹைஏஸ் வாகனமும், படி ரக வாகனமும் சென்றுள்ளன. மோட்டார் சைக்கிளில் பவித்திரன் ஒரு வீட்டுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். அந்த வீட்டுக்குத்தான் பவித்திரனின் மனைவியையும் கொண்டு சென்று யாருக்கோ காட்டியிருந்தார்கள். அதே போன்று பவித்திரனையும் அங்குள்ள நபருக்கு காட்டிய பின்னரே பவித்திரன் கொலைக்களமான மண்ணிறக் காரில் ஏற்றப்பட்டிருக்கிறார்.

அப்படி பவித்திரனையும் மனைவியையும் கடத்தி, பார்வையிட்ட அந்த மர்ம நபர் யார்? பொலிஸாரின் கணிப்பின்படி அது தீசன் தான். அவரால் முன்னரைப் போல எழுந்து நடமாடவோ, அடிதடியில் இறங்கவோ முடியாதென்பதால் இப்படி பவித்திரனைக் கடத்திச் சென்று அவரிடம் காட்டிய பின்னர் வெட்டியிருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. சிலவேளைகளில் தீசன் தான் பவித்திரனை முதலாவதாக வெட்டி, இந்தக் கொலையை தொடங்கி வைத்திருப்பாரோ என்னவோ. வீட்டில் இருந்த நபரிடம் காண்பிக்கப்பட்டு காரில் ஏற்றப்பட்ட பவித்திரனின் கைவிரல்களைத்தான் முதல் வெட்டி எறிந்திருக்கிறார்கள். இரண்டு கைகளிலும் கொலைவெறியோடு கத்தியோ, கோடரியோ பாய்ந்திருக்கிறது. வலக்கையின் விரல்கள் ஒவ்வொன்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளன. இடக்கையில் உள்ளங்கையின் குறுக்கே ஆழமாக வெட்டப்பட்டதால், அது இரண்டாகப் பிளந்துள்ளது. அதைவிட கையில் ஆழமாக இன்னொரு வெட்டும் வெட்டியிருக்கிறார்கள். அவற்றைவிட முகத்தில் தான் பலமாக தாக்கியுள்ளார்கள். மொட்டையான ஆயுதங்களால், அநேகமாக கொட்டன்களால் பலமாகக் குத்தியதால், தொண்டைக்குழிக்குள் எலும்பு உடைந்து குருதி நுரையீரலுக்குள்ளும், சுவாசப்பாதைக்குள்ளும் உட்புகுந்ததாலேயே மரணம் நேர்ந்துள்ளது. பவித்திரன் கடத்தப்பட்ட இடத்துக்கும் , வீசியெறியப்பட்ட இடத்துக்கும் இடையிலான தூரம் வெறும் 6 கிலோமீற்றர்களே. 10 தொடக்கம் 15 நிமிடங்களில் இந்தத் தூரத்தை அடைந்துவிடலாம். எனவே சுமார் இரண்டு மணித்தியாலங்கள் கடும் சித்திரவதைக்கு பவித்திரன் உள்ளாக்கப்பட்டுள்ளார்.

## கடற்படையும் குற்றவாளியே.... 

11

பவித்திரனின் படுகொலைச் சம்பவத்தில் கடற்படை ஏன் உயிர்ப்பிச்சை கேட்டு அடைக்கலம் புகுந்தோரைத் தாக்கியது? என்ற கேள்வி மக்களிடம் இன்னும் உண்டு. அதற்கும் காரணம் உண்டு என அந்தப்பகுதி மக்கள் சொல்கிறார்கள். தீசன் குழு தனியே மாட்டுச்சவாரி மட்டும் செய்வது கிடையாது. காரைநகரிலிருந்து மாடுகளைக் கடத்தி வந்து விற்பனை செய்வதும் அவர்களின் தொழிலாக இருந்துள்ளது. அப்படி அவர்களின் மாடு கடத்தலுக்கு , குறித்த காவலரணில் நிற்கும் கடற்படையினரும் உடந்தையாக இருந்துள்ளனர். அதற்குப் பிரதியுபகாரமாக மதுபானம்,சிகரெட் என்பவற்றை தீசன் குழு அவர்களுக்கு வழங்கி வந்துள்ளது. இதனால் உண்டான நெருக்கமான பழக்கத்தாலேயே, தீசன் குழுவிடம் இருந்து தப்ப நினைத்து தஞ்சம் கோரிய பவித்திரனையும் மனைவியையும், கடற்படையினர் விரட்டியடித்துள்ளனர்.

அதற்கிடையில் இன்னொரு வேலையும் அவர்கள் செய்துள்ளனர்.

பவித்திரனும் மனைவியும் தங்களைக்காப்பாற்றுமாறு தஞ்சம் கோரிய போது,அதைப் பற்றி மேலிடத்துக்கு தகவல் சொல்லியுள்ளனர். ஆனால் அந்தத் தகவல் இப்படி இருந்தது.

' இரண்டுபேர் அத்துமீறி காவலரணுக்குள் புகுந்துவிட்டார்கள். என்ன செய்வது?' கொலைக்காரக்கும்பல் துரத்தியதால் இருவர் பாதுகாப்புத்தேடி வந்துள்ளார்கள் என்றோ, அதில் ஒருவர் பெண் என்றோ சொல்லாமல் அத்துமீறி வந்துவிட்டார்கள் என்றே தகவல் சொல்லப்பட்டுள்ளது.அதனால் அடித்து விரட்டும் படி மேலிடத்து உத்தரவு வந்தது. இப்படி உத்தரவு வரவேண்டும் என்று நினைத்துதான் காவலரணில் இருந்த கடற்படையினர் உண்மையை மறைத்து மேலிடத்துக்கு மொட்டையான தகவலைக் கொடுத்துள்ளனர். இப்படி உண்மையை மறைத்தமை, தஞ்சம் கோரியோரைத் தாக்கி விரட்டியமை என்ற இரு குற்றங்களையும் கடற்படையினர் செய்யாதிருந்தால் பவித்திரன் கொல்லப்பட்டதைத் தவிர்த்திருக்கலாம். கொலை செய்தவர்களை விடவும் கொலைக்கு உடந்தையாக இருந்தவர்களுக்கே அந்தக் குற்றத்தின் தண்டனை மிக அதிகமாகக் கிடைக்கவேண்டும். பவித்திரனின் கொலைக்கு காரணமான மூன்று கடற்படையினரும் கைது செய்யப்பட்டு, அவர்களுக்கும் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதே பலரதும் கருத்து.

12

## பொலிஸுக்கும் பங்குண்டு

பவித்திரனின் கொலையில் பங்காளியான இன்னொரு தரப்பு வட்டுக்கோட்டை பொலிஸ். எப்படிக் கடற்படைக்கும் தீசன் குழுவுக்கும் நல்ல உறவுநிலை இருக்கின்றதோ அப்படித்தான் பொலிஸோடும் அவர்கள் நல்ல நெருக்கம். அந்த நன்றிக்கடனுக்காகத்தான் சம்பவ தினத்தன்று பொலிஸார் நடவடிக்கை எடுப்பதில் தாமதம் காட்டியுள்ளனர்.

பவித்திரன் கடற்படைக் காவலரணில் இருந்து தனது தந்தைக்கு தொலைபேசியூடாக , தான் ஆபத்தில் சிக்கியிருப்பதைச் சொன்னவுடன், பவித்திரனின் தந்தை உடனடியாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையம் சென்று, சம்பவத்தைக் கூறி, மகனைக் காப்பாற்றச் செல்லுமாறு கெஞ்சியுள்ளார். அதற்கு பொலிஸார் அலட்சியமாக ' வாகனத்துக்கு பெற்றோல் இல்லை. இப்ப போக கஷ்டம்' என்று அங்கு செல்வதைத் தவிர்த்துள்ளனர். வெறும் 5 நிமிடங்களில் பொலிஸார் பொன்னாலைப் பாலத்துக்குச் சென்றிருக்கமுடியும். அப்படிப் பொலிஸார் சென்றிருந்தால், பவித்திரனைக் காப்பாற்றியிருக்கமுடியும். திட்டமிட்டே சம்பவ இடத்துக்குச் செல்லாமல் பவித்திரனை பொலிஸார் சாக விட்டுள்ளனர். எனவே கொலைக்கு உடந்தை என்ற ரீதியில் வட்டுக்கோட்டைப் பொலிஸார் மீதும் நடவடிக்கை எடுக்கவேண்டும். ஆனால் பூனைக்கு யார் மணிகட்டுவது?

13

## இனி.....!


பவித்திரனைத் தாக்கிவிட்டு , அவரை எழுந்து நடமாட முடியாதபடி செய்வதே தாக்குதலாளிகளின் நோக்கமாக இருந்ததால், அவர் இறந்ததும் என்ன செய்வதென்று தெரியாமல், காரை கைவிட்டதோடு தீசன், தீசனின் சகோதரர் உள்ளிட்ட முக்கியமான சந்தேகநபர்கள் தலைமறைவாகி விட்டனர். பவித்திரன் காரைநகருக்கு எத்தனை மணிக்கு வந்தார்? எத்தனை மணிக்குப் புறப்பட்டார்? என்பதையெல்லாம் தீசன் குழுவுக்கு காரைநகரிலிருந்து ஒருவர் உளவுபார்த்து தகவல் அனுப்பியுள்ளார். மாடு கடத்தலில் தீசன் குழுவுக்கு இந்த நபரே காரைநகரிலிருந்து [illegible] வலைவிரித்துள்ளது. [illegible] 6 பேர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு, இருவர் அடையாளம் காட்டப்பட்டுள்ளனர். ஏனைய சந்தேகநபர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் தகவல்கள் கூறுகின்றன.

யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி தலைமைப் பொலிஸ் பரிசோதகர் பிரேதிலக ஆகியோர் அடங்கிய குழுவே சந்தேகநபர்களைத் தேடும் வேட்டையில் இறங்கியுள்ளது. ஆனால் பவித்திரனின் சாவுக்கு பழிவாங்கப்படுவோம் என்ற பயத்தில் தான் அவர்கள் தலைமறைவாகிவிட்டனர் என்று இன்னொரு தரப்பு சொல்கிறது. அப்படியானால் இனியும் - கொலைகள் தொடருமா? பழிக்குப் பழிவாங்கும் படலம் நீளுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்டனையையே பாராட்டாகப்பெற்ற மாணவன் புதுவை!

○ பஸீர் காக்கா



கவிஞர் புதுவை இரத்தினதுரையின் 75 அகவைப் பூர்த்தியின் பவளவிழா இன்று பிரான்ஸில் நடைபெறு கின்றது. அதனையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.

எல்லோருக்கும் பாடசாலை நாள்கள் என்றும் மறக்கமுடியாதவை. அதிலும் நாம் செய்த குறும்புகள் / குழப்படிகள் காரணமாகப் பெற்ற தண்டனைகள் என்றும் நினைவில் இருக்கும். அதைப் போன்று மற்றவர்களை விட வித்தியாசமானவராக, தனித்தன்மை சிறப்புடன் செயற்பட்டமைக்காகப் பெற்ற பாராட்டுகளும் மறக்கமுடியாதவை. ஆனால், ஒரு தண்டனையையே பாராட்டாகப் பெற்ற ஒருவர் இருந்தாரெனில் அவர் நாமறிந்த வகையில் புதுவை அண்ணாதான்.

பாடசாலை நிர்வாகம் பற்றிக் கிண்டலுடன் நாலு வரிக் கவிதையை கரும்பலகையில் எழுதிவிட்டார் புதுவை அண்ணா. (இதனை அவர் எமக்குச் சொல்லிக்காட்டியிருக்கிறார்) அதிபர் வந்தார். "இரத்தினதுரை இஞ்சை வா..." உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து அவரருகே சென்றதும் பிரம்பினால் கையில் தண்டனை வழங்கினார் அதிபர். தொடர்ந்து கரும்பலகையில் இருந்த கவிதைப் பக்கம் பார்வையைச் செலுத்திய பின், "உன்னைத் தவிர வேற ஆராலயும் இப்பிடி எழுதமுடியாது", என்று சொல்லிவிட்டுச் சென்றார் அதிபர். அதாவது, இதற்கெல்லாம் விசாரணையே தேவையில்லை. உன்னை உன் ஆற்றலை நான் அறிவேன் என்ற மாதிரி அவரின் தீர்ப்பு இருந்தது. அதிபரின் நடவடிக்கை தண்டனை என்றாலும் புதுவை அண்ணாவை அவர் சரியாகவே கணித்திருக்கிறார். வழங்கப்பட்டது தண்டனை என்றாலும் பாராட்டாகவே நான் கருதுகிறேன். நீங்கள்...?

***

இயக்கத்தில் நடைபெறும் திருமணங்கள் ஆரம்பத்தில் இலச்சினையுடன் உள்ள கடிதத் தலைப்புகளிலேயே பதிவு செய்யப்பட்டன. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த இன்னார் இன்னாரைத் திருமணம் செய்து கொள்கிறார் என்று வெறும் வசனமாகத்தான் இவை இருந்தன. முடிவில் பதிவாளர் மணமகன், மணமகள் பெயர் குறிப்பிட்டு வெளிவரும். இதனை போராட்ட இலட்சியத்துக்கு வலுச்சேர்க்கும் விதத்தில் கேட்பதற்கு உணர்வுபூர்வமாக மாற்றி வடிவமைத்தவர் புதுவை அண்ணாதான்.

மாவீரர்களுக்கெனத் தனிச் சுடலை என்று ஆரம்பித்தபோது முதலில் ஒருவரின் வித்துடலை தீ மூட்டி எரித்ததை காணொலியில் கண்ணுற்ற தலைவர் நாங்கள் இனி புதைப்போம் என முடிவெடுத்தார். அந்த முடிவை அடியொற்றி "மாவீரர் துயிலும் இல்லம்" எனப் பெயரிடவேண்டும் என்று அப்போதைய யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ராஜனிடமும் தேசியத் தலைவரிடமும் குறிப்பிட்டவர்இவர்தான். கார்த்திகை விளக்கேற்றல் பாணியில் தீபமேற்ற வேண்டும் என்ற முன்மொழிவை வைத்தவரும் இவரே.

மாவீரர் நாள் தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் மாவீரரின் பெற்றோரும் போராளிகளுமாக இணைந்து பாடக் கூடிய விதத்தில் ஒரு பாடலை உருவாக்கவேண்டும் என்று அப்போதைய மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் ஜெயா முன்மொழிந்தபோது தலைவர் இவரை நோக்கினார். கையைப் பொத்திக் கட்டை விரலை உயர்த்தி சம்மதம் தெரிவித்தார் இவர். இன்றும் தமிழ் மக்களின் உணர்வுகளோடு ஒன்றித்துவிட்ட இப்பாடல் கேட்கும் ஒவ்வொரு தடவையும் கண்ணீரை வரவழைக்கும். முதலில் 1992 மாவீரர் நாள் பிறக்கும் வேளையில் கோப்பாய் துயிலும் இல்லத்தில் ஒலி பரப்பப்பட்ட அதேசமயம் இதனைப் பாடியவரான வர்ணராமேஸ்வரன் மேடையில் நின்றும் இதனைப் பாடினார். அந்த உணர்வுகளை விவரிக்க வார்த்தைகளில்லை. அடுத்தநாள் அப்பாடலின் ஒலிப்பேழையை என்னிடம் தந்து இப்பாடலைக் கேட்கும்போது ஒவ்வொரு வரிக்கும் (விடயத்துக்கும்) உங்கள் மனதில் தோன்றியதை அப்படியே எழுதுங்கள் என்று என்னிடம் சொன்னார். அந்தக் கட்டுரை வெளிச்சம் இதழில் வெளியானது. போராட்ட வரலாறு சம்பந்தப்பட்ட பல கட்டுரைகள் வெளிச்சத்தில் வெளியாகின. அதாவது வரலாற்றைப் பதிவு செய்வதில் அதீத அக்கறை காட்டினார். கேணல் கிட்டுவின் வீரச்சாவு பற்றிய செய்தி கிடைத்ததும் பாடகர் சிட்டுவை வரவழைத்தார்.


"தளராத துணிவோடு களமாடினாய்..", என்று தொடங்கும் முதல் நான்கு வரிகளை எழுதிவிட்டு, சிட்டுவைப் பாடச்சொன்னார். சிட்டு பாடியதும் அந்தக் கணத்தில் ஏற்பட்ட உணர்வுகளில் அடுத்த நாலு வரிகள் சிட்டு பாடுதல் என அந்த நிகழ்வு தொடர்ந்தது.

இதன் பின்னரே இசையமைக்கப் பாடலைக் கொடுத்தார். உலகில் வேறெங்காவது இவ்வாறான உணர்வுபூர்வமான நிகழ்வுகள் நிகழ்ந்திருக்குமா என்பது சந்தேகமே! ஈழநாதத்தின் ஆண்டுவிழாக்கள், எனது மகளின் பரதநாட்டிய அரங்கேற்றம் முதல் சகல நிகழ்வுகளிலும் இவரது பங்கேற்பு இருந்தது. எல்லாத் திட்டமிடல்களிலும் இவரது ஆலோசனை வழிகாட்டுதல் இருந்தன. எந்த சுப நிகழ்வுகளையும் கலகலப்பாக மாற்றும் வித்தகர் இவர். எங்களது வாழ்நாளில் இவரது பங்கு ஒரு கட்டுரைக்குள் அடக்க முடியாதது. மகளின் பரதநாட்டிய அரங்கேற்றத்தில் இவர் சொன்ன விடயம் இன்று சொன்னதுபோல இருக்கிறது. "அருணாவின் கால்கள் ஆடியதை விட இந்த நிகழ்வுக்காக காக்கா அண்ணை ஓடினதுகூட...".

***

நாங்கள் மரணிக்கும் வரை இவரது நினைவுகள் எமது நெஞ்சில் நிலைக்கும். தற்காலத்தில், சிறீலங்கா வான்படை யாழ். நகரில் கண்காட்சியினை நடத்துகிறது. இது சம்பந்தமாக அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் அருமையான நினைவூட்டல் கட்டுரையொன்றை எழுதியுள்ளார். யுத்த காலத்தில் கிளிநொச்சியைச் சேர்ந்த ஒரு கவிஞர் இன்னொரு கவிஞரின் பெயரைக் குறிப்பிட்டு (தனது ஊரின் பெயரையும் சுருக்கமாக இணைத்திருப்பவர்) "இவர் ஆரண்ணை?" என்று கேட்டார். இக்கேள்விக்கு புதுவையண்ணாவின் பதில் இவ்வாறிருந்தது.

*"இந்தச் சிறீலங்கா வான்படை இருக்குதே அது பல இடங்களிலயும் குண்டு போட்டது. அதால கன சனம் செத்துப் போச்சுது. அது சில சமயம் பீக் குண்டு போட்டது. பிறகு நல்லூருக்க ரக்கொண்டந்து போட்டது. அந்தப் பாக்கொண்டு பாடினவன்தான் இவன்"*



எனது மகளின் பரதநாட்டிய அரங்கேற்றம் முதல் சகல நிகழ்வுகளிலும் இவரது பங்கேற்பு இருந்தது. எல்லாத் திட்டமிடல்களிலும் இவரது ஆலோசனை வழிகாட்டுதல் இருந்தன. எந்த சுப நிகழ்வுகளையும் கலகலப்பாக மாற்றும் வித்தகர் இவர்.



## ஒரு சொல் சொல்ல வா...

அன்புச் சுனைகளிலே
அழுத கண்ணீர் ஆறாகி
என்பு மச்சையெல்லாம்
தமிழமுதை ஊறவைத்த
சன்னக் கவிஞனிவன் சமர்கண்ட போராளி
எண்ணக் கருவில் எல்லாம்
எமையாளும் சொல்வேந்தன்
வில்லில் தமிழ்பூட்டி சொல்லைச் சரமாக்கும்
வித்தையறிவித்த நம் வியாசன்.

புலியோடு வரியாகினாய் - எங்கள்
தலையோடு தோழாகினாய்
தமிழ்க் கவியோடு நீ எங்கள்
காலத்தின் குரலாகினாய்

தலைகோதும் விரல்கள் உனது
தோள் தட்டும் கைகள் உனது
இரவோடு நெஞ்சை வருடும்
பாட்டெல்லாம் நீ தந்தது.

வன்னிமயில் அகவும்
கோலக்குயில் ஒலியும்
கோர்வையாக்கி உந்தன் சொல்லாக்கினாய்
வானில் இடி முழங்க
வாரியெடுத்து உந்தன்
எண்ண விளக்கிவிட்டு பாட்டாக்கினாய்
சொன்ன சொல்லில் எங்கள் சோகம் தகர்க்கு மந்த
உண்மை உணருமட்டும் சொல்தீட்டினாய்

மாண்ட பேர்க்கு எல்லாம்
மாலையேற்றி எங்கள்
மாண்பு சொன்னவன் நீ
ஆண்ட பேரினத்தின்
அறத்தைப் பறைசாற்றி
வீரம் விதைத்தவன் நீ
ஊரே அழுகிறது உன்னை அழைக்கிறது
ஒரு சொல் சொல்லவா

கைகோர்த்து உந்தன்
கவிதையோடு நடந்துவர
உள்ளங்கைச் சூட்டில்
உதிரமெல்லாம் உணர்வெரியும்
ஆவியடங்கி இந்தப்
பூமியிலே என்மேனி
ஊனழுகிக் கலந்தாலும் உயிர் பூக்கும்
நீ தந்த தமிழுணர்வு காயாகும்
கனியாகி இளவாழை நெஞ்சமெல்லாம் கருத்தெறியும்
உன்னுணர்வு உந்த ஒருநாள் விருத்தெரியும்
வேங்கை மீண்டும் கருக்கொள்ளும்
அடர்ந்த வனம் அதிர்ந்து புழுதி தெறிக்கவொரு
புரவி வருமளவும் பொறுத்திருக்கும் விழி
அடைகாக்கும் இதயபூமி..

**லக்ஷ்மன் குலசிங்கம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்ந்தினம்



○ இராகவன்

பாகம் 2

32

நவண்ணா காலமை வெள்ளெண எழும்பி பெலத்த சத்தத்தில படிப்பான். அப்ப அரைத் தூக்கத்திலயி ருக்கிற என்ர காதிலயதுவிழும். அவன் படிக்கிற ஸ்ரைல் வி.என்.மதியழகன் ரீ.வி.யில செய்தி வாசிக்கிற மாதிரியே இருக்கும். அதை ஒவ்வொரு நாளுங் கேட்டுக் கேட்டு எனக்கே சில விசயங்கள் பாடம் வந்திட்டுது.

குறிப்பாக மகாவிஷ்ணுவின் தசாவதாரங்களை நவண்ணா ஒரு வாய்ப்பாடு போல 'மச்ச கூர்ம நரசிம்ம வராக வாமன பரசுராம பலராம ராமகிருஷ்ண கல்கி' எண்டு சொல்லுவான். அது எனக்கும் தண்ணிபட்ட பாடா வந்திட்டுது. இப்பிடிக் கன விசயங்கள் அவன் விடியப்புறம் படிக்கிறதை அரைத்தூக்கத்தில கேட்டுக் கேட்டே எனக்குப் பாடம் வந்திட்டுது.

காலப்போக்கில நான் நவண்ணாவோட பழகத் தொடங்கினன். என்ர அண்ணராக்கள் அவனை நவம் எண்டு கூப்பிடுறதால நானுமவனை நவம் எண்டுதான் கூப்பிடுவன். அவனுக்கும் எனக்கும் பதினைஞ்சு வயது வித்தியாசமிருக்கும். ஆனால் ஒரு நாள் பாத்து அவன் அதுக்காகக் கோபிச்சதேயில்லை. பதிலுக்கு ஒரு சிரிப்பு, அவ்வளவுதான்.

எங்கட அம்மாக்கு முன்னால அவனை நவம் எண்டு நான் கூப்பிட்டால்தான் பிரச்சினை வரும். "டேய் உன்ர வயதென்ன? அவன்ர வயதென்ன? நவம் எண்டு கூப்பிடாதை. அவன் என்ன உனக்கு மச்சானே?

நவண்ணா எண்டு கூப்பிடடா" எண்டு பேசுவா. அதால அவவுக்கு முன்னால மட்டும் நவண்ணா எண்டு கூப்பிடுவன். அவ இல்லையெண்டால் பிறகென்ன பழையபடி நவந்தான். நவண்ணா வீட்டுச் சுவரில நிறையப் படங்கள் தொங்கும்.

இப்பவும் அந்தப் படங்களில இரண்டு மட்டும் ஞாபகத்திலயிருக்கு. ஒரு படம் அமர்ந்த மீசையோட (வெள்ளை) தோளில நீலத்துண்டு போட்டு வெள்ளைச் சேர்ட்டோட பொக்கற்றில கண்ணாடிக் கூடும் பேனையும் வைச்சிருக்கிற ஒராளின்ர படம். அதை முதல்ல பாக்கேக்குள்ள "இது ஆரடா நவம்?" எண்டு கேட்டன். "அண்ணா" எண்டு சொன்னான். "ஆற்ற அண்ணா?" எண்டு திருப்பிக் கேட்டான். அவன் விழுந்து விழுந்து சிரிச்சிட்டு என்ர சொக்கில செல்லமாய் நுள்ளிப் போட்டு "இவற்ற முழுப்பெயர் சி.என்.அண்ணாத்துரை. எக்கச்சக்கமான படிப்பாளி. இங்கிலீசும் அந்த மாதிரிக் கதைப்பர் " எண்டு சொன்னான். மற்றப் படத்தைப் பற்றி அடுத்த கிழமை சொல்லுறன்.

(தொடரும்)

# பால் குடித்த பிள்ளையார்

○ கோகுலராகவன்



சில வியாதிகள் எங்கிருந்து பரவுகின்றன என்று யாராலும் கண்டுபிடிக்க முடியாது.

வியாதி என்பது நோய்தான்.

ஆனாலும் நான் சொல்லும் வியாதி, 'எல்லோரும் ஒன்றை நோக்கி ஓடுதல் அல்லது ஒருவர் செய்வதை தாமும் செய்ய விளைதல்' இதுவும் ஒருவகை வியாதிதான்.




1991 இல் பிள்ளையார் பால் குடித்த கதை ஒரு வியாதியாகப் பார்க்கப்படவேண்டியதுதான். பி.பி.ஸி.யில் அப்போதைய அறிவிப்பாளராக இருந்த ஆனந்தி இது பற்றி ஆய்வு செய்து செய்தியாகவும் தந்திருந்தார்.

இது இந்தியா, தமிழ்நாட்டில் எங்கேயோ ஒரு கோவிலில் "எட நம்ம பிள்ளையார் பால் குடிக்கிறாப்பல" என்றவாறு தொடங்கியது.

இதை மெதுவாக யாழ்ப்பாணம் நோக்கியும் நகர்த்தினார்கள்.

"எடி எங்கட பிள்ளையாரும் பால் குடிக்கிறாராமடி."

என்ற பின் பல பிள்ளையார் கோயில்கள் பரவச பக்தர்களினால் நிரம்பி வழிந்தன.

கையில் பால் போத்தல்களோடு பக்த கோடிகள் அலையத்தொடங்கினர்.

"என்ரை பாலைப் பிள்ளையாருக்கு குடுங்கோ ஐயா" கெஞ்சத் தொடங்கியவர்களும் உண்டு. இதிலும் போட்டி.

கோமுகையால் பால் வழிந்தோடி வீதியெங்கும் பரவிக்கிடந்து புளித்து மணக்கத் தொடங்கியது. பிள்ளையார் பால் குடிக்கிறாரா? இல்லையா?

மனதில் சந்தேகம் குடிகொண்டிருந்தது.

சிறிய கரண்டியால் பருக்கிய பால் மெதுவாக வழியும்போது பார்க்கையில் அது குடிப்பது போலவே இருக்கும். ஆனால் பால் முழுவதும் கீழே வீணாக வழிந்தோடிக் கொண்டிருந்தது என்பதை சனங்கள் உணர நீண்ட நாள் எடுத்திருந்தது . நான் ஒரு கோவிலில் இதைப் பார்க்கலாம் என்று நாலைந்து இளசுகளோடு போனேன். நல்ல காலம் பால் கொண்டு போகவில்லை. அங்கும் அதே நிலைமைதான் .

அதிலே ஒரு பக்தர்.

"இவ்வளவு காலமும் பக்தி ஒண்டும் இல்லாத பேயனாக வாழ்ந்திட்டன். இண்டைக்குத்தான்ரி கடவுள் இருக்கிறதை நான் நம்பிறன்ரி "

என முத்தாய்ப்பு வைத்தார்.

அவருக்கு மட்டும் பிள்ளையார் வாயைத் திறந்து பால் குடித்துக் காட்டினாரோ என்னவோ.? உள்ளூரில் இருந்த பிரபல்யம் இல்லாத கோவில்களும் ஒரு பிரபல்யத்தை தேடும் விதமாக இதனைச் செய்யத் தொடங்கின. இதற்கிடையில், பிற கோயில் நிர்வாகிகள் 'தங்கள் மவுசு போகப்போகுதே' என்று தவித்துப்போய் பரிவாரப் பிள்ளையாருக்குப் பாலைப் பருக்கத் தொடங்கினர்.

பால் மாடு வளர்க்கும் வீட்டுக்காரர் படலையில் சனம் திணறியடித்து "அண்ணை அரைப்போத்தல் பால் எடுக்கலாமோ?"

"இண்டைக்கில்லை."

பால்காரர் நாயகனாகி விட்டார்.


பால்காரர் வீட்டில் கோழிக்கறி காய்ச்சப் பட்டிருக்கலாம்.

கோழிக்கறி மணத்த ஞாபகம் இருக்கு.

இதில் பரிகசிக்க எதுவுமில்லை.

ஆன்மீகம் தொடர்பான ஞானம் இல்லாத தன்மையே காரணமாகிறது.

> வியாதி என்பது நோய்தான். ஆனாலும் நான் சொல்லும் வியாதி, 'எல்லோரும் ஒன்றை நோக்கி ஓடுதல் அல்லது ஒருவர் செய்வதை தாமும் செய்ய விளைதல்' இதுவும் ஒருவகை வியாதிதான். 1991 இல் பிள்ளையார் பால் குடித்த கதை ஒரு வியாதியாகப் பார்க்கப்பட வேண்டியதுதான்.



"நட்ட கல்லை சுற்றி வந்து நாலு புஷ்பம்
சாற்றியே சுற்றிச் சுற்றி வந்து
முணுமுணுக்க சொல்லும் மந்திரம் ஏதடா !
சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ?
நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்"

இது சிவ பக்தரான சிவவாக்கியரின் தனிப்பாடல். இதில் பக்தி எப்படி இருக்கவேண்டும் என்ற உள்ளடக்கம் ஆழமானது.

மெய்யுணர வேண்டியது.

இப்போது இலங்கையில் இன்னொரு வியாதி பரவத்தொடங்கி இருக்கிறது.

அதை அடுத்த தொடரில் கதைப்பமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் கைவண்ணம்


## மாணவர்களே!

நீங்களும்
உங்கள் கைவண்ணங்கள்,
ஆக்கங்களை அனுப்பலாம்.

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555
Sanjeevi@uthayan.com



க.அனாகா
தரம். 1A
மானிப்பாய் ஏஞ்சல்
சர்வதேச பாடசாலை



கி.யதுசன்
தரம். 8
G.T.M.S




றெ.றக்ஷனா
தரம். 10E
யா/ சுண்டுக்குளி
மகளிர் கல்லூரி

## பூக்கள்

பூக்கள் பூக்கள் பூக்கள்
நாம் செய்த பூக்கள்
பல வண்ணப் பூக்கள்
அழகான பூக்கள்

**பா.துபிஷென்,**
தரம் - 1
மானிப்பாய் சோதி வேம்படி
வித்தியசாலை



எஸ்.ஹன்சிகா
தரம். 7D
யா/ இந்து மகளிர்
கல்லூரி




றெ.றக்ஷனா
தரம் - 10E
யா/ சுண்டுக்குளி
மகளிர் கல்லூரி

## கல்வி

கல்வி என்பது கடல்
அதைக் கற்றுக்கொடுப்பது
தொழில் அல்ல தவம்
நம்பிக்கை கைவிட்டாலும்
நீ கற்ற கல்வி எங்கு சென்றாலும்
கைவிடாது

கல்வி எனும் கற்கண்டு
உன் வாழ்வை
கற்பக விருட்சம் போல்
வளரச் செய்யும்
கல்வி என்பது வெறும்
மூன்றெழுத்துத்தான்
ஆனால் மனிதர்களின்
தலையெழுத்தை மாற்றும்
எழுத்து

**சி.திவ்யதர்ஷி**
தரம்-06
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி



அ.விக்னேஸ்,
தரம் - 6
யா/மகாஜனக்
கல்லூரி.

# விடாமுயற்சி வெற்றிக்கு வழி

முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை என்று சொல்வார்கள். நம்மால் இது நிச்சயம் முடியாது என்று எண்ணும் கடினமான காரியங்களைக்கூட திரும்பத் திரும்ப விடாமுயற்சியுடன் செய்தால் கட்டாயம் வெற்றி அடைய முடியும். அது எமக்கு மேலும் நம்பிக்கையை ஊட்டும்.

தோமஸ் ஆல்வா எடிசன் சொல்கிறார், "ஒரு தோல்வி ஏற்பட்டால் மேலே முயற்சி செய்யாமல் இருப்பது தான் எமது பலவீனமே. இன்னுமொருமுறை முயற்சி செய்து பார்ப்போமே எனும் எண்ணம்தான் வெற்றிக்கு நிச்சயமானவை என்று.

புத்தகங்களைத் தொடர்ந்து படித்து வந்தால் பல அறிஞர்களின் பொக்கிஷங்களை நம்மால் அறிய முடியும். நாம் எல்லாம் படித்து முடித்து விட்டோம் என்று எண்ணுவது சுலபம். ஆனால் கற்றது கைம்மண்ண ளவுதான் என்று புத்தகச் சுரங்கங்களைத் தோண்டத் தோண்டப் புரியும்.

ஒவ்வொரு சாதனையாளரும் ஆரம்பத்தில் எவ்வளவு சோதனைகளை சந்தித்திருக்கிறார்கள்! அரசியல், ஆராய்ச்சி, இலக்கியம், இசை என்று எந்தத் துறையிலும் சரித்திரப் புகழ் பெறுவதற்கு முன்னால் எத்தனை முறை தோல்வியைத் தழுவியிருக்கிறார்கள் என்பதும் தெரியும். நமக்கு வெற்றிகள் வந்து சேர்வதற்கென்று தனியாக ஒரு நேரம் எதுவும் இல்லை. விடாமுயற்சியோடு செயற்படுகின்றவர்களிடத்தில் எந்த நேரத்திலும் வெற்றிகள் வந்து சேரும். சிகரங்கள் காத்திருக்கின்றன – சிகரங்களை எட்ட நீங்கள் தயாராகுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org